
# யூன்

சீனச் சிறையில் பாடுகளும் அற்புதங்களும்



டேவிட். ஜி. ஹன்ட்

# யூன்

## சீனச் சிறையில் பாடுகளும் அற்புதங்களும்

## டேவிட். ஜி. ஹன்ட்

தமிழாக்கம்:

சகோ. K. செல்வின் தங்கதுரை

# பொருளடக்கம்

முன்னுரை

1 யூனைக் கவர்ந்த இயேசுவின் சுகமளிக்கும் வல்லமை 1

2 வேதாகமத்திற்காகத் தவிப்பும் ஜெபமும் 7

3 ஊழிய அழைப்பு 15

4 கிறிஸ்துவுக்காக சிறையில் நொறுக்கப்பட்டார் 31

5 மரண தண்டனைக் கைதியின் மனமாற்றம் 45

6 அபிஷேகிக்கப்பட்ட ஊழியம் 59

7 உபத்திரவ காலம் 73

8 சிறையிலிருந்து ஆச்சரியமாகத் தப்பிச் செல்லுதல் 79

9 உலகிற்கு ஒரு தூதுவர் 85

# முன்னுரை

1984ம் ஆண்டு சீன அதிகாரிகளால் சகோதரர் யூன் கைது செய்யப்பட்டபொழுது மற்ற கிறிஸ்தவர்களை அடையாளம் காட்ட மறுத்ததுமின்றி அவர் தன்னுடைய பெயரைச் சொல்ல மறுத்து தன்னை "பரலோக மனிதன்" என்று மாத்திரம் சொன்னார். அப்பொழுதிருந்தே அவர் "பரலோக மனிதன்" என்றே அழைக்கப்பட்டார்.

மிகுந்த தாழ்மையும், தேவனுடைய உண்மையான ஊழியக்காரனு மாகிய இவர் தன்னுடைய வாழ்க்கையைக் குறித்தோ, தான் அடைந்த பாடுகளைக் குறித்தோ தன் மூலமாக நடந்த அற்புதங்களைக் குறித்தோ பேசி தன் பக்கமாகக் கவனத்தைத் திருப்பி மனிதர்களால் வரும் மகிமையை அவர் சிறிதேனும் விரும்புகிறதில்லை. பரலோகத்தி லிருந்து மனிதனாக வந்த இயேசு கிறிஸ்துவை மேன்மைப் படுத்துவது மாத்திரமே அவருடைய ஒரே ஆழ்ந்த விருப்பம். இந்த புத்தகத்தில் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கும் அனைத்து காரியங்களும் இயேசுகிறிஸ்துவின் பரலோக பிதாவுக்கே கனத்தையும் மகிமையையும் கொண்டுவருவதாக அமைய வேண்டு மென்பதே சகோதரர் யூன் அவர்களின் விருப்பம்.

நான் சகோதரர் யூன் அவர்களிடமிருந்து கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அவர் அனுபவித்த கொடிய பாடுகளைப் பற்றியும், தேவனோடு, அவருடைய விசுவாச நடக்கை பற்றியும், அவருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் தேவனுடைய பெரிய வல்லமை வெளிப்பட்ட தன்மை பற்றியும் அறிந்தபொழுது முதலாவதாக நான் என்னுடைய சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தேன். சீனாவில் தேவனுடைய ஊழியத்திற் காக முற்றிலும் வித்தியாசமான வகையில் பணியாற்ற வேண்டும் என்று தீர்மானம் எடுக்க நான் உணர்த்தப்பட்டேன், உற்சாக மளிக்கப்பட்டேன்.

இப்புத்தகத்தை நீங்கள் வாசித்த பின்னர் நீங்களும் நிச்சயமாக அப்படிப்பட்ட உணர்வடைவீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் சீனாவை முன்பு பார்த்ததுபோல் நிச்சயமாக அதே பார்வையுடன் பார்க்கமாட்டேன்.

உலகசேவை ஊழியம் **(WORLD SERVE MINISTRIES)** என்ற நிறுவனம் சீனாவில் கடந்த 20 ஆண்டுகளாக ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக சீனாவில் இன்னும் அதிக ஊக்கத்தோடு ஊழியம் செய்வதற்கான ஒரு பற்றுக்கோல் தேவை என்பதை நாங்கள் உணர்ந்தோம். தேவனுடைய மகா பெரிய கிருபையால் அந்த பற்றுக்கோலை நாங்கள் கண்டுகொண்டோம். இலட்சக்கணக்கான விசுவாசிகளைக் கொண்ட "மறைவாக இயங்கிவரும் சபைகள்" **(UNDERGROUND CHURCHES)** அநேகம் இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து செயல்படுகிற நல்ல தலைவர்கள் அங்கே இருக்கின்றனர். ஆகவே இப்படிப்பட்டத் தலைவர்கள் மூலமாக சபைகளுக்கு சேவை செய்யவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தோம். தேவனுடைய ஊழியத்தைச் செய்வது எவ்வளவு பெரிய சிலாக்கியம்." "நாங்கள் உங்களுக்கு எப்படி உதவி செய்யலாம்" என்று கேட்பதில் எவ்வளவு மகிழ்ச்சி.

நீங்கள் இந்த புத்தகத்தைப் படிக்கும்பொழுதே தேவனிடத்தில் ஒரு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருளும்படி தயவு செய்து கேளுங்கள்.

டேவிட். ஜி. ஹன்ட்
தலைவர், உலகசேவை ஊழியம்.

# 1

# யூனைக் கவர்ந்த இயேசுவின் சுகமளிக்கும் வல்லமை

## தாழ்மையான துவக்கம்

சகோதரர் யூன், 1974ம் ஆண்டு தன்னுடைய 16வது வயதில் ஆவிக்குரிய பயணத்தைத் துவக்கினார். தான் மிகவும் அன்புகூர்ந்த தன்னுடைய தகப்பனார் வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டு மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். உலகமே தலைகீழாக புரண்டுவிட்டதுபோல உணர்ந்தார். அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் இந்த வியாதியை குணமாக்க முடியாதென்றும் விரைவில் மரித்துவிடுவார் என்றும் சொன்னார்கள். முழுக்குடும்பமே மனமுடைந்த நிலையிலாயிற்று. அவரை மிகவும் நேசித்த காரணத்தால் தங்களுடைய உடைமைகளையெல்லாம் விற்று மருத்துவத்திற்குச் செலவழித்து அவரைக் குணப்படுத்த முயற்சித்தார்கள். ஆனால் அவர்களது முயற்சிகள் எதுவும் பலனளிப்பதாகத் தெரியவில்லை. அவர் மரித்துக்கொண்டேயிருந்தார். இப்பொழுது அவர்களுடைய உடைமைகள் யாவும் விற்று முடிந்தன. நிலவரம் மிகவும் மோசமாயிற்று. வீட்டில் சாப்பாட்டிற்கே வழி இல்லாத நிலவரம் ஆயிற்று. குடும்பத்தினரின் சாப்பாட்டிற்கு யூன் வெளியே சென்று பிச்சை எடுக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

குடும்பத்தில் ஏற்பட்ட இந்த நெருக்கடி யூனின் தாயாருக்கு தாங்கமுடியாத பாரமாயிற்று. பாரத்தின் அழுத்தம் காரணமாக அவர் களுக்குத் தூக்கமே கிடையாது. குடும்பம் நொறுங்கிப் போய்விடுமோ என்ற எண்ணம் அவர்களை வெகுவாய் வாட்டியது. ஒருநாள் இரவு அப்படிப்பட்ட பாரத்தோடு படுக்கையில் அங்குமிங்குமாகப் புரண்டு கொண்டிருந்த வேளையில் திடீரென்று மிகத் தெளிவாக "இயேசு உன்னை நேசிக்கிறார்" என்று ஒரு சத்தம் கேட்டது. அப்படி சத்தம் கேட்ட மாத்திரத்தில் "ஆண்டவரே, என் மீது இரக்கமாயிரும்" என்று பதிலுரைத்தார்கள். யூனின் தாயார் ஆண்டவரை நோக்கி ஜெபித்து பல ஆண்டுகள் ஆயிற்று. 1949ம் ஆண்டு ஏற்பட்ட பெரும் புரட்சிக்கு முன்பு 1940ம் ஆண்டிலேயே அவர்கள் கிறிஸ்தவளாக மாறிவிட்டார்கள். புரட்சியின் காரணமாக சீனாவின் ஆட்சி கம்யூனிஸ்ட்டுகள் வசம் ஆயிற்று. ஒரு இரவிலேயே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. கிறிஸ்தவ மிஷனரிகள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். உள்ளூர் போதகர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதன் பின்னர் எந்த விசுவாசிகளுடனோ கிறிஸ்தவர்களுடனோ தொடர்பு கிடையாது. ஜெபம் இல்லாமல் போயிற்று. அநேக கிறிஸ்தவர்களைப் போலவே இவர்களும் விசுவாசத்தை இழந்தார்கள். கடைசியாக அவர்கள் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஒருவரையே திருமணம் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## அற்புத சுகமும் நம்பிக்கையும்

தனக்கன்பான கணவன், தனது பிள்ளைகளுக்கன்பான தகப்பன் மரித்துக் கொண்டிருந்ததை அவர்களால் தாங்கமுடிய வில்லை. நடு இரவில் தூங்கிக்கொண்டிருந்த தன்னுடைய ஆறு பிள்ளைகளையும் எழுப்பினார்கள். தன்னுடைய பிள்ளைகளை நோக்கி "இயேசு உன்னை நேசிக்கிறார் என்ற ஒரு சத்தத்தை நான் கேட்டேன். இயேசு ஒருவரே அப்பாவின் சுகத்திற்கு நம்பிக்கை" என்ற கடைசி கட்ட நிலவரத்தைச் சொன்னார்கள்.

ஆறு பிள்ளைகளும் தகப்பனாரின் படுக்கையைச் சுற்றி நின்று ஆண்டவரை நோக்கி கதறினார்கள். "இயேசுவே எங்கள் அப்பாவை சுகமாக்கும், இயேசுவே எங்கள் அப்பாவை சுகமாக்கும்" என்று அதையே மீண்டும் மீண்டும் தொடர்ந்து கேட்டு ஜெபித்தார்கள். யூன் முன்பு அறியாத அந்த தேவனை நோக்கி ஜெபித்தார். "ஆண்டவரே, எங்களுடைய ஜெபத்தைக் கேட்டு பதிலளித்து எங்கள் அப்பாவுக்கு சுகமளிப்பீரானால் நான் உம்மையே பின்பற்றி உம்மையே சேவிப்பேன்" என்று தேவனுக்கு வாக்களித்து ஜெபித்தார். மறுநாள் காலை ஒரு அற்புதம் நடந்தது. பலமாதங்கள் படுக்கையிலிருந்து எதுவுமே சாப்பிட முடியாத நிலவரத்திலிருந்த அவர்களது தகப்பனார் எழுந்து உட்கார்ந்தார். அவரால் சாப்பிட முடிந்தது. ஒரு வாரத்திற்குள்ளாக அவர் பூரண சுகமடைந்தார். யூனுடைய குடும்பத்தில் தேவன் தமது வல்லமையான கிருபையை அளிக்கத் தெரிந்து கொண்டது அதுவே துவக்கமாயிருந்தது.

யூனுடைய பெற்றோர் தேவனுக்கு மிகுந்த நன்றியுள்ளவர்களாயிருந்தனர். தேவன் அவர்களுக்கருளிய அற்புதத்தை தங்களது எல்லா உறவினர்களுக்கும் அண்டைய கிராமங்களிலுள்ள உறவினர்களுக்கும் சொல்ல விரும்பினார்கள். அந்த நாட்களில் கிறிஸ்தவ கூட்டங்கள் எதுவும் நடத்தமுடியாது. ஆகவே உறவினர்கள் யாவருக்கும் பிள்ளைகள் மூலம் சொல்லியனுப்பி அவர்கள் வீட்டில் ஏதோ குடும்ப நிகழ்ச்சி போன்று ஒரு கூடுகை நடத்த ஏற்பாடு செய்தனர். ஆனால் பிள்ளைகளிடத்தில் எதற்காக அந்த கூடுகை என்ற விபரம் சொல்லி அனுப்பாததால் ஒருவேளை யூனின் தகப்பனாரின் அடக்கம் சம்பந்தப்பட்ட காரியமாக இருக்குமென எதிர்பார்த்து அநேகர் சாவுவீட்டிற்குச் செல்லும் பொழுது உடுத்தும் உடையிலே சென்றனர். ஆனால் யூனின் தகப்பனார் வாசலில் நின்று எல்லோரையும் வரவேற்பதைக் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். உறவினர்கள் யாவரும் வீட்டினுள் ஒன்றுகூடி அமர்ந்தனர். மரணப்படுக்கையிலிருந்த யூனின் தகப்பனார் இயேசுவின் நாமத்தினாலே சுகத்தைப் பெற்றுக்

கொண்டார் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டதும் மிகுந்த ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தனர். எல்லோரும் முழங்கால் படியிட்டு அற்புத சுகமளித்த ஆண்டவரை ஏற்றுக்கொண்டு நன்றி செலுத்தினார்கள்.

## யூனின் தணியாத ஆர்வம்.

யூனின் தாயார் பல ஆண்டுகளுக்கு முன்பாக அறிந் திருந்த இயேசுவை குறித்த காரியங்களை மிகுந்த சிரமத்தோடு நினைவுபடுத்தி தன்னுடைய குடும்பத்தாருக்கும் உறவினர் களுக்கும் இயேசுவைக் குறித்துப் போதிக்க ஆரம்பித்தார்கள். யூன் இயேசுவைக் குறித்து அநேக கேள்விகளை கேட்க ஆரம்பித்தார். இயேசு என்ற பெயரை அவர் முன்பு கேட்டதே இல்லை. ஆனால் இயேசு எவ்வளவு பெரிய வல்லமையுள்ளவர் என்பதை இப்பொழுதுதான் அவர் அறிந்து கொள்ள முடிந்தது. இந்த இயேசு யார் என்று இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள விரும்பிக் கேட்டார். ஆனால் யூனின் தாயாருக்கு அவருடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்ப விளக்கிச் சொல்ல முடியாவிட்டாலும் அடிப்படையான சில காரியங்களைச் சொன்னார்கள். **“இயேசு தேவனுடைய குமாரன். அவர் இப்பூலோகத் திற்கு வந்து முழு உலகத்தின் பாவங்களையும் தன்மேல் ஏற்றுக் கொண்டு பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை தன்மேல் ஏற்றுக் கொணடு அவர் மரித்தார்”** என்று, அவர்களுக்கு போதிய படிப்பறிவு இல்லாத காரணத்தால் நினைவிலிருப்பதைக் கொண்டு சொன்னார்கள். அப்படிச் சொல்லும் பொழுது சீன புராணத்தோடு இணைத்தே சிலவற்றைச் சொன்னார்கள். அப்.1:8–ல் சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து யூனுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். “பரிசுத்த வலுசர்ப்பம் (HOLY DRAGON) உன் மீது வரும்போது நீ பலனடைந்து உன்னிலுள்ள வியாதி எல்லாம் எடுத்து எருசலேமிலே புதைத்துப் போடுவாய்” யூதேயா என்ற சொல் சீன மொழியில் சோயா வயலுக்கு (SOY FIELD) இணையான வார்த்தையாகும். “இயேசுவின் சுவிசேஷத்தை நீ சோயா வயலுக்கு கொண்டு செல்ல

வேண்டும்.'' ''பூமியின் கடைசி பரியந்தம்'' என்ற சொல்லுக்கு இணையாக சீன மொழியிலுள்ள சொல்லைக் கொண்டு ''நீ சுவிசேஷத்தை நரகத்திற்கும் எடுத்துச் சென்று பிரசங்கிக்க வேண்டும்.'' இதைக் கேட்ட யூனுக்கு யாவும் விநோதமாகத் தோன்றியது. ''இயேசு விட்டுச் சென்ற வார்த்தைகளின் தொகுப்பு ஏதாவது இருக்கின்றனவா? நானே அவற்றை வாசித்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று யூன் கேட்டார். (இன்னும் கூட சீனாவில் மறைவாகயிருந்து செயல் படும் சபைகளில் யூன் போன்ற தலைவர்கள் சொல்லுகிற காரியம் அவர்களது முதலாவது தேவை வேதாகமங்கள் என்பதுதான். யூனுடைய அனுபவங்களை தேவனுடைய வார்த்தைகளோடு இணைத்து ஆயிர முறைக்கும் மேலாக அநேகருக்கு சொல்லியாயிற்று. ஆனாலும் வாய்மொழியாக அறிந்து கொள்வதை விட அவர்களாகவே தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு இன்னும் அதிகமதிகமாக அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஆண்டவரை வெகுவாய் நேசிக்கிறார்கள்.)

யூனின் தாயார் இயேசுவைக் குறித்து அவர்கள் அறிந்த சொற்பமான காரியங்களை யூனோடு பகிர்ந்து கொண்டாலும் யூனுடைய வாழ்க்கையில் இயேசுவின் மீது அது ஒரு பேரார்வத்தை உண்டாக்கிற்று.

யூன் ஆரம்பத்திலேயே இந்த தேவனுக்கு மிகவும் கடமைப்பட்ட வராகவும், மதிப்பளிப்பவராகவுமிருந்தார். அவருக்கு சேவை செய்வ தாகவும் ஒப்புக் கொடுத்திருந்தார். யூன் தன்னுடைய தாயாரிடம் அவர் களுக்கு முன்பு தெரிந்த விசுவாசிகளை அணுகி இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் அடங்கிய புத்தகம் கிடைக்குமா என்று விசாரித்துத் தனக்கு வாங்கித் தர முயற்சிக்கும்படி கேட்டார். அவருடைய தாயார் முன்பு கிறிஸ்தவ ஊழியராக இருந்த ஒருவரை நினைவில் கொண்டு அவர் எப்படியேனும் வேதாகமத்தை மறைத்து வைத்திருப்பார் என்று திட்டவட்டமாக எண்ணினார்கள். அவர்

யூனுடைய வீட்டிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் வசிக்கிறார். யூனும் அவருடைய தாயாரும் அவரைக் காண்பதற்காகச் சென்றனர். அவரது வீட்டை யடைந்து கதவைத் தட்டினார்கள். அந்த வீட்டிலுள்ள அந்த மனிதர் வெளியே எட்டிப்பார்த்தார். யூன் ஒரு கிழிந்த சட்டையணிந்து காலில் செருப்புமில்லாமல் ஒரு பிச்சைக்காரனைப் போல காட்சியளித்தார். அவருடைய தாயார் அவரைப் பார்த்து உங்களுடைய வேதாகமத்தைத் திறந்து பார்ப்பதற்கு தயவுசெய்து எங்களை அனுமதிக்க வேண்டும். அதிலுள்ள சில பகுதிகளை நாங்கள் தியானிப்பதற்காக எழுதி நகல் எடுத்துக் கொள்ளுகிறோம் என்று கேட்டார்கள்.

## மாவோவின் சிறிய சிவப்பு புத்தகம்

சீனாவின் கலாச்சார புரட்சியின்போது இது நடந்தது. மாவோவின் சிறிய சிவப்பு புத்தகம் **(MAO'S LITTLE-RED BOOK)** தவிர யாரும் எந்த புத்தகத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாவோவின் புத்தகம் தவிர யாரும் எதையும் படிக்கக் கூடாது. இதை மீறி யாராவது வேறு புத்தகம் வைத்திருந்தால் அது பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்படும். அதை வைத்திருந்த வீட்டின் முழு குடும்பத்தாரும் கிராமத்தின் நடுவிலுள்ள பொது இடத்தில் வைத்து அடிக்கப்படுவார்கள். ஆகவே அந்த மனிதர் யூனுக்கும் அவருடைய தாயாருக்கும் வேதாகமத்தைக் காட்டவே இல்லை. பெரிய ஏமாற்றமடைந்தவர்களாக வெறும் கையோடு இருவரும் வீட்டிற்குத் திரும்பினர். அவர்கள் திரும்புவதற்கு முன்பாக யூனைப்பார்த்து அந்த மனிதர் என்னிடத்தில் வேதாகமம் இல்லை. **"வேதாகமம் பரலோகத் திலிருந்து வந்த பரிசுத்த புத்தகம். உனக்கு வேண்டுமானால் நீ பரலோகத்தைத்தான் கேட்க வேண்டும். உண்மையிலேயே இந்த பரலோக புத்தகம் உனக்கு வேண்டுமானால் நீ வீட்டிற்குச் சென்றவுடன் நீ ஜெபித்து இயேசுவினிடத்தில் கேட்க வேண்டும். ஏனென்றால் அது அவருடைய புத்தகம்"** என்று சொல்லியனுப்பினார்.

# 2

# வேதாகமத்திற்காகத் தவிப்பும் ஜெபமும்

## ஜெபத்தில் விடாமுயற்சி

யூன் வீட்டிற்குத் திரும்பினார். "நீ ஜெபித்து இயேசுவி னிடத்தில் கேட்க வேண்டும் ஏனென்றால் அது அவருடைய புத்தகம்" என்று அவர் சொன்னதை மனதில் இருத்திக் கொண்டு ஒவ்வொருநாளும் விசுவாசத்தோடு தேவனிடத்தில் வேதாகமத்தைத் தனக்கும் தரும்படி கேட்க ஆரம்பித்தார். ஒரு மாதமாயிற்று ஜெபத்தில் ஒரு பதிலும் கிடைக்கவில்லை. சோர்வடைந்தவராக 6 மைல் தூரத்திலுள்ள அந்த மனிதரின் வீட்டிற்குச் சென்றார். "ஐயா, ஒவ்வொரு நாளும் வேதாக மத்தைக் கேட்டு நான் ஜெபிக்கிறேன். எனக்கு கிடைக்க வில்லை. உங்களிடத்திலுள்ள வேதாகமத்தை நான் பார்த்து விட்டுத் தந்து விடுகிறேன்" என்று கெஞ்சி கேட்டார். ஆனால் அந்த மனிதரோ தன்னிடம் வேதாகமம் இருக்கிறது என்று ஒத்துக் கொள்ளக்கூட தைரியமற்றவராக **"நீ வீட்டிற்குப் போய் உபவாசமிருந்து ஜெபம் பண்ணு. ஒரு குழந்தை தாயினி டத்தில் ஒரு பொருளைக் கேட்டுத் தொடர்ந்து விடாப் பிடியாக கேட்பதுபோல கேள். ஒரு நாள் பெற்றோர் அந்தக் குழந்தை விரும்பியதைக் கொடுக்கிறது போல நீ விடாப் பிடியாய் ஜெபத்தில் கேட்டால் (PERSISTENT PRAYER) இயேசு நிச்சயமாக அவருடைய புத்தகத்தைத் தருவார்"** என்று சொன்னார். உபவாசத்தைக் குறித்த காரியங்களையும் சொல்லி யூனை அம்மனிதர் அனுப்பிவிட்டார்.

யூன் அப்போதிருந்தே உபவாசிப்பதற்குத் தீர்மானம் செய்தார். ஒரு நாளைக்கு ஒரு கோப்பை அரிசிக் கஞ்சித் தண்ணீர் தவிர வேறு எதுவும் சாப்பிடுவதில்லை என்று தீர்மானம் செய்தார். ஒவ்வொரு நாள் மாலை வேளையிலும் தன்னுடைய படுக்கையின் அருகிலுள்ள கல்லின் மீது முழங்காலி லேயே நிற்பார். 100 நாட்கள் வரை உபவாசத்தில் விடாப்பிடி யாயிருந்து ஜெபம் பண்ணினார். சில நாட்களில் ஜெபம் பண்ணும் போதே தூக்கம் வந்து அப்படியே தரையிலேயே தூங்கி விடுவார். ஒரு நாள் ஜெபத்தில் மிகத் தெளிவான ஒரு தரிசனத்தைக் கண்டார்.

## உங்கள் வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள்

யூன் அந்த தரிசனத்தில் தான் ஒரு பழைய உடைந்த சிறிய தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு ஒரு கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கண்டார். அந்த கிராமத்திற்கு தன் குடும்பத்தாருக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்குவதற்காக சென்று கொண்டி ருந்தார். தள்ளுவண்டி சரியான நிலையில் இல்லாததால் அதைத் தள்ளி கொண்டு செல்வதே பெரும்பாடாக இருந்தது. அதோடு அந்த கிராமம் மலைப்பாங்கான இடமாகவும் செல்லும் வழி உயரமான வழியாகவும் இருந்தது. நீண்ட நாட்கள் உபவாசத்தின் காரணமாக யூன் மிகவும் பலவீனமாக இருந்தபடியால் மிகுந்த கஷ்டத்தோடு மேலே தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருந் தார். கிராமத்தைச் சென்றடைவதற்குச் சற்று முன்பாக மூன்று மனிதர்கள் அதே வழியில் மேலேயிருந்து கீழேநோக்கி ஒரு நல்ல தள்ளுவண்டியையும் தள்ளிக் கொண்டுவந்தனர். அதில் அநேகவிதமான பொருட்கள் இருப்பதையும் கண்டார். மூன்று பேருக்கும் மத்தியில் ஒரு வயது முதிர்ந்த மனிதர் வந்து கொண்டிருந்தார். அவர் வெறும் தள்ளு வண்டியோடு வந்த யூனைப் பார்த்து "உனக்கு சாப்பிடுவதற்கு ஏதாவது வைத்திருக் கிறாயா?" என்று அவருக்குக் கொடுக்கும் நோக்கில் பரிவோடு கேட்டார். அவர் கேட்ட மாத்திரத்தில் யூன் அழ ஆரம்பித்தார்.

ஏனெனில் அவருடைய வாழ்நாளெல்லாம் எப்பொழுதும் சாப்பாட்டிற்கு கேட்டுதான் வாங்கியிருக்கிறார். இதுவரை யாரும் தானாக முன்வந்து சாப்பாடு கொடுப்பதாகச் சொன்னதில்லை. ஆகவே அது அவரது இதயத்தைத் தொட்டது. எனவே தான் அழுதுவிட்டார். "என்னிடத்தில் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை என் குடும்பத்தார் யாவருக்கும் உணவுப் பொருள் வாங்குவதற்கு அந்த கிராமத்திற்குச் செல்கிறேன்" என்று சொன்னார். அந்த முதியவர் மற்ற ஒரு மனிதனைப்பார்த்து "இந்த பையனுக்கு அந்த சிவப்பு தாளால் கட்டியிருக்கும் பொட்டலத்தை எடுத்துக் கொடு" என்று சொன்னார். அந்த மனிதர் அதை எடுத்துக் கொடுத்தார். அந்த மனிதர்களைக் கூர்ந்து கவனித்த போது தன்னுடைய கிராமத்திற்கு அருகாமையிலுள்ள கிராமத்தில் வசிப்பவர்கள் என்று அறிந்து கொண்டார். ஆனால் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று தெரியாது.

நீண்ட தாடிவைத்திருந்த அந்த முதியவர் "இது ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் போதுமென்கிற அளவுக்கு நீ சாப்பிடவே முடியாது" என்று சொன்னார். யூன் மிகவும் ஏழையான மனிதர். மிகுந்த பசியோடிருந்தார். ஆகவே அந்த பொட்டலத்திற்குள் கையைவிட்டு ஒரு ரொட்டியை எடுத்து ஒரு கடிகடித்தார். அது வேதாகமமாக மாறிவிட்டது. யூனின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. தனது மகிழ்ச்சியின் நிறைவை அடக்கிக் கொள்ள முடியாதவராய் "இயேசுவே உமக்கு நன்றி, ஆண்டவரே, இந்த ஜீவ அப்பத்தை எனக்குத் தந்தீரே, நன்றி. சதா காலமும் உமக்கே நான் சேவை செய்வேன்" என்று சத்தமிட்டு வாக்களித்தார். அந்த நேரத்தில் திடீரென்று விழித்தெழுந்தார். தனது படுக்கைக்கு அருகிலுள்ள கல்லில் முழங்காலில் நின்று கொண்டிப்பதை உணர்ந்தார். அப்பொழுது விடியற்காலை 4 மணி. வீட்டிலுள்ள மற்ற யாவரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

"இயேசுவே, என்னுடைய வேதாகமத்தை எங்கே?" என்று சத்தமிட்டு அழுதார். அழுகுரல் கேட்டு அனைவரும் விழித்

தெழுந்தனர். அவருடைய தாயார் வேதாகமத்திற்காக உபவாசித்து ஜெபத்ததில் இவன் பித்து பிடித்தவனாகிவிட்டானே என்று எண்ணி துக்கமடைந்தார்கள். "வேதாகமத்திற்காக ஏன் இப்படி அழுகிறாய்?" என்று யூனின் தாயார் கேட்டார்கள். யூன் தான் கண்ட தரிசனத்தை விவரித்துச் சொன்னார். "அது உன்னுடைய கற்பனையாக இருக்கும்" என்றார்கள். "என்னுடைய வேதாகமத்தை எங்கே?" என்று மீண்டும் கத்த ஆரம்பித்துவிட்டார். அவன் தகப்பனார் எழுந்து அவர் அருகில் வந்தமர்ந்து "உண்மையிலேயே இவன் பைத்தியமாகிவிட்டான். ஆண்டவரே, எனக்கு மீண்டும் புற்று நோயைத் தந்துவிட்டு அதற்கு பதிலாக இவனுடைய மனநோயை சுகமாக்கும், ஆண்டவரே, யூன் கேட்கிறதை அவனுக்குக் கொடும்" என்று சொல்லி அவர் அழ ஆரம்பித்துவிட்டார்.

## பரலோகத்திலிருந்து வேதாகமம்

இப்படித் தேம்பித்தேம்பி அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் யாரோ கதவைத் தட்டுகிற மெல்லிய சத்தம் கேட்டது. அது யூனின் காதில் மிகத் தெளிவாகக் கேட்டது. மற்றவர்கள் அழுது கொண்டிருந்த படியால் கதவுதட்டும் சத்தம் அவர்கள் காதில் கேட்கவில்லை போலும். வாசலருகே நின்று யூனின் பெயரைச் சொல்லி கேட்கிற சத்தத்தை யூன் புரிந்து கொண்டார். அது தரிசனத்தில் வந்து தன்னோடு பேசிய அதே மனிதரின் சத்தம்தான். ஆகவே கதவைத் திறப்பதற்கு முன்பாகவே "எனக்கு வேதாகமம் கொண்டுவந்திருக்கிறீர்களா? என்று கேட்டார். அப்பொழுது காலை மணி 4 இருக்கும். யூன் "எனக்கு ரொட்டி கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று மீண்டும் கேட்டார். "ஆமாம்" என்றார் அந்த மனிதர். "அது வேதாகமம் தானே?" என்று ஆர்வத்தோடு கேட்டார். "ஆமாம்" என்றார் அந்த மனிதர்.

யூன் வேகமாகச் சென்று கதவைத் திறந்தார். யூன் தரிசனத்தில் கண்ட அதே இரண்டு மனிதர்களைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அவர்களிடத்தில் அதே பையிருந்தது.

சிவப்பு தாளால் சுற்றியிருந்த அதே பொட்டலமிருந்தது. அவர்களை உள்ளே வரும்படி யூன் அழைத்தார். உள்ளே வந்ததும் அந்த சிவப்பு பொட்டலத்தை யூனிடம் கொடுத்தார்கள். யூன் அந்த பொட்டலத்தைப் பிரித்தார். அதனுள்ளிருந்த வேதாகமத்தைக் கண்டு அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. வேதாகமத்தைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். அப்படியே முழங்கால் படியிட்டு ஆண்டவருக்கு நன்றி கூறினார். "இந்த புத்தகத்தை பசியோடிருக்கும் ஒரு குழந்தை தனக்குப் புசிக்கக் கொடுத்ததை எப்படி ஆர்வமாக உட்கொள்ளுமோ அதே போல விலையேறப்பெற்ற இந்த புத்தகத்திலுள்ள வற்றை நான் உட்கொள்வேன்" என்று தேவனிடத்தில் தீர்மானம் செய்து கொண்டார். "தேவனுடைய வார்த்தைகளுக்கான இந்த பசியை நான் எப்பொழுதும் காத்துக் கொள்வேன். உமக்கே நான் சேவை செய்வேன்" என்று பொருத்தனை செய்துகொண்டார்.

சிலநாட்களுக்குப்பின், தனக்கு வேதாகமம் கொடுத்த அந்த மனிதர் சீனாவில் நடந்த கலாச்சார புரட்சியின்போது கிறிஸ்துவின் மீது ஆழ்ந்த விசுவாசம் கொண்டிருந்த காரணத் திற்காக செத்து போய்விட்டார் என்று கருதும் அளவுக்கு சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார் என்று யூன் அறிந்தார். இந்த வேதாகமத்தை யூனுக்கு கொடுப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக அவர் ஒரு தரிசனம் கண்டாராம். அதில் மறைத்து வைத்திருக்கும் வேதாகமத்தை பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு வாலிபனுக்கு கொடுக்க வேண்டும் என்று அவருக்குச் சொல்லப்பட்டதாம். ஆனால் ஆண்டவர் சொன்ன தற்கு கீழ்படிந்து செய்ய அவருக்கு ஐந்து மாதங்கள் ஆகிவிட்ட தாம். பல ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு இடத்தில் பத்திரப் படுத்தி புதைத்து வைத்திருந்த வேதாகமத்தை தோண்டி எடுத்தாராம். மற்றுமொரு சகோதரனையும் உதவிக்கு அழைத்துக் கொண்டு ஆண்டவர் காட்டிய வாலிபனுடைய வீட்டைக் கண்டுபிடித்து விலையேறப்பெற்ற அந்த வேதாகமத்தை யூனுக்குக் கொடுத்தாராம்.

## 12
## வேதாகமத்தோடு ஒன்றிவிட்ட யூன்

வேதாகமம் கிடைத்த மாத்திரத்தில் அவசர அவசரமாக அதைப்படிக்க ஆரம்பித்தார். சீக்கிரமே அவர் ஒரு பிரச்சனையைச் சந்தித்தார். யூன் மூன்றாவது வகுப்புவரைதான் படித்திருந்தார். அதுவும் மிகவும் எளிமையோடு எழுதப்பட்டிருந்தால்தான் அவருக்கு விளங்கும். ஆனால் வேதாகமம் பழைய முறைமையின் படி கடினமானதாகவே இருந்தது. சில வார்த்தைகளைக் கூட அவரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் ஒரு சொல்லகராதியின் உதவியோடு மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அநேக வார்த்தைகளை விளங்கிக் கொள்ள முடிந்தது. வெவ்வேறு குணநலன்களைக் கொண்ட வேதகால மனிதர்களை விளங்கிக் கொள்ள முடிந்தது. ஆகவே வார்த்தைக்கு வார்த்தை சொல்லகராதியையும் புரட்டி மிகுந்த ஜெபத்தோடும், சிரமத்தோடும் வேதாகமத்தைப் படித்தார்.

வேதாகமத்திலிருந்து அவருக்கு பெரிய வெளிப்படுத்தல் கிடைக்காவிட்டாலும் அது தேவனுடைய வார்த்தை என்ற விசுவாசத் தோடும் அதன் காரணமாக அவற்றிற்கு பெருமதிப்பையும் கனத்தையும் கொடுத்தார். அவர் செல்லுமிடமெல்லாம் வேதாகமத்தை மறைத்து எடுத்து செல்வார். அவர் ஏதேனும் வேலை செய்து கொண்டிருந்தாலும், சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் வேதாகமம் அவருடைய சரீரத்தை ஒட்டியே இருக்கும். தூங்கும் பொழுதும் வேதாகமத்தைக் கூடவே வைத்திருப்பார். அவர் விழித்திருக்கும் நேரமெல்லாம் வேதத்தைப் படித்துக் கொண்டே இருப்பார். உண்மையிலேயே அவர் தேவனுடைய வார்த்தைகளை விழுங்கிக் கொண்டே இருந்தார். இரண்டே வாரத்தில் ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தல் வரை வாசித்து முடித்தார். மத்தேயு சுவிசேஷம் முழுவதையும் ஒருமாதத்திற்குள்ளாக மனப்பாடம் செய்து முடித்தார். அதைத் தொடர்ந்து மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களை நினைவில் கொள்ளும் அளவுக்கு மீண்டும் வாசித்தார். அதன் பின்னர் அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதையும் மனப்பாடம் செய்யத் தொடங்கினார். அதை

மனப்பாடம் செய்து கொண்டிருக்கும் பொழுதுதான் பரிசுத்த ஆவியானவர் அவரோடு பேசினார். அப்போஸ்தலர் 1:8 வசனத்தை படித்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த இடத்தில் நிறுத்தி ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். அப்பொழுது யூன் தனது தாயாரிடம் சென்று அம்மா, நீங்கள் முன்பு எனக்கு பரிசுத்த வலுசர்ப்பம் உன்மீது வரும்பொழுது நீ பெலனடைவாய் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதாகச் சொன்னீர்களே, அது அப்படி அல்ல "பரிசுத்த ஆவி" வரும் பொழுது என்பதுதான் சரி. என்று சொல்லி அந்த வேதப்பகுதியைச் சுட்டிக் காட்டினார். "சோயா வயலுக்கும், நரகத்திற்கும் சென்று பிரசங்கிப்பது அல்ல யூதோயாவிலும், உலகத்தின் கடைசிபரியந்தமும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது" என்று தனது தாயாரிடத்தில் சொன்னார். அவர் அதை ஆழ்ந்து படித்தாலும் கூட அதை அவர் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே தனது தாயாரிடத்தில் சென்று "அம்மா, பரிசுத்த ஆவி என்றால் என்ன என்பதை எனக்கு விளக்கிச் சொல்லமுடியுமா? என்று கேட்டார். பரிசுத்த ஆவியைக் குறித்து அவர்களுக்கு யாரும் முன்பு சொல்லித்தராதபடியால் அவர்களால் யூனுக்கு ஒன்றும் சொல்லமுடிய வில்லை. ஆனால், "உனக்கு வேதாகமம் வேண்டுமென வைராக்கியமாய் ஜெபித்தாய் அல்லவா? அதே போல பரிசுத்த ஆவியைக் கேட்டு ஏன் நீ ஜெபிக்கக் கூடாது?" என்று ஆலோசனை சொன்னார்கள். அதை அவர் ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியைத் தான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அது மிகவும் தேவையானது என்பதையும் மனதில் தீர்மானம் செய்து கொண்டார்.

வேதாகமத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தனை வைராக்கியமும் ஆர்வமும் கொண்டிருந்தாரோ அதே பற்றிஎரியும் வாஞ்சையோடு பரிசுத்த ஆவி தன்மீது இறங்க வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தார். அவரது படுக்கைக்கு அருகாமையிலுள்ள கல்லின் மீது முழங்கால்படியிட்டு பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்க ஆரம்பித்தார். அவர் அருகில் ஒரு மெழுகுவர்த்தி எப்பொழுதும் எரிந்து கொண்டேயிருக்கும். அவ்வப்போது வேதத்தை எடுத்து வாசிப்பார். பின்னர் ஜெபிப்பார். இப்படியாகச் செய்து கொண்டிருந்தார்.

# 3

# ஊழிய அழைப்பு

## அழைப்பின் தேவ சத்தம்

ஒருநாள் அப்போஸ்தலர் 12ம் அதிகாரத்தை மனப்பாடம் செய்து கொண்டிருக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவரின் அழைப்பின் சத்தத்தை மிகவும் தெளிவாகக் கேட்டார். "யூன் உன்னை மேற்கேயும், தெற்கேயும் எனக்குச் சாட்சியாக அனுப்பப்போகிறேன்" என்று சொன்னார். அந்த சத்தம் தனது தாயார் தனக்கு அருகாமையில் நின்று சொல்வது போன்ற சத்தமாயிருந்தது. ஆகவே தூங்கிக் கொண்டிருந்த தனது தாயாரை அவசர அவசரமாக எழுப்பினார். அவரது தகப்பனாரும் எழுந்துவிட்டார். தனது தாயாரிடத்தில் "நீங்கள் என்னை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் போ என்று இப்பொழுது சொன்னீர்களா?" என்று கேட்டார். "நான் அப்படி எதுவுமே சொல்லவில்லையே, போய் தூங்கு" என்று சொன்னார்கள். அவர் மீண்டும் படுக்கைக்குச் சென்றுவிட்டார். படுத்து அப்பொழுதுதான் தூங்கியிருப்பார். மீண்டும் அதே சத்தத்தைக் கேட்டார். "மேற்கேயும் தெற்கேயும் நீ எனக்கு சாட்சியாக இருப்பாய்".

யூன் மீண்டும் எழுந்தார். தன் தாயாரிடத்தில் சென்று தான் மீண்டும் கேட்ட சத்தத்தைக் குறித்துச் சொன்னார். அவரது தாயார் மிகவும் சோர்வடைந்தவர்களாக "உண்மையிலேயே நீ பித்துப்பிடித்தவன் போல்தான் ஆகிவிட்டாய்!" என்று சொன்னார்கள். அவர் மீண்டும் படுக்கைக்குச் சென்றார்.

காலை சரியாக 4 மணிக்கு திடீரென்று விழித்தெழுந்தார். தன்னுடைய முதலாவது தரிசனத்தில் தாடிவைத் திருந்து, தனக்கு வேதாகமம் கொடுக்கும்படி மற்ற இரண்டு மனிதர் களுக்குச் சொன்ன அதே முதியவரை மீண்டும் தரிசனத்தில் கண்டார்."என்னுடைய நாமத்தினாலே நீ மேற்கேயும் தெற்கேயும் சென்று பிரசங்கிக்க வேண்டும், எனக்கு நீ சாட்சியாக இருக்க வேண்டும்" என்று சொன்னார். மேலும் அவருடைய தரிசனத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருப் பதைக் கண்டார். அவர்களுக்குத் தன்னுடைய சாட்சியை எழுந்து சொல்லும்படி அவர் சொன்னார். ஒரு மனிதர் அவருடைய அறைக்குள் நுழைந்தார். அவருக்கு வயது 24 இருக்கும். அவர் கிழிந்த நீள கால்சட்டை அணிந்திருந்தார். அதின் பின்புறத்தில் வேறு ஒரு நிறத்திலான துணியால் ஒட்டுப்போட்டுத் தைக்கப்பட்டிருந்தது. "நாங்கள் மூன்று நாட்களாகத் தொடாந்து ஜெபித்துவருகிறோம். நீங்கள் எங்கள் கிராமத்திற்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்" என்று அந்த மனிதர் கேட்டுக் கொண்டார். அவர் தன்னுடைய பெயரையும் அந்த கிராமத்தின் பெயரையும் சொன்னார். கட்டாயம் தவறாமல் வரவேண்டு மென மிகவும் வலியுறுத்திச் சொன்னார். யூன் மறுநாள் அவர்களுடைய கிராமத்திற்கு வருவதாகச் சொன்னார்.

மறுநாள் காலை யூன் தன்னுடைய தாயாரிடம் "ஆண்டவர் என்னை அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக மேற்கேயும் தெற்கேயும் போகச் சொல்லியிருக்கிறார்" என்று சொன்னார். அவருடைய தாயார் அதை நம்பவில்லை. ஆனால் யூன் மிகவும் பிடிவாதமாக இருந்தார். "இன்று நான் சுவிசேஷத் தைப் பிரசங்கிக்க மேற்கே செல்லுகிறேன். ஆனால் தெற்கே யிருந்து 24 வயதுள்ள ஒரு மனிதர் வருவார் அவர் 3 தினங் களாக யூன் வந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டுமென ஜெபித்ததாகச் சொல்லுவார். அவர் வந்தால் வீட்டிலே காத்திருக்கச் சொல்லுங்கள் நான் வந்து அவரோடு செல்லுவேன்" என்று சொன்னார். இவற்றையெல்லாம் கேட்ட

யூனின் தகப்பனார் யூனைக் குறித்து மிகவும் கவலையுற்றார். உண்மையிலேயே அவனுக்கு மூளைக்கோளாறு ஆகி விட்டதோ என்று புலம்ப ஆரம்பித்தார். ஆனால் யூன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்வதற்கு மிகவும் தீர்மானமாயிருந்தார். அவர் முழங்கால் படியிட்டு ஜெபித்துவிட்டு பிரசங்கிக்கும்படி புறப்பட்டார்.

## நீ எனக்கு சாட்சியாயிருப்பாய்

மேற்கு திசையில் அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடைய மனதில் சிறிது சஞ்சலம் ஏற்பட்டது. ஆகவே ஆண்டவரிடம் "ஆண்டவரே நீர் மேற்கே போகும்படி சொன்னீர். நான் போகிறேன். ஆனால் நீர் மேற்கே செல்லவேண்டிய கிராமத்தின் பெயரைச் சொல்லவில்லையே? நான் எங்கே போகவேண்டும்? என்று ஜெபித்தார். ஆனாலும் அதற்கு மேல் என்ன செய்வதென்று தெரியாமல் மேற்கு திசைநோக்கி நடந்துகொண்டேயிருந்தார். ஒரு சிறிய ஆற்றைக் கடக்க வேண்டியதிருந்தது. அதையும் கடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது பிரசங்கம் செய்கிற ஒரு மனிதரை யூன் சந்தித்தார். "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று அந்த மனிதர் கேட்டார். "நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க மேற்கே சென்று கொண்டிருக்கிறேன்" என்று யூன் பதிலளித்தார். உடனே அவர் அருகிலுள்ள கிராமத்து மக்கள் உங்களிடத்தில் வேதாகமம் இருப்பதாகவும் இன்று நீங்கள் வேதபாடம் நடத்தயிருப்பதாகவும் கேள்விப்பட்டதாகச் சொன்னார். அந்த மக்கள் நீங்கள் வந்து பிரசங்கிப்பதற்கு மூன்று நாட்களாக ஜெபிப்பதாகவும் சொன்னார். இதைக் கேட்டதும் யூனுக்குப் பெரிய சந்தோஷம். அதே மனிதர் திரும்பி யூனை அந்த கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். அந்தப்பகுதியில் அது அறுவடை காலமானபடியால் ஒவ்வொருவரும் தங்களது அறுவடையிலும் அறுவடை செய்த தானியங்களைக் கொண்டு செல்வதிலும் மிகவும் அலுவலாக யிருந்தார்கள். யூனை அழைத்துச் சென்ற அந்த மனிதர் கூடியிருந்த மக்களிடம் "நீங்கள் சுவிசேஷம் கேட்க யாருக்காக

ஜெபித்தீர்களோ அவர் இவர்தான்" என்று மிகுந்த ஆச்சரியத்தோடு அறிமுகப்படுத்தினார். அந்த மனிதர் தனக்கு அறுவடை சம்பந்தமான வேலை இருப்பதாகக்கூறி யூனை அங்கு விட்டுவிட்டு அவர் போய்விட்டார்.

பரலோக புத்தகம் வைத்திருக்கிற ஒரு மனிதர் தங்களுடைய கிராமத்திற்கு வந்திருக்கிறார் என்று கேள்விப் பட்டு அறுவடை வேலையில் மும்முரமாக இருந்த அந்த கிராமத்து மக்கள் அறுவடை வேலையை நிறுத்திவிட்டு உடனடியாக யூனிடம் வந்து கூடினார்கள். யூன், தேவனிடத் திலிருந்து மேற்கே சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்பதை அறிந்திருந்தாரே தவிர என்ன பேச வேண்டும் எப்படி சாட்சி பகர வேண்டும் என்று எதுவுமே அவருக்குத் தெரியாது. தன்னுடைய வேதாகமத்தோடு தரையில் உட்கார்ந்தார். அவரைச் சுற்றி மக்கள் அமர்ந்தார்கள். எப்படி ஆரம்பிப்பது என்றும் அவருக்கு புரியாமல் தனக்கு வேதாகமம் எப்படி கிடைத்தது என்றும் அதற்காக எவ்வளவாய் ஜெபித்தார் என்றும் அவர்களுக்குப் இந்த பரலோக புத்தகம் வேண்டு மானால் அதுபோன்று ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

கூடியிருந்த மக்கள் இந்த பரலோக புத்தகத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை எங்களுக்கு வாசித்து காட்டி விளக்கிச் சொல்லுங்கள் என்று கேட்டனர். அதோடு மட்டுமல்ல எங்களுக்கு பிரசங்கியுங்கள் என்று வலியுறுத்தினார்கள். யூனுக்கு பிரசங்கம் செய்து பழக்கமில்லை. எப்படிச் செய்வ தென்றும் தெரியவில்லை. கூடியிருந்த மக்கள் அவர் எப்பொழுது பிரசங்கத்தை ஆரம்பிப்பார் என்று அவரை ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். யூனுக்கு என்ன பிரசங்கிப் பது என்று அறியாமல் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார். யாருக்கும் அந்த பரலோக புத்தகத்தைத் தொடும் சுதந்திர மில்லை. யூனும் யாரையும் அதை தொடும்படியும் அழைக்க வில்லை. அவர் வேதாகமத்தை தன்னுடைய மார்போடு அணைத்தவராக அமர்ந்திருந்தார். என்ன செய்வதென்று

திகைத்திருந்த யூன் மத்தேயு சுவிசேஷத்தைத் தான் எவ்வாறு மனப்பாடம் செய்தார் என்றும் மனப்பாடம் செய்ததை அவர்கள் முன்பாகத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். கேட்பவர் களுக்கு எதுவுமே புரியவில்லை. என்ன சொல்லுகிறோம் என்று அவருக்குப் புரியாமல் மனப்பாடம் செய்ததை ஒப்புவித்துக் கொண்டிருந்தார். ஆனால் மனப்பாடமாகச் சொன்னதை ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டிருந் தார்கள். சுமார் பாதிநாள் முடிந்துவிட்டது. இதேதான் தொடர்ந்தது. யூனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏனென்றால் கூடியிருந்த மக்கள் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவே அவர் கண்களை மூடிக்கொண்டார்.

மத்தேயு சுவிசேஷம் முழுவதையும் ஒப்புவித்துவிட்டார். இன்னும் யாரும் எழும்பிப்போகவில்லை. ஆகவே அடுத்து அப்போஸ்தலர் நடபடி களை ஒப்புவிக்க ஆரம்பித்தார். ஒன்று கூட விடுபடாமல், மறக்காமல், தடையின்றி எல்லாவற்றையும் சொன்னார். மக்கள் இதையே கவனித்துக் கொண்டிருந் தார்கள். யூன் வேதாகம அடிப்படையிலான பாடல் ஒன்றை அவர்களுக்குப் பாடினார். யூன் பாடிய அந்தப் பாடலைக் கேட்டு அழ ஆரம்பித்துவிட்டனர்.

இதை முடித்தவுடன் யூன் அங்கிருந்து புறப்பட ஆயத்தமானார். "தயவு செய்து நீங்கள் போகாதீர்கள்" என கூடியிருந்த மக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். "நான் கற்றுக்கொண்ட அனைத்துமே உங்களோடு பகிர்ந்துகொண்டு விட்டேன். நான் போகவேண்டும்" என்று யூன் பதிலளித்தார். "நான் இன்னும் அதிகமாக மனப்பாடம் செய்துவிட்டு மீண்டும் உங்கள் மத்தியில் வந்து தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளுவேன்" என்று வாக்களித்து புறப்பட்டார். அந்த நேரத்தில் ஒரு சிறுமி வந்து "அடுத்து நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள். "நான் முதலாவது வீட்டிற்குச் செல்லவேண்டும். பின்னர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குத் தெற்கே செல்லவேண்டும்" என்று சொன்னார். "தெற்கே

என்றால் எந்த இடத்திற்கு நீங்கள் பிரசங்கிக்கப் போகிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள். தான் எந்த கிராமத்திற்குப் போகிறேன் என்பதையும் யார் தன்னை அங்கே அழைத்தது என் பதையும் சொன்னார். யாரை அழைத்து கூட்டம் நடத்த வேண்டும் என்று ஜெபித்த மக்களுக்கும் இந்த கிராமத்திலி ருந்து இன்னார் வந்து கூப்பிட்டால் நீ போ என்று யூனுக்கும் முன் அறிவித்து எல்லாவற்றையும் செம்மையாய் நடத்துகிறார் என்பதையும் எண்ணியபோது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. அழுதுகொண்டே "உங்களை எங்கள் கிராமத் திற்கு அழைத்தவர் என் மூத்த அண்ணன். எங்கள் கிராமத் திற்குத் தேவனுடைய வார்த்தை அனுப்பப்படவேண்டும் என்று அநேக நாட்களாக அவர்கள் ஜெபிக்கிறார்கள்" என்று சொன்னாள். அந்த கிராமத்தைவிட்டுப் புறப்படும்பொழுது 70 பேர் இயேசு கிறிஸ்துவின் மீது தங்களது முழு விசுவாசத்தையும் வைத்து அவரை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். இதைக் கேட்டு யூனுக்குப் பெரிய மகிழ்ச்சி.

## தெய்வீக நியமனம்

யூன் சீக்கிரமாகவே வீடு திரும்பினார். அவர் வீடு திரும்பும்பொழுது யூனின் தாயார் யூனை "சாமுவேல், சாமுவேல்" என்று அவருடைய கிறிஸ்தவப் பெயரைச் சொல்லி அழைத்தார்கள். அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. "அம்மா, இன்று விநோதமான பெயரால் அழைக்கிறீர்களே? என்று கேட்டார். "சிறிது நேரத்திற்கு முன்பு ஒரு மனிதர் இங்கே வந்தார். நீ சொன்னதுபோலவே அவர் மீண்டும் வருவதாகச் சொல்லி போயிருக்கிறார்" என்று சொன்னார்கள். அவரிடம் யூன் சொன்ன எல்லா காரியங்களையுமே அவருக்கு சொன்ன தாகவும் சொன்னார்கள். "அவர் இப்பொழுது எங்கே?" என்று யூன் கேட்டார். "அவர் புறப்பட்டுப் போய்விட்டார்" என்று சொன்னார்கள். "அம்மா, அவரை நான் வரும்வரை இங்கே இருக்கும்படி கேட்டுக்கொள்ள உங்களிடத்தில் சொன்னேனே. இப்பொழுது எனக்கு அந்த கிராமத்திற்கு வழி தெரியாதே?"

என்று மிகவும் அங்கலாய்த்தார். "இதைக் குறித்து நீ துக்கப்படவேண்டாம். நீ அந்த கிராமத்திற்குப் போவது குறித்து தேவனே முன்பு பேசிவிட்டார் என்ற காரியத்தை சொன்னமாத்திரத்தில் அவர் கிராமத்திற்குச் சென்று மக்களை கூடிவருவதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டுத் திரும்பி வருவதாகச் சொல்லி போயிருக்கிறார்" என்று சொன்னார்கள். இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அந்த மனிதர் வந்துவிட்டார். யூன் அந்த மனிதரிடம் "உங்களை நான் முன்பே பார்த்திருக்கிறேன்" என்று சொல்லி அவருடைய பெயரையும், ஊரின் பெயரையும் சொன்ன மாத்திரத்தில் அவர் தேவனுடைய ஆச்சரியமான நடத்துதலை எண்ணி அழ ஆரம்பித்துவிட்டார். அன்று மாலை நேரம் மிகவும் பிந்திவிட்டாலும் கூட தன்னுடைய மகனுக்கு தெய்வீக நடத்துதல் இருக்கிறது என்பதில் சந்தேகப்படாமல் அவர்கள் இருவரின் தலையிலும் கைவைத்து ஜெபித்து அந்த கிராமத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

அன்றைய நாளில் இரண்டாவது கூட்டமாக அந்த கிராமத்தில் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். வேதத்திலிருந்து மனப்பாடம் செய்திருந்த வசனங்களை மேற்கோள் காட்டியும் தேவன் அவருக்கு வெளிப்படுத்திக் கொடுத்திருந்த ஒரு பாடலையும் பாடி அவர்களுக்கு பிரசங்கித்தார். கூடியிருந்த மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் யூன் கூறிய காரியங்களை எழுதி குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அந்த பாடலை அவர்கள் எழுதிக் கொண்டார்கள். ஒருவன் உங்களை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவன் உங்களை உபத்திரவப்படுத்தினால் சந்தோஷப்படுங்கள். ஏனென்றால் உங்கள் பிதா அதினால் மகிமைப்படுத்தப்படுவார், அவர் மகிழ்ச்சியடைவார். யூதாசைப் போல தன் எஜமானைக் காட்டிக் கொடுக்கிறவர்களாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலான பாடல் அது. அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு காணப்பட்டார்கள். அதை விசுவாசித்த மக்கள் இந்த சுவிசேஷத்தை அந்தப் பகுதியிலுள்ள

எல்லோருக்கும் பிரசங்கிக்கப் போவதாக தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள். தீர்மானத்தின்படியே செய்யவும் ஆரம்பித் தார்கள். இதன் விளைவாக அந்தப் பகுதியில் பெரிய எழுப்புதல் ஏற்பட்டது.

இந்தக் காரியம் காவல்துறையினரின் காதுகளுக்கு எட்டிற்று. அவர்கள் அந்த கிராமத்தை வளைந்துகொண்டு கிறிஸ்தவர்களைப் பிடித்து காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். "இயேசுகிறிஸ்துவின் நாமத்தை உங்களுக்குக் கற்பித்தது யார்? இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது யார்?" என்று அவர்களைக் கேட்டார்கள். "நாங்கள் எங்கள் இயேசுவைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்" என்று மாத்திரம் உறுதியாகப் பதிலளித்தனர். போலிஸ் அவர்களை அடித்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தனர். "எங்களை இன்னும் அடியுங்கள். முகத்திலும் அடியுங்கள்" என்று முகத்தைக் காட்டினார்கள். சித்திரவதைகளின் மத்தியிலும் சிரித்தார்கள், மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்களை அடித்த காவலர்களே ஓய்ந்து போய்விட்டார்கள். "கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பித்துப்பிடித்து அலைகிறீர்கள்" என்று திட்டி வீட்டிற்கு அனுப்பிவிட்டனர்.

**"அவர் உங்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார்"**

யூன் தனது 16 வயதிலேயே பற்றி எரியும் அக்கினியைப் போல ஊழியத்தை ஆரம்பித்தார். துவக்க காலத்தில் அவர் பெரிய சபையின் தலைவர் அல்ல, சாதாரணமான ஒரு சுவிசேஷகன். வேதாகமத்தைக் குறித்த கல்வி அறிவு இல்லை. வேதாகமப் பள்ளியில் அவர் படித்தவரும் அல்ல. வேதத்தை மீண்டும் மீண்டும் வாசித்து அவரைத் தொடுகிற வசனங்களை ஆழ்ந்து தியானித்து வேத சத்தியங்களைக் கிரகித்துக் கொள்வார். தெய்வீக ஆலோசகரின் வழிநடத்துதலின் மூல மாகவே அவர் வேதத்தைக் கற்றுக் கொண்டார். அதிகாலையில் எழுந்திருந்து வேதத்தை வாசிப்பார். கற்றுக் கொண்ட

தேவனுடைய வார்த்தைகளைத் தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவார். கிறிஸ்தவ ஊழியக் காரர்களோடு அவர் பகிர்ந்து கொள்ளுகிற முக்கியமான காரியம் "**தேவனுடைய வார்த்தைகளிலிருந்து கற்றுக் கொண்டதை, நாம் மற்றவர்களுக்குப் போதிப்பதை உங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துங்கள்**" என்ற கோட்பாட்டைத்தான் வலியுறுத்திச் சொல்லுவார். இதுவே அவருடைய முக்கியமான போதனையாகயிருந்தது. அவர் போதிப்பது மாத்திரமல்ல போதிப்பதையே நடைமுறைப்படுத்தினார். மேலும் "வேதத்தை நாம் வாசிக்கும்பொழுது வாசித்ததை விசுவாசத்தோடு நாம் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் முக்கியமான காரியம். தேவன் என்னிடத்தில் ஏதேனும் சொல்லுவாரானால் அவர் என்ன சொல்லுவாரோ அதற்கு அப்படியே மனப் பூர்வமாகக் கீழ்ப்படிகிறேன். இயேசு கிறிஸ்து எங்கு சென்றாலும் அவரை மனப்பூர்வமாகப் பின்பற்றுகிற மனிதனின் சாட்சியே என்னுடைய வாழ்க்கையின் சாட்சி" என்று கூறுவார்.

### அழைப்பின் உறுதி

யூன் தன்னுடைய 16 வயதில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கப் புறப்பட்டபோது தேவனுடைய அழைப்பைக் குறித்த அறிவு மிகக்குறுகிய எல்லைக்குள்ளேயே இருந்தது. தன்னுடைய கிராமம் மற்றும் அண்டைய கிராமங்களில் மாத்திரம் அவர் போதித்துவந்தார். நடந்துபோகிற தூரத்திலுள்ள இடங்களுக்கு மாத்திரமே செல்லுவார். ஆனால் அவரது சுவிசேஷப் பணியின் ஓராண்டிற்குள்ளாக சுமார் 2000 மக்களை தேவனுக்குள் வழிநடத்தினார். தன்னுடைய 17வது வயதின் துவக்க காலத்தில் அநேக மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்கு யூன்தான் காரணம் என்றும் அவன்தான் ஒரு தலைவனாயிருக்கிறான் என்றும் காவல்துறையினர் கண்டுகொண்டனர். அதன் காரணமாக முதல் முறையாக காவல்துறையினர் அவரைக் கைது செய்தனர்.

தன்னுடைய 18,19 வயது காலத்தில் தேவன் அவருடைய ஊழியத்தின் எல்லையை விசாலமாக்கினார். தன்னுடைய மாவட்டத்தில் மாத்திரமல்ல, அண்டைய மாவட்டங்களுக்கெல்லாம் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மாத்திரமல்ல, கேட்கிற மக்களை ஒருங்கிணைத்து சபைகளை நிறுவினார். தன்னுடைய 20–வது வயதிலேயே ஆர்வமுள்ள சுவிசேஷ ஊழியர்களை ஒன்று திரட்டி ஊழியர்களுக்கான கருத்தரங்குகளையும் பயிற்சி முறைகளையும் நடத்த ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் அவரோடு இணைந்து செயல்பட மனிதபெலன் இல்லாதிருந்தது. ஆனால் ஊழியங்கள் வளரவளர தேவன் அநேக ஆர்வமுள்ள மனிதர்களைக் கொடுத்தார். அவர்களை அநேக இடங்களுக்கு அனுப்பவும் அங்கங்கே உள்ள சில பிரச்சனைகளைத் தீர்வு செய்ய அனுப்பவும் ஊழிய வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக இருந்தது. அவர்கள் மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பொறுப்பாளராக இருந்தனர். அது தவிர அங்கங்கே முன்பாகச் சென்று கூட்டங்களை ஒழுங்கு செய்யும் தன்னார்வத் தொண்டர்கள் அநேகர் இருந்தனர். ஒவ்வொரு ஊழியக்காரர் களும் ஒரு நாளைக்கு மூன்று கூட்டத்தை நடத்த வேண்டும் என்ற ஒழுங்கைக் கைக்கொண்டனர். இதை வாரத்தில் 7 நாட்களிலும் தவறாது செய்தனர். யூன் ஆராதனைகளை நடத்தும்பொழுது தேவன் அவருக்கு வேதத்திலிருந்து ஆச்சரிய மான வெளிப்படுத்தல்களைக் கொடுத்தார். பாடல்களை இயற்றும் திறனைக் கொடுத்தார். அவரோடு இணைந்து சுவி சேஷப்பணியிலிருக்கிற அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் இப்பாடல்களைக் கற்றுக் கொடுப்பார். அவர்கள் மற்ற கிறிஸ்த வர்களுக்குக் கற்றுக் கொடுப்பார்கள்.

யூன் ஒரு நல்ல சுவிசேஷகராக இருந்ததுபோலவே அவரோடு இணைந்து செயல்பட்ட எல்லா சுவிசேஷர் களுமிருந்தனர். முதல்முறையாக 1978ல் குளிர்காலத்தில் அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்தனர். நதிகளின் மத்தியில் உறைந்த பனிக்கட்டியை பிளந்து அந்த குளிர்ந்த தண்ணீரில் புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்

தனர். அந்த குளிர்காலத்தில் பெரும் எழுப்புதல் ஏற்பட்டதால், அப்பொழுதே அவர்கள் ஞானஸ்நானமும் கொடுத்தனர். ஒவ்வொருநாள் இரவு வேளைகளிலும் நதிகளில் விசுவாசி களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்கள்.

**சபைகளை ஒருங்கிணைத்தல்**

1980ம் ஆண்டு சுவிசேஷக ஊழியங்களின் தலைவரான ஷூ யூன் டிஜ் (XU YUN TZE) அவர்களுடைய தொடர்பு கிடைத்தது. அவருடைய இயக்கம் பின்னர் "மறுபடியும் பிறந்தோரின் இயக்கம்" என்ற பெயரில் இயங்கியது. அவரோடு இணைந்து சீனா முழுவதும் பயணம் செய்து சுவிசேஷப்பணி செய்யவும் அதன் விளைவாக சீனா முழுவதிலேயுமே சுவிசேஷத்திற்கு ஒரு திறப்பு ஏற்பட்டது. வீட்டு சபை இயக்கத் திற்கு (HOUSE CHURCH MOVEMENT) அதுவே துவக்க மாகவும் அமைந்தது. அதன் பின்னர் மற்ற கிறிஸ்தவ இயக்கங் களோடு தொடர்பு கிடைத்தது. 1949ம் ஆண்டு முதல் 1980 ஆண்டுவரை சீனாவில் தனிமனிதர்களின் அடிப்படையில்தான் சபைகள் இயங்கி வந்தன.

இவ்விரண்டு சகோதரர்களும் இணைந்து செயல்பட்டதின் காரணமாக சபைகளில் மூப்பர்களும் (ELDERS) உதவிக் காரர்களும் (DEACONS) நியமிக்கப்பட்டனர். 1982ம் ஆண்டுக் குள்ளாக சபை வெகுவாய் பரந்து வளர்ந்தது. ஆகவே சபை தொடர்பான ஊழியங்களை நல்ல திறனோடு செயல்படும் நோக்கத்தோடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. நான்கு பகுதிகளுக்கு (COUNTIES) யூன் தலைவராக நியமிக்கப்பட்டார். ஊழியத்தில் திறமையோடு செயல்பட இந்த அமைப்பு மிகவும் உதவியாக இருந்தது. துவக்கத்தில் லிங் அன் (LING AN) என்ற பெயரில் இயங்கினாலும் பின்னர் "மறுபடியும் பிறந்தோரின் இயக்கமாக" மாறிற்று. கிறிஸ்தவ இயக்கங்களிடையே பூரண ஐக்கியமும் சமாதானமும் இருந்தன.

அந்த நாட்களில் தலைவராக இருந்தவர்கள் வாலிபர்களாகவே இருந்தனர். ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்தவர்களாக இருந்தனர். தேவனுடைய அழைப்பின் அடிப்படையில்தான் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். வீட்டு சபைகள் உண்மையிலேயே மிகவும் திறமையுடன் செயல்பட ஆரம்பித்தன. யூன் 1974ல் தேவனுக்குள் வந்தாலும் அவர் ஒரு முதிர்ந்த கிறிஸ்தவராகக் கருதப்பட்டார். யூன் இளைஞராக இருந்தாலும் சபைவளர்ச்சியில் செயல்பட்ட அநேக முன்னணித் தலைவர்கள் யூனிடம் பயிற்சிபெற்ற மாணவர்களாக இருந்தனர். ஆகவே அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் ஊழியங்களில் ஈடுபட்டனர்.

1982ம் ஆண்டில் பிரதர் யூன் சீனாவில் குறிப்பிடத்தக்க மனிதராக மாறிவிட்டார். எப்படியெனில் எல்லா டெலிபோன் கம்பங்களிலும் யூன் போட்டோவுடன் காவல்துறையினரால் தேடப்பட்டுவரும் ஒரு குற்றவாளி என்று பிரகடனப்படுத்தி (WANTED CRIMINAL) அவரை அரசு சபையை மீறிய (OFFICIAL CHURCH) மதப்புரட்சியாளர் என்று விவரித்து சுவரொட்டிகளை வெளியிட்டனர். இந்த சூழ்நிலையின் காரணமாக யூன் அடிக்கடி தனது ஊழிய செயல்பாட்டு இடத்தை மாற்றிக் கொண்டே இருந்தார்.

## யூன் கைது

யூனின் 10 ஆண்டுகள் ஊழிய காலத்திற்குள்ளாகப் பலமுறை கைது செய்யப்பட்டார். சில வேளைகளில் அவர் கைது செய்யப்பட முடியாத அளவு தலைமறைவாகி நழுவி விடுவார். சிலவேளைகளில் கைது செய்யப்பட்டபின் காவல்துறையினரிடமிருந்து தப்பித்துமிருக்கிறார். அடிக்கடி இரவும் பகலும் தொடர்ந்து பலநாட்களுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் அநேக பாஸ்டர்களுக்கான பயிற்சி முகாம் ஒரு கிராமப்புரத்தில் நடைபெற்றது. பயிற்சி முகாமின் கடைசிநாள் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. மூத்த

தலைவர்கள் தொடர்ந்து தங்கள் ஜீவனை ஊற்றி நிகழ்ச்சிகளை நடத்தியபடியால் சோர்வடைந்துவிட்டார்கள். ஆகவே அன்று மாலை பிரசங்கம் செய்யும்படி யூனைச் சொல்லியிருந்தார்கள். யூனும் சோர்வாக இருந்தபடியால் பிரசங்க நேரம் வரை சிறிது தூங்கிவிட்டு வருவதாகவும் அதற்கு சற்று நேரத்திற்கு முன் எழுப்பும்படிச் சொல்லிவிட்டு போய்விட்டார்.

ஆராதனை நேரம் துவங்கியது. ஆராதனையின் சத்தம் அதிகமாக இருந்தபடியால் மேடையை ஒட்டியிருந்த விவசாயக் கருவிகள் வைக்கும் அறையிலிருந்து எழுந்து சோளத்தோட்டத்திற்குள்ளே போய் படுத்துத் தூங்கிவிட்டார். ஆனால் நடந்தது என்னவெனில் ஆராதனை வேளையில் பொது பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த (PUBLIC SECURITY BUREAU) காவல்துறையினர் மேடையிலிருந்து ஆராதனை நடத்திக் கொண்டிருந்த எல்லா பாஸ்டர்களை கைது செய்து அவர்களது வாகனங்களில் ஏற்றி காவல்நிலையத்திற்குக் கொண்டு சென்றுவிட்டனர். அன்று இரவு ஜெபத்தை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருப்பது யார் என்பது குறித்து தொடர்ந்து அவர்களைக் கேள்வி கேட்டுள்ளனர். அவர்களில் யாரோ ஒருவர் யூன்தான் பொறுப்பு என்று கூறிவிட்டார். அவர் எங்கே என்று விசாரிக்கையில் "அவர் அருகாமையில் எங்காவது தூங்கிக் கொண்டிருப்பார்" என்பதையும் சொல்லிவிட்டனர். உடனே ஒரு கூட்டம் காவலர்கள் யூனைப் பிடிக்க வாகனங்களில் பறந்தனர். கூட்டம் நடந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள விவசாயக் கட்டிடங்களை எல்லாம் யூனைத் தேடி அலசினார்கள். ஆனால் யூன் எந்தக் கட்டிடங்களிலும் இல்லை. அருகாமையிலுள்ள சோளத்தோட்டத்திற்குள் தேட ஆரம்பித் தனர். யூன் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதும் காவலர்கள் அவரைச் சுற்றி வளைந்து நின்றுகொண்டு ஒருவர் அவரைக் காலால் உதைத்து எழுப்பினார். அவரைக் கைது செய்து கொண்டு சென்று விட்டனர். எனினும் பிரசங்கிக்கும் நேரம் அல்லாமல் தூங்கிக் கொண்டிருந்தவரை கைது செய்து கொண்டு வந்தபடியால் அவர் மீதான வழக்கில் அவர் தப்புவித்துவிட்டார்.

1981ம் ஆண்டு மற்றுமொரு தலைவருடன் இணைந்து கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது இருவரையும் கைது செய்துவிட்டனர். ஆனால் காவல்துறையினரின் பிடியிலிருந்து தப்பித்து ஓடிவிட்டார். சரியாக ஓராண்டிற்குள் மீண்டும் ஒருமுறை யூனைக் கைது செய்துவிட்டனர். அந்த முறை காவல்துறையினர் அவரை மிகவும் கொடுமையாக அடித்து ஒரு அறையில் போட்டுவிட்டனர். இந்த முறை அவன் தப்பமுடியாது என்று அவர்கள் நினைத்தனர். ஆனால் கொடிய காயங்களு டன் யூன் அந்த அறையிலிருந்து தப்பிவிட்டார். ஆனால் மற்றுமொரு கூட்டம் நடந்துகொண்டிருந்த வேளையில் பொதுபாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த (**PSB**) காவலர்கள் கிறிஸ்தவ கூட்டத்தை சுற்றிவளைத்து யூனைக் கைது செய்வதில் நோக்கமாயிருந்து யூனைக் கைது செய்துவிட்டனர். யூனோடிருந்த அநேகர் அன்று கைது செய்யப்பட்டனர். 1984ம் ஆண்டு ஜனவரி 25ம் நாள் முதல்முறையாக யூன் தண்டனைக் கைதியாக சிறைக்கு அனுப்பப்பட்டார்.

சிறையில் யூன் கொடிய சித்திரவதைக்குள்ளானார். காவலர்கள் அவர் மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டக் கம்பியை (**ELECTROCUTED ROD**) அவர் மீது வைத்துத் தாக்கினார்கள். அந்த தாக்குதலில் தூக்கி எறியப்பட்டு பனிக்கட்டிகளில் விழுந்தார். பயங்கரத் தேள் கொட்டியது போல உணர்ந்தார். ஆயிரம் அம்புகள் அவருடைய இருதயத்தைத் துளைத்துச் செல்வதுபோன்ற வேதனையடைந்தார். அவருடைய இரு கரங்களை இறுகக் கட்டிவைத்து அவரை இரக்கமின்றி அடித்தார்கள். அந்த வேளையில் அவர் வெளியே சத்தமிடாமல் இருதயத்தின் ஆழத்தி லிருந்து தேவனை நோக்கிக் கதறினார். தேவன் அவருடைய கதறுதலைக் கேட்டார். ஆனால் தேவனிடத் திலிருந்து "எல்லாவற்றையும் நான் அறிவேன்" என்ற பதில் மாத்திரம் அவருடைய இருதயத்தில் தொனித்தது. பொது பாதுகாப்பு அமைப்பு (**PSB**) காவலர்கள் அவரை "நீ யார்?" என்று அவரைப்பற்றிய விபரத்தை அறியும்படிக் கேட்டார்கள். யூன் தன்னுடைய பாதுகாப்பை சிறிதேனும் கருதாமல்

தன்னோடு இணைந்து ஊழியம் செய்யும் சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் கிறிஸ்தவர்களுடைய பாதுகாப்பிலேயே மிகவும் கவனமாக இருந்தார். ஆகவே அவர்களைப் பற்றிய எந்த தகவல்களையும் சொல்வதில்லை என்பதில் மிகவும் தீர்மானமாகயிருந்தார். ஆனால் பொது பாதுகாப்பு அமைப் பினர் யூனிடத்திலிருந்து அநேக தகவல்களை அறிய விரும்பி அவரைக் கேள்விமேல் கேள்வி கேட்டு துளைத்துத் துன்புறுத் தினார்கள். ஆனால் யூன் தன்னைக் கேட்டு சித்திரவதை செய்த நேரத்திலெல்லாம் "நான் பரலோக மனிதன்" என்று மாத்திரம் சொல்லுவார்.

ஆனால் பொது பாதுகாப்பு அமைப்பைச் (**PSB**) சேர்ந்த வர்கள் அவரைக் குறித்தும் மற்ற கிறிஸ்தவர்களைக் குறித்தும் அவரிடத்திலிருந்து அறிவதற்கு மிகுந்த தீவிரம் காட்டினார்கள். ஆனாலும் யூன் "நான் பரலோக மனிதன், பரலோகத்திலிருந்து வருகிறேன்" என்று பதிலுரைப்பதில் பிடிவாதமாக இருந்தார். இப்படிப்பட்ட பதிலைக் கேட்டு ஆத்திரம் அடைந்த காவலர்கள் மரக் கட்டைகளாலும், துப்பாக்கியின் பின்பகுதியாலும் பயங்கரமாகத் தாக்கினார்கள். பலமுறை மின்சாரம் பாய்ச்சிய கம்பியால் தாக்கினார்கள். இவருடைய சித்திரவதையை தூரத்தில் நின்று காண்கிற கிறிஸ்தவர்கள் தங்களையும் கட்டுப்படுத்த முடியாமல் அழுதுவிடுவார்கள்.

# 4

# கிறிஸ்துவுக்காக சிறையில் நொறுக்கப்பட்டார்

## சிறையில் சித்திரவதை

யூன் சிறை அறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு அநேக நாட்களாக ஒவ்வொருநாளும் அவருடைய பெயரைச் சொல்ல மறுத்த காரணத்தை வைத்து அவரை மிகக் கொடூர மாகத் தாக்கி சித்திரவதை செய்தார்கள். ஆனாலும் பொதுபாது காப்பு அமைப்பினர் (**PSB**) அவர் யார், எந்த ஊரைச் சார்ந்தவர் என்பதை வேறுவழியில் கண்டுபிடித்துவிட்டனர். யூனுடைய கிராமத்தைச் சார்ந்த காவல்துறையினரும் யூனை அடையாளம் காட்டி உறுதிபடுத்தினர். அவர் இன்னார் என்று தெரிந்தபின் அவரை இன்னும் கொடூரமாகத்தாக்க ஆரம்பித்தனர். அவர் கைகளில் விலங்கிட்டு ஒரு வாகனத்திற்குள் (**POLICE VAN**) விலங்கிலேயே கட்டித் தொங்க விட்டனர். இந்த நிலையில் வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்று அவர் தொங்கிய நிலையில் ஆடி ஆடி வாகனத்தின் பக்கவாட்டில் மோதுவதும், இரும்பு விலங்குகள் அழுத்தி சதை கிழிக்கப்பட்டு எலும்புகளில் விலங்குகள் அழுத்த இரத்தம் வடியவடியத் தொங்கவிட்டனர். பித்துப்பிடித்தவனைப் போல வாகனத்தை மேடுபள்ளங்களிலும் திருப்பங்களிலும் வேகமாக ஓட்டி அவரைக் கொடுமைப்படுத்தி னார்கள். இதன் விளைவாக அவரது இரு மணிக்கட்டிலும் சரீரத்திலும் பல இரத்த காயங்கள் ஏற்பட்டன. அதன் வேதனையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அவர்

மயங்கி விழுந்தாலும் மின்சாரம் பாய்ச்சிய கம்பியால் தொட்டு அவரைத் துடிக்க வைப்பார்கள். இப்பொழுது கூட அந்த வேதனையின் சூழ்நிலைகளை நினைத்துப் பார்ப்பதற்கே யூன் மிகக் கடினமாக உணருகிறார்.

யூன் தேவனை நோக்கி,"ஆண்டவரே, என் ஆவியை உம்மிடத்தில் எடுத்துக்கொள்ளும்" என்று தனக்குள்ளேயே கதறுவார். ஏனென்றால் இனிமேலும் இந்த வேதனையை சகிக்க முடியாது என்று உணருவார். இந்த வேதனைகளுக்கு மத்தியில் தேவன் அவரோடு பேசினார். "யூன், நான் யார் என்பதை நீ இளைப்பாறுதலுடன் இருந்தால்தான் கற்றுக் கொள்ள முடியும். **நான் அடைந்த வேதனைக்கு மேலான வேதனையை நீ அடையவில்லையே. முழு மனுக்குலத்திற்காகவும் நான் வேதனை சகித்தேனே. உன்னுடைய சூழ்நிலைகளை நான் அறிவேன். உனக்கு இப்பொழுது இளைப்பாறுதல் தேவை"** என்று தேவன் சொன்னார். தேவனில் இளைப்பாறுகிற அனுபவம் தேவை என்பதை யூன் உணர்ந்து கொண்டார். கைவிலங்குகளில் தொங்கவிடப்பட்டு கொடிய வேதனையால் துடித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலும் "ஆண்டவரே, இந்த நிலையிலும் நான் இளைப்பாறுதலுடனிருக்க வேண்டு மானால் என் வாயைத் திறவாமல் என் கண்களை மூடிக் கொள்ளுகிறேன். நான் இளைப்பாறுதலைக் கற்றுக் கொள்ளு கிறேன்" என்று சொன்னார். அதற்குப் பின் தொங்கிய நிலை யிலும் அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

## இரத்தம் சிந்தினாலும் மனமுறிவடையவில்லை

இவ்வளவு கொடிய சித்திரவதைக்குப்பின் இரண்டு நாட்கள் கழித்து அவரை மீண்டும் சிறைக்குக் கொண்டு சென்றனர். காவல்துறை வாகனத்திலிருந்து அவரை இறக்கி சிறை அறைக்கு இழுத்துச் சென்றனர். அவரை சிறையி லடைக்க 10 காவலர்கள் காத்து நின்றனர். இந்த "பரலோக மனிதன்" யார் என்பதைக் கண்டுகொள்ள வேண்டுமென்ற

ஆர்வத்துடன் அநேக மக்கள் நின்று கொண்டிருந்தனர். இரத்தம் வழிய அவர் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார் என்பது நன்றாகத் தெரிந்தது. ஆனாலும் அவர் ஒன்றுமே பேசவில்லை. "உன்னுடைய முழு இயக்கத்தையும் நாங்கள் கண்டுபிடித்து ஒடுக்கிவிடுவோம். எல்லா தலைவர்களும் சிறைக்கு வந்துவிடுவார்கள். நீயும் இதோடு முடிந்தாய்" என்று காவலர்கள் கூறினர். ஆனால் மிகுந்த அமைதியோடு இருதயத்தின் நிறைவோடு சிரித்துக் கொண்டே **"கடினமான உபத்திரவங்களின் மத்தியிலும் சபை நிச்சயமாக வளரும்"** என்று மாத்திரம் பதிலுரைத்தார்.

கைது செய்யப்பட்டவர்களுள் யூனுக்கு மட்டும் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. மற்ற இரு தலைவர்களுக்கு இரண்டு ஆண்டுகளும் மற்றும் மூன்று தலைவர்களுக்கு மூன்று ஆண்டுகளுமாக சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. யூன் முன்பு காவல்துறையினரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றபடியாலும், முக்கியமான தலைவராக இருந்தபடியாலும் மற்றவர்களைவிடக் கடுந்தண்டனை வழங்கப்பட்டது.

சிறை அறை ஒன்றில் யூன் அடைக்கப்பட்டார். அப்பொழுது இயேசு எப்படி நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசமிருந்தார் என்பதை நினைத்துப்பார்த்தார். அந்த வேளையில் "இளைப்பாறுதலோடிருக்கவும் உபவாசிக்கவும் இதுவே நேரம்" என்று தேவன் அவரோடு மீண்டும் பேசினார். அன்று முதல் யூன் உணவு உட்கொள்வதை நிறுத்திவிட்டார். தேவனுடைய நாமம் மகிமைப்படும் வரை, காவல்துறையினர் தன் குடும்பத்தினரைப் பார்க்க அனுமதிக்கும் வரை உபவாசத்தைத் தொடரப்போவதாகத் தீர்மானம் செய்தார். "ஆண்டவரே, என்ன கஷ்டங்கள் சித்திரவதைகள் வந்தாலும் இனி நான் ஒரு வார்த்தை கூட பேசமாட்டேன். எந்த சூழ்நிலை வந்தாலும் நான் உம்மை மறுதலிக்க மாட்டேன்" என்று தேவனிடத்தில் சொன்னார்.

சிறையில், சிறைக்காவலர்கள் சிறையிலிருப்போரை மிகக் கொடூரமாக அடிப்பார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ள சண்டை மூட்டிவிடுவார்கள். அநேக சந்தர்ப்பங்களில் யூனின் வாயிலிருந்து இரத்தம் கக்கும் அளவுக்கு சிறைக் காவலர்கள் தாக்கியுள்ளனர். ஊமைக் காயங்களின் விளை வாக அவரது முகம் முழுவதும் கறுத்து, வீங்கி அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு ஆக்கிவிடுவார்கள். அநேக வேளைகளில் சிறை அறையில் பயங்கர குளிர் காரணமாக அவருடைய கைகள் இரத்தாம்பரச் சிவப்பாக மாறிவிடும். மற்றும் அநேக சந்தர்ப்பங்கள் அவரது கரங்களில் விலங்கிட்டு இறுக்கப்பட்ட காரணத்தால் மணிக்கட்டிலுள்ள சதை கிழிக்கப் பட்டு இரத்தம் வழிந்துகொண்டேயிருக்கும். வேதனையைத் தாங்கமுடியாமல் தேவனை நோக்கி அழுதிருக்கிறார். ஒருநாள் அவர் மனப்பாடம் செய்திருந்த ஒரு வசனம் அவருக்கு நினைவுக்கு வந்தது. **"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். சேனை களின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்"** (சங். 46:10,11). இந்த வசனங்கள் அவரை உற்சாகப்படுத்தின. புதுபெலன் அடைந் ததை அவர் உணர்ந்தார்.

## சோதனையும் சித்திரவதையும்

சகோதரர் யூன் நாற்பது நாட்கள் திட்டமிட்டதைத் தாண்டி உபவாசத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். அவரோடிருக்கும் சிறைவாசிகள் யூனுக்கு சாப்பாடு இல்லாமையினாலும் பலத்த அடியின் காரணமாகவும் மோசமாகிக் கொண்டுவரும் நிலவரத் தைக் கண்டு அவர் என்றைக்கு மரிப்பார் என்று பந்தயம் கட்டுவதுண்டு. ஒருநாள் இரவு, அவருக்கு மறுநாள் வரயிருக் கும் பயங்கர சோதனையைக் குறித்து ஒரு தரிசனம் கண்டார். அதன்படியே மறுநாள் நடந்தது. பொதுபாதுகாப்புப் பிரிவின் (**PSB**) அலுவலர்கள் யூனைச் சிறை அறையிலிருந்து எடுத்து

சித்திரவதை அறைக்கு (**TORTURE ROOM**) எடுத்துச் சென்றனர். அவர்கள் அவரைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். அவர் கண்களை மூடிக்கொண்டு வாய்திறந்து எந்த பதிலும் பேசாதிருந்தார். இது விசாரணை அதிகாரிகளை மிகவும் கோபமூட்டியது. அவரைத் தாக்கு வதற்கு மின்சாரம் பாய்ச்சப் பட்டக்கம்பி, சாட்டைகள், இரும்புச் சங்கிலிகள் ஆயத்தமாக் கப்பட்டன. "உன்னை அடித்தே சாகடிப்போம். நீ அரசு சார்புள்ள மூன்று நாட்டுப்பற்றுள்ள சபைக்கு விரோதமாகச் செயல்பட்டு வருகிறாய் (**GOVERNMENT - SUPPORTED THREE SELF PATROTIC CHURCH**). ஆனாலும் நாங்கள் உனக்கு ஒரு வாய்ப்பைத்தர விரும்புகிறோம். இந்த அரசு சார்புள்ள சபையில் நீ சேர்ந்துகொள்வதாக உறுதியளித்தால் நீ தப்புவிக்கப் படுவாய்" என்று மிரட்டினார்கள்.

யூன் இந்த சோதனையைப் பொருட்படுத்தவே இல்லை. ஆனால் தன்னுடைய இருதயத்தில் இந்த சூழ்நிலையில் தேவனுடைய பாதுகாப்பிற்காக வேண்டிக்கொண்டார். விசாரணை அதிகாரிகள் சிறை மருத்துவரை வருவித்தனர். மருத்துவர் வந்தார் "நீ பேசமாட்டாய், இல்லையா? உன்னை பேச வைக்கிறேன் பார்" என்று மிரட்டினார். குற்றவாளிகளை உண்மையைப் பேச வைப்பதற்கு பொதுவாக, அவர்கள் ஊசி மருந்தை உபயோகிப்பதுண்டு. தனது பையிலிருந்து ஊசியை எடுத்து நான்கு சிறைக்காவலர்கள் யூனை பிடித்து அழுத்திக் கொண்ட வேளையில் மருத்துவர் யூனில் பெருவிரல் நகத்தை யொட்டி ஊசியைச் செலுத்தினார். அந்த வேதனையை அவர் தாங்கமுடியாமல் கதறினார். அடுத்த நகத்தில் ஊசியைக் குத்தினார். மூன்றாவது நடுவிரலில் குத்தும்போது யூன் சுயநினைவை இழந்தவராகிவிட்டார். யூனுடைய சிறையிலிருந்த சிறை வாசிகள் யூனுக்கு ஏற்பட்ட நிலவரத்தைக் கண்டு மிகக் கடினமான குற்றவாளிகளாக இருந்தாலும் கூட அவர்மீது ஏற்பட்ட அனுதாபம் காரணமாக அழ ஆரம்பித்துவிட்டனர்.

யூனை சிறை அறையிலிருந்து கொண்டுவரவும் கொண்டு செல்லவும் ஒரு குற்றவாளியை நியமித்திருந்தனர். ஒவ்வொரு முறையும் அவன் யூனை சித்திரவதை அறைக்குக் கொண்டு வந்து சிறை அறைக்குத் திரும்பக் கொண்டு போகும் போதெல் லாம் யூனைத் தூக்கிக் கொண்டு செல்வான். ஏனென்றால் பயங்கரத்தாக்குதலின் காரணமாக ஏற்பட்ட இரத்த காயங் களின் விளைவாக யூனால் நடக்கவே முடியாது. அவனோ யூனின் பரிதாப நிலவரத்தைக் கண்டு அழுதுவிடுவான். காயங்களின் விளைவாக யூனின் முகம் கருப்பாகவும் சில இடங்களில் கருநீல நிறமாகவும் மாறிவிடும். சிறையிலிருந்த மிகக் கொடிய சில குற்றவாளிகளும் கூட யூனுக்கு விசாரணை அதிகாரிகள் செய்த சித்திரவதையும் அதன் விளைவாக யூனின் பரிதாப நிலவரத்தைக் கண்டு "யூனால் இவ்வளவு கொடிய சித்திரவதையை எப்படித் தாங்கிக் கொள்ள முடிகிறது" என்று மிகுந்த ஆச்சரியமடைந்துள்ளனர். அவர்களில் சிலர் இயேசுவை விசுவாசித்து கிறிஸ்தவர்களாக மாறியிருக்கின்றனர்.

கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு யூன் சித்திரவதைக்கு ஆளானார். இத்தனை கொடிய சித்திர வதைக்கு மத்தியிலும் அவர் பிழைத்திருப்பதே தேவனுடைய பெரிய அற்புதம் தான். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட யூன் மற்ற சக சிறைவாசிகளுக்கு மிகுந்த ஆறுதலாகவும், மனப்பூர்வ மாக உதவி செய்பவராகவும் செயல்படுவார். சிறைவாசிகள் அவருக்குள்ள இந்த கிருபையை நினைத்து ஆச்சரியப்படுவார் கள். மற்ற சிறைக்கைதிகளை ஆயத்தப் படுத்தி யூனிடமிருந்து சில காரியங்களைக் கேட்டறிந்து அவர்களுக்குச் சொல்ல ஏற்பாடு செய்தனர். அப்படிப்பட்ட அனைவரும் அவரிடம் பேசியதின் விளைவாக இயேசுகிறிஸ்துவை அறிந்துகொண்டு அவர்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளானார்கள். யூன் வரவர மிக பலவீனமடைந்து கொண்டே வந்தார். எலும்பும் தோலுமாக மாறிவிட்டார். சில வேளைகளில் தான் விரையில் மரித்துவிடுவோம் என்ற எண்ணம்கூட ஏற்பட்டதுண்டு. ஆனாலும் தேவனில் இளைப்பாறுதலிலும் உபவாசத்திலும்

உறுதியாக இருந்தார். அவரது கொடிய பாடுகளைக் குறித்தும், அதன் மத்தியிலும் அவரது உறுதியையும் உபவாசத்தைக் குறித்தும் சிறைக்கு வெளியே செய்திகள் வந்தன. அந்த செய்தி சபையை மிகவும் பெலப்படுத்துவதாக அமைந்தது. யூன் வெளியே இருந்து செயல்பட்ட காலத்தைவிட சிறையிலடைப் பட்ட காலத்தில் சபையின் ஊழியங்கள் செழித்தோங்கின.

யூன் உபவாசத்தைத் தொடர்ந்தது அவருடைய சொந்த முடிவல்ல. தேவன் அவரோடு பேசி ஊக்கமளித்தார். இந்த நாட்களில் அவருடைய சரீரம், சிந்தை, ஆவி இவைகள் இளைப்பாறுதலடைகிற அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். உபவாசத்தைத் துவங்கிய காலத்தில் சாத்தான் அவரிடத்தில் "நீ பிழைத்திருப்பதற்கு கொஞ்சமாகவேனும் புசித்து குடித்துக் கொள்ளலாமே" என்ற தீய ஆலோசனையைக் கொண்டுவரு வான். அப்பொழுதெல்லாம் "மனுஷன் அப்பத்தினாலே மாத்திர மல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்ற வசனத்தைத் தேவன் நினைப்பூட்டுவார்.

## அற்புத மனிதனும் அவருடைய அற்புத தேவனும்

உணவே சாப்பிடாமல் ஜீவிக்கிற அற்புத இந்த மனிதரைக் குறித்து சிறைக் காவலர்கள் உட்பட எல்லோரும் ஆச்சரியமடைந் தனர். யூன் முப்பத்தி எட்டு நாட்கள் உபவாசத்தை முடித்து முப்பத்தி ஒன்பதாவது நாள் இரவு தேவனை நோக்கி கூப்பிட்டார் "ஆண்டவரே, ஏன் என்னைவிட்டு விலகிவிட்டீர்? என்னுடைய ஆவியை என்னிலிருந்து எடுத்துக்கொண்டு என்னை விடுதலை செய்யும்" என்று தேவனைக் கேட்டார். "எனக்கு ஒரு தரிசனத்தை இப்பொழுதே காட்டும்" என்று ஜெபித்தார். தேவன் ஒரு தரிசனத்தின் மூலமாக அவருக்கு பதிலளித்தார். அந்த தரிசனத்தில் பூட்டியிருந்த அநேக இரும்புக் கதவுகள் திறப்பதைக் கண்டார். இருளில் பளிச்சென்று பிரகாசிக்கிற மின்னல் தோன்றி அதிலிருந்து ஒரு சத்தம் வந்தது. "நான்

இந்தக் கதவுகளை உனக்குத் திறப்பேன். ஒருவனும் அவற்றை அடைக்கமுடியாது" என்பதுதான் அந்த சத்தம். இந்த தரிசனத்தைக் கண்டபின் யூன் "ஆண்டவரே, நீர் இருப்புக் கதவுகளை உமக்குத் திறக்கமுடியும். ஆனால் நான் மிகுந்த பலவீனனாக இருக்கிறேனே! என்னால் நடக்கவே முடியவில்லையே! நான் இங்கேயே இருந்துவிடுகிறேன்" என்று சொன்னார். ஆனால் யூன் சிறைக்கு வெளியே சென்று கொண்டிருப்பதுபோன்று உணர்ந்தார். அப்பொழுது தன்னுடைய சரீரத்திலிருந்து ஆவி பிரிந்து செல்கிறது என்றும் விரைவில் தேவனைக் காணப் போகிறோம் என்றும் நினைத்தார். இந்த வேளையில் சாத்தானும் அவரிடத்தில் வந்து நீ உபவாசத்தைத் தொடரவேண்டிய அவசியமில்லை" என்று சொல்லிக் கொண்டே இருப்பான். ஆனாலும் "அப்பாலே போ, சாத்தானே" என்று சாத்தானை அதட்டும் பெலத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். யூன் தேவனினை முற்றிலும் சார்ந்துகொண்டார்.

இரண்டாவது முறை சாத்தான் மீண்டும் வந்தான். "இயேசு உபவாசம் எடுத்த நாட்களையும் தாண்டி நீ உபவாசமெடுக்க விரும்புகிறாய்? நீ ஒரு மாணவனாக இருந்துகொண்டு ஆசிரியரையும் மிஞ்சி நீ போகப்போகிறாயா?" என்று கேட்டான். மூன்றாவது முறையாக தன்னுடைய உபவாசத்தின் 72-ம் நாள், தன்னுடைய குடும்பத்தார் யூனை சந்திப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு சாத்தான் யூனைச் சோதிக்க வந்தான். இந்த முறை அவன் கொண்டுவந்த சோதனை மிகக் கடினமானதாகவே இருந்தது. "நீ இவ்வாறு உன்னுடைய உபவாசத்தில் தொடர்ந்தால் நிச்சயமாக நீ இறந்து போவாய். உன் தாயையும் உன் மனைவியையும் கவனிப்பது யார்? உன் மனைவி குழந்தையில்லாமலே இருந்துவிட வேண்டியதுதானா? உன்னோடு உன் சபையும் சேர்ந்தே சாகும்" என்று மிகவும் அச்சுறுத்தினான். அந்த நேரத்தில் யூன் பார்க்கும் பொருட்டு தேவன் அவருடைய கண்களைத் திறந்தார். சாத்தான் அவ்வாறு சோதித்த அதே வேளையில் அநேக மக்கள் சிறைக்கு வெளியே யூனைத் தூக்கி நிறுத்தி ஜெபத்தில் தாங்கிக் கொண்டிருக்கிற ஒரு தரிசனத்

தைக் கண்டார். ஆனாலும் யூனுடைய ஜெபம் "ஆண்டவரே, நீர் வந்து என்னை எடுத்துக்கொள்ளும்" என்பதாகவே இருந்தது. ஆனால் தேவன் யூனை சாக அனுமதிக்கவில்லை. யூன் சுவிசேஷத்தின் காரணமாக இரத்த சாட்சிகளாக மரித்தவர்களைக் குறித்த சிந்தனையிலேயே இருந்தார்.

## பரலோக ஆகாரம்

கடைசியாக யூனின் குடும்பத்தார் யூனைக் காண அனுமதிக்கப்பட்டனர். யூன் மிகவும் பலவீனமாக இருந்த காரணத்தால் சிறை அறையிலிருந்து வெளியே அவரைத் தூக்கிதான் கொண்டு வரவேண்டியதிருந்தது. யூனுடைய மனைவியும் அவருடைய சகோதரியும் அவரைப் பார்த்துவிட்டு "ஏதோ தவறு நடந்திருக்கிறது. இது என்னுடைய கணவர் அல்ல" என்று அவருடைய மனைவியும், "இது என் சகோதரர் அல்ல" என்று அவருடைய சகோதரியும் சொல்லத்துவங்கி விட்டனர். ஏனெனில் அவரது எடை முன்பிருந்ததை விட பாதிக்கும் கீழே இறங்கிவிட்டது. அவர் எலும்பும் தோலுமாக மாறி அவரது முகம் சுருங்கிப்போய்விட்டது. அவரது தாயார் கூட அவரை அடையாளம் கண்டு கொள்வதில் சந்தேகம் வந்து விட்டது. ஆனாலும் பிறவியிலேயே உள்ள சில அடையாளங் களை வைத்து அது யூன்தான் என்று உறுதி செய்து கொண்டனர்.

யூன் தனது குடும்பத்தாரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தபடியால் "இப்பொழுது நீ சாப்பிடு" என்று தேவன் சொன்னார். யூன் தன் குடும்பத்தினரை கவலையோடு உற்றுநோக்கினார். அவர்களிடம் "உங்களிடத்தில் ரொட்டியும் திராட்சரசமும் இருக்கிறதா? நான் இன்று திருவிருந்து எடுத்துக் கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்னார். அவர்கள் அதற்கு ஆயத்தமாக வரவில்லை. எனினும் அவருடைய சகோதரி உடனடியாகச் சென்று ரொட்டியும் திராட்சரசமும் வாங்கி வந்துவிட்டாள். ஆகவே நீண்ட

உபவாசத்திற்குப் பின் இயேசுவின் பாடுகளை நினைவுகூர்ந்து ரொட்டியும் திராட்சரசமும் சாப்பிட்டு திருவிருந்தாக (**HOLY COMMUNION**) அதைச் சாப்பிட்டார்.

யூன் நிச்சயமாகப் பிழைத்து வெளியே வருவார் என்ற நம்பிக்கை ஒரே ஒருவருக்கு மாத்திரம் இருந்தது. அது அவருடைய தாயார்தான். ஏனெனில் யூனின் மூலமாக சபை வளரும் என்றும் சபை வளர்ச்சியில் யூனுக்கு ஒரு பெரும்பங்கு உண்டு என்றும் தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுத்திருந்தார். அவ்வப்போது சிறையில் அவர் அடிபட்டார் எனினும் அப்போதிருந்து யூன் சரீரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பெலனடைந்தார்.

## ஜீவ அப்பம்

இதற்குப் பின் சில மாதங்கள் கழித்து 1984ம் ஆண்டு ஒருநாள் யூனுடைய மனைவி, வீட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு விசேஷமான ரொட்டியைக் கொண்டுவந்திருந்தார்கள். அந்த ரொட்டியின் உள்ளே விலையேறப்பெற்ற சிறிய வேதபுத்தகத்தை அடக்கி வைத்திருந்தார்கள். முதலில் யூனுக்கு கொடுப்பதற்கு முன்பாக சிறைக் காவலர்கள் அதை சோதித்துப் பார்த்தும்கூட உள்ளே மறைக்கப்பட்டிருந்த வேதாகமத்தை அவர்கள் காணமுடியவில்லை. ஆகவேதான் அதைப் பெற்றுக் கொள்ள யூனுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. வேதாகமத்தைச் சிறையில் சாதாரணமாக மறைத்து வைத்துக் கொள்ள முடியாது. மிகவும் கவனமாக இருந்தாலொழிய அதை பாதுகாக்க முடியாது. சிறையில் ஒவ்வொரு நாளும் அதிகாலை 5 மணிக்குத்தான் விளக்கைப் போடமுடியும். சிறைக் காவலர்கள் வருவதற்கு முன்பாக யூன் வேதாகமத்தைப் படித்துவிட்டு மூடிவிடுவார். தேவனுடைய வார்த்தையைக் காணும் நேரத்தை மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதினார். அவற்றை மனப்பாடமாகப் படிக்க ஆரம்பித்தார். ஆச்சரியமாக யூன் அவ்வேதாகமத்தை 1987 வரை வைத்திருந்தார். திடீரென ஒருநாள் சிறைக்காவலன்

ஒருவன் யூனுடைய பொருட்களைச் சோதனை செய்தபோது அது கண்டுபிடிக்கப்பட்டு அதை அவன் அவரைவிட்டு எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

## சிறையில் கிறிஸ்மஸ்

சீனாவில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவது என்பது அதுவும் குறிப்பாகச் சிறையில் கிறிஸ்மஸ் கொண்டாடுவது என்பது மிகக் கடினமான காரியம். சிறைக்கு வெளியே எந்த தொடர்பும் கொள்ள முடியாது. அன்றைய தினத்தில் பார்வையாளர்கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள். யூன் சிறையிலிருந்த ஒரு கிறிஸ்மஸ் நாளில் அவர் வெளியே உள்ள சபையோடு தொடர்பு கொள்ள விரும்பியும் அவரால் முடியவில்லை. ஆனால் அன்றுதான் அவருக்குக் கட்டாய வேலைசெய்ய நியமித்துவிட்டனர். அது சரீரத்தில் பாடுபடுகிற வேலையாகும். 1984ம் ஆண்டு யூன் சிறையிலிருந்த முதல் கிறிஸ்மஸ் தினத்தன்று யூனுடைய இரண்டு நண்பர்கள் அவரைப் பார்க்க வந்தனர். சிறைக்காவலர்கள் அவர்களை முரட்டுத்தனமாக திட்டி, பார்க்க அனுமதி மறுத்ததை யூன் சிறையிலிருந்து கேட்க முடிந்தது. அந்த வேளையில் யூன் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி "ஆண்டவரே, எப்படியாவது அவர்களைச் சந்திக்க எனக்கு உதவி செய்யும்" என்று கேட்டார். சிறை அதிகாரி ஒருவர் அப்பொழுது அங்கே நின்று கொண்டிருந்தார். யூன் அவரிடத்தில் "ஐயா, என்னுடைய உறவினர்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள். வெளி வாசலில் நிற்கிறார்கள். 200 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கி றார்கள். அவர்களை உள்ளே அனுமதித்து இங்கேயுள்ள குளியலறைக்கு சென்றுவிட்டுப் போக அனுமதித்தாலும் போதும். அந்த நேரத்தில் மட்டும் நானும் அவர்களைச் சந்தித்துக் கொள்ளுகிறேன். தயவு செய்து அனுமதியுங்கள்" என்று கெஞ்சினார். சிறிதேனும் எதிர்பாராத வகையில் அவர் அனுமதிக்கச் சம்மதித்து விட்டார்.

யூன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார். அவர்களைக் காண முதலாவது வாசலுக்கு விரைந்தார். கிறிஸ்துவுக்குள்ளான அந்த சகோதரர்களைச் சந்தித்தார். அவர்கள் அங்குள்ள குளியலறைக்குச் சென்று திரும்ப அனுமதித்த படியால் யூனும் அவர்களோடு சென்றார். அங்கு ஒரு பகுதியில் வைக்கோல் பரப்பிவிடப்பட்டிருந்தது. அது அசுத்தமான பகுதியாக இருந்தாலும் கூட அங்கேயே அவர்கள் முழங்கால்படி யிட்டு ஜெபித்தனர். யூன் அந்த கிறிஸ்மஸ் நாளை நினைவு கூர்ந்தார். தேவன் அப்பொழுதே சபைக்கு கொடுக்க வேண்டிய கிறிஸ்மஸ் செய்தியைக் கொடுத்தார். அந்த சகோதரர்களோடு அதைப் பகிர்ந்து கொண்டார். "இயேசு பரலோக மகிமையை விட்டு வைக்கோலில் படுத்துறங்க இறங்கினார். மாட்டுக் கொட்டத்திலிருந்து மனப்பூர்வமாக மிகக் கடினமான பாதையைக் கடந்து சென்றார். இயேசு சென்ற அதே பாதையில்தான் நாமும் நடக்க வேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்".

நேரம் கடந்து சென்றதை மறந்து தங்கள் கரங்களை தேவனுக்கு நேராக உயர்த்தி கண்ணீரோடே தேவ சமூகத்திலிருந்தனர். திடீரென்று கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டனர். சிறை அதிகாரி மிகுந்த கோபக் கண்களோடு எங்களை முறைத்துப் பார்த்தார். "இங்கே என்ன செய்கிறீர்கள்? உங்களுடைய மார்க்க வைராக்கியத்தின் காரணமாகத் தான் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறீர்கள். இங்கேயே வந்து அதே காரியத்தைத் செய்கிறீர்களா?" என்று திட்டி சபித்தார். "யூன் உன்னை இனி தனிச்சிறையில்தான் அடைக்கப்போகிறேன்" என்றார். சிறை அதிகாரி சிறைக்காவலர்களைக் கூப்பிட்டு யூனைப் பார்க்க வந்தவர்களையும் கைது செய்து விலங்கிடும்படி ஆணையிட்டார்.

யூன் எழுந்து சிறை அதிகாரி முன்பாக நின்றார். சிறையைப் பொறுத்தவரையில் அவர்தான் பெரியவர். அவர் வார்த்தையே கடைசியானது. அவ்வளவு அதிகாரமுள்ளவர். யூன் அவருக்கு முன்பாகச் சென்று அவரது முகத்திற்கு நேராக

விரலை நீட்டி "நீர் மனிதனுக்கு விரோதமாக அல்ல தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகிறீர். நீர் முழங்கால்படியிட்டு உம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்" என்று ஒரு கட்டளையைப் போல அவருக்கு ஆணையிட்டார். சிறை அதிகாரி தன்னை மறந்த நிலையில் முழங்கால்படியிட்டுத் தன் பாவங்களை அறிக்கையிட ஆரம்பித்தார். உண்மையிலேயே அவர் தேவனை ஏற்றுக் கொண்டார். யூனைப் பார்க்க வந்த இரண்டு சகோதரர்களும் திரும்பிச் செல்ல அனுமதியளித்தார். சிறையில் நடந்த அற்புதமான நிகழ்ச்சி யாவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. யூனைப் பார்க்க வந்த இருவரும் கிறிஸ்மஸ் நன்னாளுக்கு சபைக்கான செய்தியோடு திரும்பினார். சிறை அதிகாரி புதிய விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டார். அன்றைய தினத்திலிருந்து யூன் சிறையிலேயே இயேசுவைக் குறித்து அறிவித்து ஊழியம் செய்தாலும் காணாதவர்களைப்போலிருந்து அனுமதித்துவிட்டனர்.

# 5

# மரண தண்டனைக் கைதியின் மனமாற்றம்

## சிறை அறையில் கொலையாளி

காலப்போக்கில் யூன் சிறை அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார். ஒருநாள் சிறைச்சாலையின் உயர் அதிகாரியான சிறை இயக்குனர், யூன் இருந்த சிறையைப் பார்வையிட வந்திருந்தார். அவர் யூனிடத்தில் "நீங்களெல்லாம் உண்மையான கிறிஸ்தவர்கள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் உங்களிடத்தில் மனதுருக்கத்தையும் அன்பையும் காண்கிறேன். இந்த சிறை அறைக்கு உன்னை தலைவனாக நியமிக்கப்போகிறேன். அதன் பின் இந்தச் சிறையிலேயே மிகப் பயங்கரமானக் குற்றவாளி ஒருவனை உன் பொறுப்பிலிருக்கும் சிறைக்கு அனுப்பப் போகிறேன். அவனுக்கான தண்டனை சில தினங்களில் நிறைவேற்றப்படும். அதுவரை நீ அவனை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார். யூன் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு தன்னுடைய சிறை அறைக்கு அனுப்பயிருக்கும் மனிதனைக் கவனித்துக் கொள்வதாகவும் பதிலளித்தார். தேவனுக்குள் அவருடைய வாழ்க்கை சிறை அதிகாரிகளையும் தொட்டிருக் கிறது என்பதை அறிந்து தேவனுக்கு மனப்பூர்வமாக நன்றி செலுத்தினார். ஆனால் இதே காரியத்தை அவரோடு சிறை அறையிலுள்ளோருக்கு சொல்வதற்குச் செல்லும்போது அவர்கள் இதற்கு என்ன சொல்லப்போகிறார்களோ என்ற அச்ச

உணர்வோடு சென்றார். ஏனென்றால் எந்த மனிதனை அவர்களுடைய சிறை அறையில் அனுப்பப்போகிறார்களோ அவன் சீனா முழுவதும் அறிந்த மிகப் பயங்கரவாதி. இவன் சீனாவிலுள்ள ஒரு முக்கியமான கம்யூனிஸ்ட் உறுப்பினரின் வீட்டில் பிறந்து வளர்ந்தவன். பலமுறை பல ஆண்டுகள் சிறையிலேயே கழித்தவன். ஒருமுறை அவன் சிறையிலிருந்து விடுதலை ஆன உடனேயே கத்திகளை வைத்துக்கொண்டு சம்பந்தமில்லாமல் அநேகரைக் குத்திக் கொன்றவன். அவ்வளவு வன்முறை ஆவியால் நிறைந்தவன் **(SPIRIT OF VIOLENCE)** அவன் மீண்டும் கைது செய்யப்பட்டான். இந்த முறை அவனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அவன் தூக்கிலிடப்படும் நாளுக்காய் காத்திருந்தான்.

சிறையிலும் தன்னைச் சுற்றியுள்ளோருக்கு அவன் பேராபத்தாகவே இருந்தான். யாரை என்ன செய்வான் என்று தெரியாது. ஆகவே 24 மணி நேரமும் அவனுக்கு கைவிலங்கு பூட்டப்பட்டிருக்கும். கால்களும் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருக்கும். அந்த நிலையிலும் யாரையும் தாக்கும் மனப் பான்மையிலேயே இருப்பான். சிறை அதிகாரிகளைக் கேவல மான வார்த்தைகளால் திட்டி சபிப்பான். யாரும் அவனை அடக்க முடிவதில்லை. தன்னோடிருக்கும் சிறைவாசிகளின் காதையோ மூக்கையோ கடித்து காயப்படுத்திவிடுவான். அவ்வளவு பயங்கர மானவன்.

யூன், சிறைவாசிகளுக்குத் தன்னை ஒரு தலைவனாக உயர்த்தியிருப்பதைக் குறித்தும் பயங்கர குற்றவாளியைத் தங்களது சிறையறையில் அனுமதிக்க சம்மதித்திருப்பதாகச் சொன்னவுடன் எல்லோரும் ஏகோபித்த குரலில் "கூடவே கூடாது அவனை இங்கு அனுமதிக்கவே கூடாது" என்று குரல் கொடுத்தனர். "நாம் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து அனைவரும் சமாதானத்தைக் காத்துக்கொண்டிருக் கிறோம். நம்முடைய சமாதானம் கெடுக்கப் படுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது" என்று தெரிவித்தனர். யூன் அவர்

களோடு பேசி அவர்களை சமாதானப்படுத்தியபின் அவர்கள் யாவரும் அந்த பயங்கர குற்றவாளி மீது அன்பு காட்டவும், மனதுருக்கத் தோடிருக்கவும் தீர்மானம் செய்து கொண்டனர்.

அந்த பயங்கரக் கொலையாளி, யூன் இருந்த சிறை அறைக்கு கொண்டுவரப்படுவது அவனது கால்களிலிருந்த சங்கிலி ஓசை முன் அறிவிப்பதாக இருந்தது. சிறைவாசிகள் ஒருவருக்கொருவர் அச்சத்தோடு பார்த்தனர். சிறைக்காவலர் சிறைஅறைக் கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்த அவனுடைய கண்கள் வெறுப்பாலும் பகைமையுணர்வாலும் நிறைந்திருந்தன. அவனது பார்வையே மிகவும் பயங்கர மாயிருந்தது. தனது இரையைப் பாய்ந்து பிடித்து விழுங்க ஆயத்தமாக இருக்கும் சிங்கத்தைப்போல காட்சியளித்தான். எல்லோருக்கும் மத்தியில் வந்து நின்றான். தலைமுடி வாரப்படாத நிலையில் பரந்து கிடக்கும் தோற்றம். கைகளின் மணிக்கட்டுகளில் விலங்கு மாட்டப்பட்டிருப்பதின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இரத்த காயங்கள், கால்களில் மாட்டப்பட்டி ருக்கும் சங்கிலியால் கரண்டைகளில் ஏற்பட்டிருக்கும் காயங்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருக்கும் நிலை. இதுதான் அவனது தோற்றம். ஒவ்வொரு கைதிகளுக்கும் குடிப்பதற்கு ஒரு நாளைக்கு ஒரு அளவு கோப்பை நிறைய தண்ணீர்தான் கொடுக்கப்படும். அந்த அறையிலிருந்த கிறிஸ்தவ சிறைவாசிகள் எந்த தயக்கமுமின்றி அவரவர்கள் பங்கிற்கு கொடுக்கப்பட்டத் தண்ணீரைச் சேர்த்து அதைக் கொண்டு அவனது காயங்களைக் கழுவினார்கள். அவன் ஒரு வார்த்தை கூட பேசாமல் அமைதியாக நின்றான். முற்றிலும் மாறான சூழ்நிலையைக் கண்டான்.

அவன் மரண தண்டனைக்கு நியமிக்கப்பட்டக்கைதியாக இருந்தபடியால் சிறை அதிகாரிகள் அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உணவைக்கூட சரியாக கொடுப்பதில்லை. ஏனென்றால் அவன்தான் சில தினங்களில் தூக்கிலிடப்பட்டு சாகப்போகிறானே என்ற அலட்சியப்போக்கு. அந்த சிறை

அறையிலிருந்த விசுவாச சகோதரர்கள் அனைவரும் தங்களுக்கு கொடுக்கப்படும் உணவில் அளவைக் குறைத்து அதை ஒன்று சேர்த்து அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித் தார்கள். சிறையில் ஒரு கைதியைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமானால் அவனுக்கு கொடுக்கப்படவேண்டிய உணவை யும் தண்ணீரையும் தொடர்ந்து கொடுக்காமல் நிறுத்தி அவனை பட்டினியாலும் தாகத்தாலும் வாடிக் கதற வைத்து விடுவார்கள். அவன் எதுவும் பேசாவிட்டாலும் கூட "ஏன் இந்த மக்கள் என்னை முற்றிலும் மாறுபட்டவிதத்தில் கவனிக்கிறார்கள்?" என்று நிச்சயமாக அவன் நினைத்திருப்பான்.

வாரம் ஒருமுறை சிறைவாசிகளுக்கு ஒரு விசேஷ உணவு கொடுக்கப்படும். அன்றைய நாள் அது கொடுக்கப்படும் நாளாக இருந்தது. அது ஒரு சாதாரணமானதுதான். ஆனால் சிறைக் கைதிகளுக்கு அது விசேஷமானது. ஆவியில் வேகவைத்து தயாரிக்கப் படும் "மான்டௌ" (**MANTOU**) என்று சொல்லப் படுகிற ரொட்டிதான் அது. அந்த மரண தண்டனைக் கைதிக்கு ஒன்றுமே கொடுக்கப்படவில்லை. யூனுக்குக் கொடுக்கப்பட்ட மான்டௌ ரொட்டியை மிகுந்த ஆவலோடு முதல்கடியைக் கடிக்க வாய் அருகில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆண்டவர் மெல்லிய சத்தத்தில் யூனோடு பேசினார். "உன்னுடைய பாவத்திற்காக நான் சிலுவைக்குச் சென்றேன். உன்னுடைய அன்பை நீ எனக்கு காட்டுவதற்கு நீ என்ன செய்யப்போகிறாய்? இந்தக் கேள்வியை கேட்டவுடன் யூன் அழ ஆரம்பித்தார். மற்றவர்கள் பார்க்காத வகையில் அவர் சுவர் பக்கமாகத் திரும்பிக் கொண்டார். அப்பொழுது அவர் ரொட்டியைக் குறித்து ஒன்றும் நினைக்கவில்லை. "இயேசுவே இப்பொழுது நான் மிகுந்த பசியாயிருக்கிறேன்" என்று சொன்னார். ஆனால் இயேசு இன்னும் மெல்லிய சத்தத்தில் "நான் உனக்காக என்னை சிலுவையில் ஆணியிலறையப்பட ஆயத்தமாக இருந்தேன்."

யூன், இயேசு "மான்டௌ" ரொட்டியைக் குறித்துதான் பேசுகிறார் என்பதை உணர்ந்தவராக அந்த ரொட்டியை

சாப்பிட மனதற்றவராகத் தனது பையில் போட்டுக் கொண்டார். அதுவரை அவருக்கிருந்த வயிற்றைப் பிடுங்குகிற அளவிலான பசி உடனடியாக மாறி திருப்தியாக விருந்து சாப்பாடு சாப்பிட்டதுபோன்ற ஒரு நிறைவை உணர்ந்தார். தேவனில் ஒரு பெருமகிழ்ச்சி அவரை ஆட்கொண்டது. தேவனை துதிக்க ஆரம்பித்தார். இயேசு தன்னோடு எவ்வாறு நேரிடையாக இடைப்பட்டார் என்பதைக் குறித்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டார். இயேசு நமக்காக சிலுவையில் தமது ஜீவனையே கொடுத்து எவ்வளவு பெரிய காரியத்தை செய்திருக்கிறார் என்றும் அவர் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் நமக்கு சமாதானத்தையும் நமது பாவங்களிலிருந்து நமக்கு மன்னிப்பையும் உண்டாக்கி வைத்திருக்கிறார் என்பதைக் குறித்தும் சொன்னார்.

மறுநாள் காலை உணவு கொடுக்கப்பட்டது. அது வழக்கத்திற்கு மாறாக மிகவும் மோசமாகயிருந்தது. 'சூப்' என்று சொல்லி கொடுத்தார்கள். ஆனால் அது முற்றிலும் தண்ணீர் தான். சிறையிலிருந்த அனைத்து சிறைவாசிகளும் இது தங்களை பட்டினி போடும் திட்டமென ஒன்றுபோல் சொல்லி வைத்தது போல சிறை அதிகாரிகளை திட்டியும் சபித்தும் கத்த ஆரம்பித்துவிட்டனர். யூன் அறையிலிருந்த கொலையாளி மீண்டும் பகைமையினால் நிறைந்து சிறை அதிகாரிகளையும் சிறைக் காவலர்களையும் கடுமையாகத் திட்டி சபித்தான். "என்னைத் தூக்கிலிட்டுக் கொல்வதற்கு முன்பாகப் பட்டினி போட்டே கொல்லப் பார்க்கிறீர்கள்" என்று கத்தினான். அந்த நேரத்தில் "உன்னிடத்தில் வைத்திருக்கும் மான்டௌ ரொட்டியை நீ அவனுக்கு கொடுப்பதற்கு இதுவே சரியான நேரம்" என்று தேவன் யூனோடு பேசினார்.

அந்தக் கொலையாளி மிகுந்த வெறுப்படைந்தவனாக 'சூப்' வைத்திருந்த கோப்பையைத் தரையில் வைத்திருந்தான். யூன் அவனுக்கு முன்பாகச் சென்று முழங்காலில் நின்ற நிலையில் தனது பையிலிருந்த மான்டௌ ரொட்டியை எடுத்து

கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்து சூப் வைத்திருந்த கோப்பைக் குள் போட்டார். அவன் யூனின் கண்களுக்கு நேராக உற்றுப்பார்த்தான். சிறிதுநேரம் பேசுவதற்கு வார்த்தையற்ற நிலையில் யூனையே பார்த்துக்கொண்டிருந்தான். மெல்லிய குரலில் அவன் பேசினான்."அண்ணன், நேற்று இரவு இதை நீங்கள் சாப்பிட வில்லையா?" என்று கேட்டான். "இதுபோன்ற ரொட்டி சாப்பிடுவதற்கு எனக்கு அநேக சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஆனால் உனக்கு அதுபோன்று சந்தர்ப்பம் கிடைக்காது. அதினால் இதை "நான் சாப்பிடவில்லை, நீ சாப்பிடு" என்று யூன் அவனைக் கேட்டுக் கொண்டார். "இன்னும் சில நாட்களில் என்னை தூக்கிலிட்டுக் கொன்று விடுவார்கள். நான் ஆவியாக மாறி இதே அறைக்கு வந்து காலமெல்லாம் உனக்கு உதவி செய்வேன். இந்த நன்றியை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று யூனின் முன்பாக முழங்கால்படியிட்டுச் சொன்னான்.

அந்த நேரத்தில் தேவன் மீண்டும் யூனோடு பேசினார். "அவனுடைய இருதயத்தோடு பேசுவதற்கு இதுவே தருணம். என்னை மகிமைப்படுத்து" என்றார். இந்தக் கொடிய கொலை யாளியிடம் யூன் பேச ஆரம்பித்தார். "உன்னை நேசிப்பது நான் அல்ல, என்னிலிருக்கிற இயேசு உன்னை நேசிக்கிறார்." யூன் மேலும் தொடர்ந்தார். "நீ செய்த பாவங்கள் மிகப் பெரியவை களாக இருந்தாலும், மிகக் கொடியவைகளாக இருந்தாலும் அது ஒரு பொருட்டே அல்ல. **தேவனுடைய குமாரனாகிய இயேசு உன்னுடைய பாவங்களுக்காகவும், பாவங்களுக்கான தண்டனையையும் தன்மேல் ஏற்றுக்கொண்டு மரிப்பதற் காகவே இந்த உலகத்திற்கு வந்தார். உன்னுடைய பாவங் களை அப்படியே ஒப்புக்கொண்டு இயேசுவினிடத்தில் என்னை மன்னியும் என்று கேட்டால் அவர் உடனே மன்னிக் கிறார்**. இயேசுவினிடத்தில் இதைப் பெற்றுக் கொள்ளும் பொழுது நீ மரித்தாலும் நித்திய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நித்தியத்தில் தேவனுடைய அருமையான சமுகத்தில் சதா காலமுமிருக்கலாம்" என்று கூறி தன்னுடைய

அனுபவங்களையும் அவனோடு பகிர்ந்து கொண்டார். அந்தக் கொடிய கொலையாளி அடக்கிக் கொள்ளமுடியாமல் சத்தமிட்டு அழுதான். இயேசுவை தனது இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.

யூனோடு சிறையிலிருந்த கிறிஸ்தவ சகோதரர்கள் மெல்லிய குரலில் ஒன்றுபோல் இணைந்து இந்தப்பாடலைப் பாடினார்கள்.

எனக்கு இயேசு வேண்டும், எனக்கு இயேசு வேண்டும்,
எனக்கு இயேசு வேண்டும்.

என் வாழ்க்கையின் ஒவ்வொருநாளும்
எனக்குஇயேசு வேண்டும்.

மாலை வரும்பொழுது எனக்கு இயேசு வேண்டும்.
என் வாழ்க்கையில் இருள்வரும்பொழுது
எனக்கு இயேசு வேண்டும்.
நான் எங்கிருந்தாலும் பரவாயில்லை
எனக்கு இயேசு வேண்டும்.

*(I need Jesus, I need Jesus, I need Jesus/ Everyday of my life I need Jesus/ when evening comes I need Jesus/ when darkness comes to my life I need Jesus/ no matter where I am. I need Jesus)*

அந்தப் பாடலை அந்தக் கொலையாளி மிகுந்த கவனத் தோடு கேட்டான். யூனிடத்தில் "இந்தப் பாடலை எனக்குச் சொல்லித்தாருங்கள். நான் கற்றுக் கொள்வேன் என்றான். அவன் கற்றுக்கொண்டான்.

சிறை அறையிலிருந்த கிறிஸ்தவ சகோதரர்கள், சிறையில் கிறிஸ்தவ பாடல்களைப் பாடுவதற்கும், இயேசுவின் நாமத்தை உச்சரிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டிருப்பதால் மெல்லிய குரலில் பாடினார்கள். ஆனால் அந்தக் கொலையாளி அந்தப் பாடலை மிகுந்த சத்தமாக சிறை வளாகம் முழுவதும் கேட்குமாப்போல சத்தமாகப் பாடினான். அவனைக் கேட்பதற்கு யாருக்கு தைரிய

மிருக்கிறது? அவன்தான் சில தினங்களில் மரணத்தை சந்திக்கப்போகிறானே. அவன் அவ்வாறு துணிந்து சத்தமாக பாடியதும் அந்த சிறை அறையிலிருந்த மற்றவர்களும் அவனோடு சேர்ந்துபாடினார்கள். பக்கத்து சிறை அறையி லிருந்த கிறிஸ்தவர்கள் சேர்ந்து பாடினார்கள். அடுத்த அறை, அடுத்த அறை, சிறைவளாகம் முழுவதும் இயேசுவின் நாமத்தை உச்சரிக்கும் பாடலால் நிறைந்தது.

இதற்கு மறுநாள் இந்தக் கொலையாளியாகிய புதிய விசுவாசி "சகோதரர் யூன், நான் தூக்கிலிடப்படுவதற்கு முன்பாக ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறேன்" என்று கூறினான். அந்த சிறை அறையிலிருந்த எல்லா கிறிஸ்தவர் களும் அவரவர்களுக்கு குவளையில் கொடுக்கப்பட்ட தண்ணீரை கொடுத்து எவ்வளவு சேர்க்க முடியுமோ அவ்வளவு சேர்த்தார்கள். சிறை அறையில் ஒரு சிறப்பான ஞானஸ்நான ஆராதனையே நடந்தது. அது எல்லோருடைய இருதயத்தையும் அசைப்பதாக இருந்தது. அவன் ஞானஸ்நானம் எடுத்தபின் அவனுக்கு அவனது பெற்றோரைப் பற்றிய பாரம் வந்துவிட்டது. "கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடுகளில் ஊறிப்போன என் பெற்றோரின் நிலை என்னவாகும்? என்று கேட்க ஆரம்பித் தான். "உன்னு டைய பெற்றோருக்காக நீ ஜெபம்பண்ண வேண்டும். தேவன் அவர்களுடைய இருதயங்களைத் திறக்க வேண்டும் என்றும் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டு மென்றும் நீ கேட்க வேண்டும்" என்று யூன் அவனுக்குச் சொன்னார். அவன் தனது குடும்பத்தாரின் இரட்சிப்பை வேண்டி இயேசுவிடம் ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தான். நாள் முழுவதும் ஜெபித்தான். ஒவ்வொருநாளும் ஜெபித்தான்.

"இயேசு இப்பொழுது என் இருதயத்திலிருக்கிறார். நான் சமாதானத்தோடு இருக்கிறேன்" என்று அந்த கொலையாளி மனப்பூர்வமாக யூனிடத்தில் சொன்னான். மேலும் தன்னுடைய ஷர்ட் காலரில் மறைத்து வைத்திருக்கும் ரேசர் பிளேடை சுட்டிக்காட்டி சிறை அதிகாரிகள் என்னைத் தூக்கிலிடுவதற்கு

முன்பாகவே நான் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்தேன் என்ற உண்மையைக் கூறினான். யூன் உடனே ஷர்ட் காலரில் இருந்த பிளேடை எடுத்து வெளியே நின்று கொண்டிருந்த சிறைக்காவலரிடம் ஒப்புவித்தார். சிறைக் காவலருக்கு இந்தக் கொலையாளி சாதுவாக மாறிவிட்டானே என்று பெரிய வியப்பு. இது விபரம் சிறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. அவன் இப்பொழுது தெளிந்த புத்தியோடி ருக்கிறான் எனக் கண்டு அவன் கை விலங்கையும் காலிலுள்ள சங்கிலிகளையும் உடனடியாக கழற்றிவிடும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது. பலமாதங்களுக்குப் பிறகு அவனுடைய விலங்குகள் நீக்கப்பட்டன.

விலங்குகள் நீக்கப்பட்ட அம்மனிதனின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவன் கடைசியாக கடிதம் ஒன்று எழுத விரும்பினான். சிறைக்காவலர்களிடத்தில் ஒரு பென்சிலும் பேப்பரும் கேட்டான். பேப்பர் கொடுக்கப்படவில்லை. ஆனால் உடைந்த ஒரு பென்சிலை எடுத்து உள்ளே போட்டனர். அதில் எழுதுவதற்கான ஈயக்குச்சி இல்லை. வெறும் மரக்கட்டைப் பகுதி மட்டும்தான் இருந்தது. எனினும் இவற்றை ஒரு தடையாக நினைத்து சோர்ந்து போகாமல் கழிப்பறையிலிருக்கும் துடைக்கும் பேப்பரை (**TOILET PAPER**) எடுத்துக்கொண்டான். தன்னுடைய பற்களின் ஊனை காயப்படுத்தி அதிலிருந்து வடியும் இரத்தத்தை பென்சில் மரக்கட்டை பகுதியைத் தொட்டு எழுத ஆரம்பித்தான்.

## அன்புள்ள அப்பா, அம்மா

உங்களுடைய மகன் இப்பொழுது இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டான். ஆனால் எனக்காக நீங்கள் கவலைப்படவோ, அழவோ கூடாது. நான் நரகத்திற்குப் போய்விடவில்லை. நான் பரலோகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய வாழ்க்கையின் கடைசி கட்டத்திற்கு வந்தபோது இயேசு கிறிஸ்து சகோதரர் யூன் மூலமாக அவருடைய அளவற்ற

கிருபையை எனக்கு அனுப்பித்தந்தார். ஆகவே நான் இயேசுவை கண்டுகொண்டேன். நான் பரலோகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன். எனக்கு மிகவும் அன்பான அப்பா, அம்மா நான் மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட நேரம் முதற்கொண்டு, இந்த இயேசுவை நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் கண்டுகொள்ள வேண்டும் என்று இடைவிடாமல் ஜெபிக்கிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்தால் மாத்திரமே பரலோகத்தில் நீங்கள் என்னை சந்திக்க முடியும்"

என்று எழுதி முடித்தான். இதை எழுதிய இரண்டாவது நாள் அவன் தூக்கிலிடப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டது.

யூன், சிறையிலிருந்து விடுதலையாகும்வரை இந்த அருமையான கடிதத்தை பத்திரமாக பாதுகாத்து வைத்துக் கொண்டார். விடுதலை யானதும் இந்தக் கடிதத்தை அவனது பெற்றோரிடத்தில் கொண்டுபோய் சேர்த்தார். தங்களுடைய மகனின் சொந்த இரத்தத்தால் எழுதிய கடிதத்தை படித்த உடனேயே இருவரும் முழங்காற்படியிட்டு இயேசுவை அவர்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

யூன், நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை முடித்து விடுதலையாவதற்கு சுமார் 100 நாட்களுக்கு முன்பு பொதுபாது காப்புப் பிரிவினர் (**PSB**) யூனுடைய வீட்டிற்குச் சென்று அவரது வீட்டை முழுமையாக சோதனை நடத்தியுள்ளனர். அப்பொழுது யூன் சிறையிலிருந்து தனது குடும்பத்தாருக்கு எழுதிய கடிதங் களைக் கைப்பற்றியுள்ளனர்.அவற்றிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சிறைக்குச் சென்று அவரது சிறைஅறையைச் சோதனை செய்து யூன் அவ்வளவு நாட்களாக வைத்திருந்த வேதாகமத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். உடனடியாக யூனைக் கட்டி சித்திரவதை செய்யும் (**TORTURE ROOM**) அறைக்குக் கொண்டு சென்றனர். அவரை விசாரணை செய்த அதிகாரி யூனின் மீது அநேக குற்றச்சாட்டுகளைக்

கூறினான். "நீ சிறையிலிருந்து கொண்டே அநேகரை மதமாற்றம் செய்திருக்கிறாய். உன்னைத் தொடர்ந்து சிறையில் வைத்தாலே சிறைவாசிகள் அனைவரையுமே நீ மனமாற்றம் செய்து விடுவாய் என நாங்கள் அஞ்சுகிறோம்" என்று மிகவும் கோபமாகப் பேசினார். யூன் இதைக்கேட்ட போது தன்னுடைய இருதயத்தில் அமைதியாக மகிழ்ச்சியடைந்தார்.

## தனிமைச் சிறை

இந்த விசாரணையின் போது யூனை சாட்டை, முரட்டுக் கயிறு இவற்றைக் கொண்டு பயங்கரமாகத் தாக்கி மீண்டும் இரத்தக் காயப்படுத்திவிட்டனர். அவரது சரீரத்தில் பல இடங்களிலிருந்து இரத்தம் வடிய ஆரம்பித்தது. யூன் சிறைச் சாலையில் இருக்கவேண்டிய மீதமுள்ள நாட்களில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட வேண்டுமென்றும் கைகளில் எப்பொழுதும் விலங்கிடப்படவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டு அப்படியே அவருக்குச் செய்யப்பட்டது. அந்த தனிமைச்சிறை 4 அடி உயரம், 4 அடி நீளம் 30 அங்குல அகலமுள்ளது. அவரால் படுக்கவும் முடியாது நிற்கவும் முடியாது. மேலும் அந்த அறை குளிர்சாதனப் பெட்டி போல கடுங்குளிராக இருக்கும். தரை எப்பொழுதும் ஈரமாகவே இருக்கும். சரியான இருட்டறை. அடைக்கப்பட்ட வாசலிலுள்ள ஒரு சிறிய ஓட்டைவழியாக மாத்திரம் சிறிது வெளிச்சம் தெரியும்.

யூன் தனிமையில் மிகவும் வாடினார். இந்நிலையிலிருந்து சுமார் 10 நாட்கள் அவர் ஜெபத்தில் தேவனோடு பேசினார். "ஆண்டவரே, எல்லா காலங்களிலும் நான் உமக்கு மிகவும் நன்றியுள்ளவனாகயிருக்கிறேன். எனக்கு ஒரு வேதாகமம் இருக்குமானால் எவ்வளவு நாட்களானாலும் நான் சிறையிலிருப்பேன். கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நீர் அறிவீர். நான் வேதாகமத்தை வாசிக்க விரும்புகிறேன்". யூன் இவ்வாறு ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே ஒரு தரிசனத்தைக் கண்டார். யூன் கைவிலங்குகள் இல்லாமல்

தனிமைச் சிறையிலிருந்து விடுதலையாக நடந்து செல்வதைப் போன்று தரிசனத்தில் கண்டார். யூன், இது தேவனிடத்திலிருந்து வந்த தரிசனம் இது நடக்கப் போகிறது என்று எடுத்துக் கொண்டார். ஆனாலும் அவர் தேவனிடத்தில் மீண்டும் முறையிட்டார். “ஆண்டவரே, என் கைவிலங்குகள் எப்படி திறக்கும்?” என்று கேட்டார். தேவன் “நீ உன் கைகளை அசை அவைகள் திறக்கும்” என்றார். யூன் அப்படியே செய்தார் கைவிலங்குகள் திறந்தன.

மறுநாள் சிறைக் காவலர் ஒருவர் வந்து அறைக் கதவைத் திறந்தார். அவர் உள்ளே வந்து யூனிடத்தில் வழக்கத்திற்கு மாறாக மிகுந்த மரியாதையுடன் பேசினார். “நாங்கள் கூடி உன்னைக் குறித்து விவாதித்தோம். உனக்கு மத சுதந்திரம் (RELIGIOUS FREEDOM) அளிப்பது என்றும் வேதாகமத்தைத் தருவது என்றும் முடிவு செய்திருக்கிறோம். நீ வேதாகமத்தை வாசிக்க வேண்டும்” என்று கூறினார். இதே சிறைக்காவலர்கள் எந்த சிறைவாசியாவது வேதாகமம் வைத்திருக்கிறானா, வாசிக்கிறானா என்று மிகுந்த விழிப்போடு கண்காணித்து, அப்படி வைத்திருப்பதைக் கண்டால் வேதாகமத்தைப் பறிமுதல் செய்வது மாத்திரமல்ல வைத்திருப்பவனைக் கடுமையாகத் தண்டிப்பார்கள். பறிமுதல் செய்த வேதாகமத்தை எரித்து அழித்து விடுவார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் யூனுக்கு வேதாகமத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுகிறார்கள். இது நிச்சயமாக சிறை அதிகாரிகளால் கூடாத காரியம். ஆனால் தேவன் யூனின் ஜெபத்திற்கு இரங்கி வேதாகமத்தைக் கொடுத்திருக்கிறார். யூனிடம் சிறைக்காவலர் வேதாகமத்தை படிக்கும்படி சொல்லவேண்டிய அவசியமே இல்லை. மீதமிருந்த 90 நாட்களிலும் வேதாகமத்தைப்படித்து தேவனுடைய வார்த்தைகளை விழுங்கி இரவும் பகலும் அவற்றை தியானித்தார். 55 அதிகாரங்களை இந்த நாட்களில் மனப்பாடம் செய்தார்.

## யூன் விடுதலை

1988ம் ஆண்டு ஜனவரி 25ம் நாள் சரியாக 4 ஆண்டுகளை சிறையில் முடித்து "பரலோக மனிதன்" விடுதலை செய்யப்பட்டார். 800 பேர் அடங்கிய சிறையில் 600 விசுவாசிகளை உருவாக்கினார். சிறையிலிருந்து விடுதலையாகி வீட்டிற்கு வந்து சிறிது நேரத்தில் பொது பாதுகாப்புப் பிரிவினர் (PSB) யூனை மீண்டும் அழைத்து அனுப்பினார்கள். அவர்கள் யூனை மிகக் கடுமையாக எச்சரித்து யூன் எப்படி நடக்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை விளக்கிச் சொன்னார்கள். "நாங்கள் உனக்கு முன்பே சொல்லியிருக்கிறோம். 'நாட்டு பற்றுள்ள சபை' மட்டுமே அரசு அங்கீகாரம் பெற்றது. ஆகவே அங்கீகாரம் பெற்ற சபையில் மாத்திரமே அங்கத்தினராக இருக்க வேண்டும். வீடுகளில் கூடுகிற சபைகள் சட்ட விரோதமானவைகள். அப்படிப்பட்ட சபைகளில் கூடுகிறவர்கள் அனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்று எச்சரிக்கை விடுத்தனர்.

"சட்ட விரோதமான நடவடிக்கைகள்" என்று அவர்கள் குறிப்பிட்டதைச் செய்தால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை யூன் நன்கு அறிந்திருந்தார். ஆனாலும் உடனடியாக பிரசங்கிக்கவும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கானப் பயிற்சியைத் துவக்கவும் அவருக்குள் ஏவப்பட்டார். யூன், பரிசுத்த ஆவியின் முழு நிறைவோடும் முன்பிருந்ததை விடப் பெரிய வல்லமையுடன் ஊழியத்தை செய்ய ஆரம்பித்தார். சுவிசேஷம் காட்டுத் தீ போல பரவியது. ஆயிரக்கணக்கான மக்கள் தேவன் பக்கமாகத் திரும்பினார்கள். முன்பு சிறையில் அமைதியோடு உபவாசமிருந்தார், அதன் பலனாகப் பெரிய அறுவடையை இப்போது அவர் கண்டார். ஆனால் சத்தியத்தை பிரகடனப்படுத்துகிற அவரை இப்பொழுது எந்த வல்லமையும் அமைதிப்படுத்த முடியாது.

“இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல் களை தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளை யாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரரார் உம்முடைய வசனத்தை முழு தைரியத் தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள். அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்” *(அப். 4:29–31)*

# 6

## அபிஷேகிக்கப்பட்ட ஊழியம்

சகோதரர் யூன் 1988–ம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதில் மிகுந்த மகிழ்ச்சிடையந்தாலும் சில பழக்க வழக்கங்களை விட்டுவிடுவது என்பது அவருக்கு மிகக் கடினமான காரியமாக இருந்தது. சிறையில் அவருடைய ஆவிக்குரிய ஐக்கியம் மிக ஆழ்ந்திருந்தது. அவரது அறையி லிருந்த யாவருமே நல்ல விசுவாசிகளாக மாறிவிட்டனர். எனவே அழுகிற சூழ்நிலை வரும்போது ஒன்றாக அழுதார்கள். ஒன்றாக உபவாசமிருந்தனர். ஒன்றாகக் கஷ்டப்பட்டார்கள். அது ஒரு பெரிய கட்டுக்கோப்பை உருவாக்கிற்று. ஒருவருக் கொருவருள்ள ஆவிக்குரிய உறவு நிலை உயர்ந்ததும், தனித்தன்மை வாய்ந்ததுமாயிருந்தது. பாடுகளின் மூலமாகத் தான் இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள். பாடுகளின் மூலமாகத்தான் இயேசுவோடு ஐக்கியப் பட்டுக் கொண்டார்கள். அப்படிப் பெற்றுக் கொண்ட ஐக்கியத்தின் தன்மை உயர்ந்ததாயிருந்தது.

ஆனால் வெளியே வந்தபின் அப்படிப்பட்ட நிலையில் குறைவு இருந்ததை உணர்ந்தார். ஆனாலும் கூட மிகுந்த உற்சாகத்தோடு ஊழியத்தில் ஈடுபட ஆரம்பித்தார். அவர் சிறையிலிருந்து விடுதலையான நேரம் சீனாவின் சபை வரலாற்றில் மிக முக்கியமான கட்டமாக இருந்தது. ஏனெனில் சீனா முழுவதும் பரிசுத்த ஆவியைப்பற்றிய உணர்வும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடும் மிகப்பெரிய வல்லமை நிறைந்த

தாயிருந்தது. படிப்பறிவற்ற இந்த சகோதரர்களை தேவன் வல்லமையான கருவிகளாக பயன்படுத்தினார். அவர்கள் மூலமாக அற்புதங்கள், ஆச்சர்யமான நிகழ்ச்சிகள் சம்பவிக் கவும் அதன் மூலம் முழு சீனாவிலும் தேவ மகிமை வெளிப்படவும் தேவன் செயல்பட்டார். பல குழுவினர்களாகப் பிரிந்து சீனா நாடு முழுவதற்கும் பரவிச் சென்று அடையாளங்கள் அற்புதங் கள் மூலமாக இயேசுவின் சாட்சியை உறுதிப்படுத்தி ஸ்தாபித் தார்கள்.

அக்குழுவினர் கிராமங்களுக்குச் செல்லும்பொழுது பிசாசு பிடித்தவர்கள், பொல்லாத ஆவிகளால் பிடிக்கப்பட்டவர்கள் அவர்களைக் கண்டமாத்திரத்தில் உடனடியாக விடுதலை பெற்றனர். ஏனெனில் அந்த தீய ஆவிகள் தேவமகிமையின் சமுகத்தை அவர்களில் கண்டன. ஆவிக்குரிய உலகில் வெளிப்படையான செயல்பாட்டைக் காணமுடிந்தது. இச்சுவி சேஷகர்களால் நூற்றுக்கணக்கான செவிடர், பார்வையற்றோர், ஊமையர், ஆச்சரியமானவகையில் குணமாக்கப்பட்டனர். ஏனெனில் பரிசுத்த ஆவியின் வல்லமையான சமுகம் செயல் பட்டது. மேலும் மிகுந்த தைரியத்தோடு சிறப்பு ஆராதனைக் கூட்டங்களை கிராமங்களில் ஒழுங்கு செய்து கிறிஸ்தவர் களையும், நோயுற்றவர்களையும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர் களையும் அக்கூட்டங்களுக்கு அழைத்து வரவும் முன் ஏற்பாடு களை செய்தனர். யூனும் மற்றும் சகோதரர்களும் நோயுற்ற மக்கள் மீது கைகளை வைக்கும் பொழுது நூற்றுக்கணக் கானோர் அற்புத சுகத்தை பெற்றுக் கொண்டனர். அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் இயேசுவின் சாட்சிகளாக கிராமங்கள் தோறும் அறிவித்தனர். சுவிசேஷத்தின் வல்லமை யை எங்கும் பிரகடனப்படுத்தினார்கள். கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட அற்புத சுகத்தைக் கண்டபொழுது அவர்கள் விசுவாசத்திலே பெருகினார்கள். நோயுற்றவர் களுக்காக அதிக அதிகமாக ஜெபிக்கும் பொழுது அநேக அற்புதங்கள் நிகழ்வதைக் கண்டார்கள்.

1988–ம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1989–ம் ஆண்டு 1990–ம் ஆண்டுகளிலும் பரிசுத்த ஆவியின் அக்கினியும் தேவனுடைய மகிமையும் இரண்டும் இணைந்தே வல்லமையாகக் காட்டுத் தீ போல் எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாக ஆன்கூன், ஹெனான் ஆகிய மாவட்டங்களில் பரவிச் செயல்பட்டன. பரிசுத்த ஆவியின் சமுகம் மிகுந்த பெலனாய் செயல்பட்டது. கூட்டங்களுக்கு வருகிற மக்கள் பரிசுத்த ஆவியின் சமுகத்தின் கீழ்வரும் பொழுது குற்ற உணர்வு ஏற்பட்டு தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டனர். அடிக்கடி குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூட்டம் நடக்கயிருக்கிறது என்பதை அறிவிப்பு கொடுத்தால் போதும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் அந்த இடத்திற்கு வந்துவிடுவார்கள்.

பெருங்கூட்ட மக்கள் கூட்டங்களுக்கு வருவார்கள். கிராமங்களிலும் கூட சுமார் ஆயிரத்திலிருந்து மூவாயிரம் வரையிலான மக்கள் கூட்டத்திற்கு கூடிவருவார்கள். மக்கள் ஆச்சரியமானவகையில் குணமடைந்தார்கள். காவல்துறையினர் இதைக் கேள்விப்பட்டு அஞ்சி அவர்கள் யாரும் கூட்டங்கள் நடக்கும் பகுதிக்கு வருவதே இல்லை. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் நடப்பதை அறிந்திருந்தாலும் கூட வெளிப்படையாகவே அற்புதங்கள் நடப்பதால் அவர்கள் காவல் நிலையத்திலேயே இருந்து கொள்வார்கள்.

1989, 1990–ம் ஆண்டுகளில் மக்கள் தங்களுடைய இடத்திற்கு வந்து போதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்கு ஏற்ப ஊழியக்காரர்களை ஆங்காங்கே அனுப்பி வைக்கத் துவங்கினார்கள். அவர்களுக்கு ஒரு வழிப்பயணத்திற்கு மாத்திரம் பணம் கொடுத்தனுப்பி அங்கே சபைகளை உருவாக்க அனுப்பிவைக்கப்பட்டனர். அதில் அநேக ஊழியக்காரர்கள் அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் சபைகளை நிறுவினார்கள். சபைகளை வெற்றிகரமாக நிறுவிய பின்னரே அவர்கள் தலைமையகத்திற்கு திரும்பி வந்தனர்.

ஆங்காங்கே நிறுவப்பட்ட சபைகளை அங்குள்ளவர்களே நிர்வகித்துக் கொள்ளும் முறையில் அமைக்கப்பட்டன. 100 பேர் கொண்ட சபைகளில் மிகக் குறுகிய காலத்திற்குள் மீண்டும் செல்லும் பொழுது அது சுமார் 300 பேர்களைக் கொண்ட சபையாக வளர்ந்திருந்தது. ஒவ்வொரு சபைகளிலும் இப்படிப் பட்ட வளர்ச்சி மிக வேகமாகயிருந்தது. ***100, 300 ஆக மாறுவதுதான் பரலோக கணக்கு*** என அவர்கள் மகிழ்ச்சி யோடு கூறுகின்றனர்.

## ஆவிக்குரிய யுத்தகளம்

ஒரு முறை அன்ஹரய் என்ற மாவட்டத்தில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். சுமார் 2000 மக்கள் கூடியிருந்தனர். சகோதரர் யூன்தான் அந்தச் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார். அந்த மாவட்டம் முழுவதுமே நன்கு அறியப்பட்ட நான்குபேரை அந்தக் கூட்டத்திற்குக் கொண்டுவந்திருந்தனர். நான்குபேருமே பிசாசு பிடித்த மிகப் பயங்கரமானவர்கள். அவர்களது பயங்கரமான செயல்களை அறிந்த காவல்துறையினரே எல்லா நேரமும் கைவிலங்குடனே இருக்க ஏற்பாடு செய்திருந்தனர். அதில் ஒருவன் ஒரு சபை பாஸ்டரை கொலை செய்வதற்குப் பலமுறை முயற்சி செய்தான். அந்த பாஸ்டர் தன்னுடைய காலில் விழுந்துத் தன்னை தொழுது கொள்ளாதவரை அவரை விடப்போவதில்லை என்று சவால் விட்டு கத்துவான். சபையார் அவனுடைய விடுதலைக்காகத் தொடர்ந்து ஜெபித்தும்கூட அவனுக்கு விடுதலை கிடைக்க வில்லை. சபைக்கு அது ஒரு பெரும் சவாலாகவே இருந்தது.

அன்று கூட்டத்தில் தேவனுடைய கிருபையைக் குறித்தும் அவர் அருளும் இரட்சிப்பைக் குறித்தும் பிரசங்கித்து முடித்து விட்டு நோயுற்றவர்களுக்காகவும், பிசாசுபிடித்திருக்கிறவர் களுக்காகவும் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். சிலர் உடனடியாக குணமடைநதார்கள். ஆனால் மற்றவர்களைக் கொலை செய்யும் ஆவிபிடித்த அந்த மனிதனுக்கு விடியற்காலை 4 மணிவரை

ஜெபத்தில் போராடியும் அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. நான்கு பாஸ்டர்கள் மாறிமாறி ஜெபித்து அப்பிசாசை விரட்டப் பிரயாசப்பட்டனர். ஆனால் அந்தப் பிசாசு அவனை விட்டுப் போவதாக இல்லை. அவன் எல்லா பாஸ்டர்களையும் தூஷண மான வார்த்தைகளால் பேசி சபித்தான். குறிப்பாக சகோதரர் யூனைக் கொல்லாமல் விடப்போவதில்லை என்று கத்தினான். சகோதரர் யூனைப் பார்த்து "பிசாசுகளை விரட்டுவதற்கு உனக்கு வல்லமை இருப்பதாகச் சொல்லுகிறாய். சில பிசாசு களையும் விரட்டியிருக்கிறாய். ஆனால் உன்னால் என்னை விரட்ட முடியாது. நான் எங்கும் போகப் போவதில்லை" என்றான்.

தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்படுகிற இரண்டு அபிஷேகிக்கப்பட்ட சகோதரர்களை ஜெபத்தில் போராட உதவிக்குச் சேர்த்துக்கொண்டு சகோதரர் யூன் ஜெபிக்க ஆரம்பித் தார். அந்த பயங்கரப் பிசாசு பிடித்தவனை தரையில் உட்கார வைத்து அவனை சுற்றி நின்று ஜெபிக்க ஆரம்பித் தார்கள். அவனைச் சுற்றி நடந்து மன்றாடி ஜெபித்தனர். எப்படி எப்படி யெல்லாமோ ஜெபித்துப் பார்த்தனர். ஆனால் அவனில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அவர்கள் அந்த ஆவியைக் கட்ட வெகுவாய் முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை.

கடைசியாக அவர்களது முயற்சியை விட்டுவிடும் நிலைக்கு வந்துவிட்டனர். அவர்கள் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து, 'ஆண்டவரே, எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று தேவனை நோக்கி முறையிட்டனர். திடீரென்று தேவனுடைய வல்லமையான ஆவி எல்லா சகோதரர்கள் மீதும் இறங்கியது. வல்லமை இறங்கிய மாத்திரத்தில் பிசாசு பிடித்த அந்த மனிதன் நடுங்க ஆரம்பித்தான். அந்த நேரமே அந்த மனிதன் ஆச்சரியமாக விடுதலையடைந்தான். யூனும் அவரோடு கூடயிருந்த சகோதரர் களும் அன்று விளங்கிக் கொண்ட காரியம் என்னவெனில் தங்களால் ஒன்றுஞ் செய்யமுடியாது என்ற இயலாமையுடன்

தேவனிடத்தில் முற்றுமாய் ஒப்புவிக்கும்பொழுது அவர் பொறுப் பேற்று நடத்துகிறார் என்பதுதான்.

இந்த பெரிய அபிஷேகத்தோடு கூடிய காலத்தில் ஊழியக் காரர்கள் நடு இரவுக்கு முன்பாக ஒரு நாளும் படுக்கைக்குப் போவதில்லை. காலை 5 மணிக்குப் பின் அவர்கள் தூங்கு வதில்லை. ஜெபத்திலேயே தரித்திருந்தார்கள். சீனாவில் வெற்றி கரமான சபை அமைப்புக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டனர். கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் முக்கிய மாக கீழ்க்கண்ட காரியங்களில் மிகவும் விழிப்புடனிருந்து செயல்படக்கற்றுக் கொடுக்கப்பட்டனர்.

1. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றி நிற்க எப்பொழுதும் எந்த இடத்திலும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

2. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தங்களுடைய சாட்சியைப் பகிர்ந்து கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும்.

3. சுவிசேஷத்திற்காகப் பாடுபட ஆயத்தமாயிருக்க வேண்டும்.

4. சுவிசேஷத்திற்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

5. சுவிசேஷத்திற்காக சிறையிலடைக்கப்பட்டால் சிறையிலி ருந்து தப்பித்துச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ ஊழியர்களிடத்தில் கிறிஸ்தவ தலைவர்கள் எதிர்பார்க்கிற காரியங்கள் இவைகள்தான். பின்வரும் சந்ததியிலுள்ள ஊழியக்காரர்களும் இந்தக் காரியங்களில் பயிற்சியடைய வேண்டும் என்பதுதான் அவர்களது எதிர்பார்ப்பு. தேவன் தருகிற, கட்டளையிடுகிற எதுவாயினும் அதை மனப்

பூர்வமாக ஏற்றுக் கொள்ள அவர்கள் கிறிஸ்தவ ஊழியக் காரர்களை பயிற்றுவிக்கிறார்கள். இன்று சீனாவிலிருக்கும் ஒவ்வொரு பாஸ்டருமே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காய் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். தேவன் அவர்களுடைய ஜீவியத்திற் கென்று என்ன வைத்திருக்கிறார் என்பது ஒரு பொருட்டல்ல, சுவிசேஷத்திற்காக அவர்கள் மரிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் உபத்திரவங்களை நீக்கிவிடும் என்று ஜெபிப்பதில்லை. ஆனால் எந்த சூழ்நிலை களையும் சந்திக்கத்தக்கதான அசையாத விசுவாசத்தையும் அவற்றின் மத்தியிலும் தேவனை பிரசங்கிக்கத்தக்கதான தைரியத்தையும் தரும்படி ஜெபிப்பார்கள். கிறிஸ்தவ ஊழியர்கள் தைரியமான சாட்சியாக இருக்கும்படி போதிக்கிறார்கள். தங்களது சாட்சிகளைக் கேட்க மக்கள் கூட்டம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்காமல் அங்கு நின்று கொண்டிருக்கும் காவல்துறையினருக்குத் தங்களுடைய சாட்சியைப் பகிர்ந்து கொள்ளும்படி போதிக்கப்படுகிறார்கள்.

## சிறைச்சாலையிலும் ஆண்டவருக்கென்று தசமபாகம்

சபைத்தலைவர்கள் ஆண்டவருக்கென தங்களது வருமானத்தில் தசமபாகம் செலுத்த போதிக்கின்றனர். எப்பொழுது ஊழியக்காரரும் விசுவாசியும் சிறையிலிருந்தாலும் தசமபாகம் செலுத்தத் தீர்மானமாக யிருக்கின்றனர். சிறையில் கட்டாயக் கடினவேலை (**FORCED HARD LABOUR**) செய்யும் பொழுது சிறு ஊதியமளிக்கின்றனர். அதிலிருந்தும் அவர்கள் தசமபாகம் செலுத்துகின்றனர். யூன் சிறையிலிருந்த சமயத்தில் 1000 கைதிகளுடன் ஒரு நாளைக்கு பதினான்கு மணி நேரம் வாரத்தில் ஏழு நாட்களிலும் கட்டாய கடின வேலையில் நியமித்தார்கள். சிறையில் கொடுக்கப்படும் உணவு அவர்களை பலவீனமாக வைத்துக்கொள்ளவதற் கென்றே அளவிட்டு கொடுக்கப்படும். மாதம் முழுவதும் 98 மணி நேரவேலைக்கு 30 சதம் (**30 CENTS**) ஊதியமாகக் கொடுப்பார்கள். அவர்களது

பணத்தேவை மிக நெருக்கமாக இருந்தாலும் கிடைக்கும் பணத்தில் தசமபாகத்தைச் சேகரித்து சபைகளுக்கு அனுப்பு வார்கள். எல்லா கிறிஸ்தவர்களும் இந்தக் காரியத்தில் முற்றிலும் உண்மையுள்ளவர் களாயிருக்கின்றனர்.

## பாடுபடும் சபை

சகோதரர் யூன், 1 பேதுரு 4:1,2–லுள்ள "இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்தி லிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத் தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" என்ற காரியங் களை ஆழ்ந்து சிந்திக்கலானார். சகோதரர் யூன் "இது மிகவும் உண்மையானது என்பதை நான் விசுவாசிக்கிறேன். சீன மொழியில் '**பாடுபடுகிறவன் பாவம் செய்யாதிருக்கிறான்**' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அப்படிப்பட்ட நிலையை இன்னும் எட்டவில்லை. நான் பாடுபடுகிற அதே வேளையில் தேவனிடத்தில் முறையிடுகிறவனாகத்தான் இருக்கிறேன். '**பாடுகள் பெருகும்போது பாவம் செய்வது குறைந்து விடுகிறது**' என்பதை விசுவாசிக்கிறேன். ஆனாலும் நான் அப்படிப்பட்ட சித்தத்திற்கு இன்னும் வரவில்லை" என்று கூறுகிறார்.

சகோதரர் யூன் மேலும் 'சிறையிலிருக்கிற மக்கள்தான் பாடுபடு கிறவர்கள் என்று கூறிவிடமுடியாது. மேற்கத்திய நாடுகளிலுள்ளோர் சுயாதீனராக இருந்தாலும் ஆவிக்குரிய தன்மையில் பாடுபடு கிறவர்களாகயிருக்கின்றனர். அநேக மக்கள் என்னுடைய சிறை வாழ்க்கை அனுபவங்களைக் கேட்கும்போது "மிகப் பயங்கரமான ஒரு சூழ்நிலையை நீங்கள் சிறையில் கடந்து சென்றிருக்கிறீர்கள். இல்லையா? என்று கூறுவார்கள். அப்பொழுதெல்லாம் நான் அந்நாட்களிலெல்லாம்

இயேசு வோடிருந்தேன். மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த வனாக அவரது உண்மையான சமுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன் என்று பதிலளிப்பேன்" என்று கூறுகிறார்.

"தேவனுடைய சமுகத்தை அனுபவிக்காத, உணராத மக்கள்தான் உண்மையிலேயே பாடுகளை அனுபவிக்கிற மக்கள். அவர்கள் மேற்கத்தியர், கிழக்கத்தியர் என்பது ஒரு பொருட்டல்ல. அவர்கள் யாராயினும் நாம் சுமக்க வேண்டிய ஒன்றிருக்கிறது. அதுதான் சிலுவை. கிழக்கத்திய நாடுகளி லுள்ள சபைக்கு தேவன் நியமித்த சிலுவை உபத்திரவங்களும், பாடுகளும், தனிமையும்தான். சீனாவிலுள்ள பாஸ்டர்களுக்கு ஒரு கடினமான காரியம் என்னவென்றால் அவர்கள் கைது செய்யப்படும் போது எவ்வளவு நாட்கள் அவர்கள் சிறையிலி ருக்க வேண்டு மென்பது அவர்களுக்கு தெரியாது. மேற்கத்திய நாடுகளிலுள்ள சபை இப்படிப்பட்ட கடினமான பாடுகளை ஒரு வேளை தாங்கிக்கொள்ள முடியாததாகயிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு வேறுவிதமான சிலுவையைக் கொடுக்கிறார்" என்று கூறுகிறார்.

## அடிமையின் உரிமை

சகோதரர் யூனிடத்தில் சீனாவில் பாஸ்டர்களுடைய உரிமையைக் குறித்து அவருடைய கருத்து என்ன என்று அடிக்கடி அவரிடத்தில் கேட்டகப்படுவதுண்டு. "சீனாவிலுள்ள ஒரு பாஸ்டருக்கு எந்த உரிமையும் கிடையாது. ஒரு அடிமைக்கு என்ன உரிமைகளிருக்கிறதோ அந்த உரிமைகள்தான் அவருக்கிருக்கிறது." ஒரு அடிமை கூடுதலாய் உரிமையைக் கேட்பானானால் பாடுகள்தான் கூடும். நம்முடைய உரிமைகள் இயேசுவின் கரங்களில் இருக்கின்றன. நாம் முழங்காலில் நின்று அவரிடம்தான் விண்ணப்பிக்க வேண்டும். சீனாவிலுள்ள மனித உரிமை இயக்கங்களைக்குறித்து எனக்கொன்றுமில்லை. ஏனெனில் உரிமைக்கென்று செல்லும் வேளைகளிலெல்லாம் உபத்திரவங்கள்தான் கூடியிருக்கின்றன என்பதை நான் கண்டிருக்கிறேன். அதை அனுபவித்திருக்கிறேன்.

68

## தொடர்கதையாகிவிட்ட சிறைவாசம்

சகோதரர் யூன் சீனா தேசம் முழுவதும் மிகுந்த வல்லமை யோடு ஊழியத்தைத் தொடர்ந்தார். ஆனால் மீண்டும் தனது சொந்த மாவட்டத்தில் வைத்து 1991–ல் கைது செய்யப்பட்டார். மூன்று ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் தண்டனை காலம் முடிவதற்கு முன்பாகவே 1993–ஆம் ஆண்டு இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டார். 1994–ஆம் ஆண்டு சில சகோதரர்களோடு கூட்டம் நடத்திக் கொண்டிருந்த வேளையில் இரண்டு காவலர்கள் துப்பாக்கியுடன் வந்து யூனைப் பிடித்துக் கொண்டனர். யூனையும் அவர் மனைவியையும் ஒரு அறையில் உட்காரவைத்து ஒரு காவலரை அவர்களைப் பார்த்துக்கொள்ள விட்டுவிட்டு மற்றவர் கிராமத்திற்குள் சென்று அவர்களை காவல் நிலையம் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்ய சென்றுவிட்டார். அந்த வேளையில் ஆண்டவர் சகோதரர் யூனை "எப்படியேனும் இங்கிருந்து தப்பிவிடு" என்று கூறினார். யூன் தப்புவதற்கு வழி தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்த நேரத்தில் யூனைக் காவலர்கள் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட சில கிறிஸ்தவ தாய்மார்கள் அவரை வைத்திருந்த வீட்டின் முன்பாக கூடிவிட்டனர். அவர்கள் யூனைக் கைது செய்து கொண்டு செல்வதை விரும்பவில்லை. ஒரு வயதான தாய் ஒரு பலகைப் பெட்டியை எடுத்து சந்தேகப் படாத வகையில் காவலர் பின்பாகச் சென்று பெட்டியை அவர் தலையில் போட்டு மூடிவிட்டார். அவர் துப்பாக்கியை கீழே போட்டுவிட்டு இரண்டு கைகளாலும் பெட்டியை எடுக்க முயற்சிக்கும் வேளையைப் பயன்படுத்தி யூனும் அவரது மனைவியும் தப்பிவிட்டனர். ஆனால் 1995–ல் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

சீனாவில் கிறிஸ்தவ ஊழியக்காரர்களுள் அநேக முறை சிறைக்குச் சென்றவர் சகோதரர் யூன்தான். 30 முறைகளுக்கும் மேலாக அவர் சிறைசென்றுள்ளார். சகோதரர் யூன்தான் அநேக முறை சிறையிலிருந்து தப்பித்திருக்கிறார். சகோதரர் யூனைக் குறித்து சீனாவிலுள்ள ஒரு கிறிஸ்தவ தலைவர் "சீனாவிலுள்ள

கிறிஸ்தவ போதகர்களுள் அவர்தான் மிகக் கொடூரமாக அடிக்கப்பட்டவர்'' என்று கூறினார்.

## அவர்கள் ஒன்றாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

1992–ம் ஆண்டு தேவன் தெளிவாக ஒரு காரியத்தை யூனோடு பேசினார். சீனாவில் ஆங்காங்கே பிரிந்து செயல்படும் வீட்டு சபைகள் அனைத்தும் (**ALL HOUSE CHURCH**) ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்ற தேவ விருப்பம்தான் அது. “ஒரே தரிசனம் உள்ளவர்களைக் கண்டுபிடித்து அனைவரையும் ஒன்றாக்கி ஒன்றாகத் திட்டமிட்டு சபை செயல்பட வேண்டும்'' என்று தேவன் பேசினார். ஆனால் யூனுக்கு இது மிக் கடினமான ஒரு வேலையாகத் தோன்றியது. ஏனெனில் பல ஆண்டுகளாக ஒவ்வொரு சபைக் கூட்டத்தாரும் மற்றவர்களை “தவறான சபைமரபின் கூட்டத்தார்'' (**CULT AND SECTS**) என்று குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர். தேவன் தெளிவாகப் பேசினார். “யூன், நீ போய் இந்தத் தலைவர்களையெல்லாம் சந்தித்து பேசு. அவர்கள் ஒருவருக் கொருவர் வைத்துள்ள விரோத நிலையை மாற்றிக் கொள்ளட்டும்'' என்று கூறினார். ஆனால் யூன் இதைக் கேட்டபோது கீழ்படியாமல் இது சாத்திய மான காரியம் அல்ல என்று எண்ணி தேவன் சொன்னபடி எந்தக் காரியத்தையும் செய்யாமலிருந்துவிட்டார். “ஆண்டவரே, இந்த ஒருங்கிணைப்பு வேலைக்கு என்னை ஏன் தெரிந்துகொண்டீர் கிறிஸ்தவ தலைவர்களுள் நன்கு கற்றறிந்த பெரியவர்கள் தாலந்து மிக்கவர்கள் அநேகர் இருக்கிறார்களே. அவர்களைத் தெரிந்து கொள்ளக் கூடாதா? நான், நீர் சொல்வதற்குக் கீழ்படிந்து சென்றாலும் நான் சொல்வதை அவர்கள் கேட்க மாட்டார்களே,'' என்று யூன் தேவனிடம் முறையிட்டார். அப்பொழுது தேவன் ஒரு முக்கியமான காரியத்தைச் சொன்னார். “நீ என்னுடைய முதல் தெரிந்தெடுப்பு என்று எண்ணாதே. அநேகரிடத்தில் இதை நான் சொன்னேன். ஆனால் யாரும் இதற்குக் கீழ்ப்படியவில்லை. நீயும்

கீழ்ப்படியாவிட்டால் நான் இன்னொருவனைத்தான் தேட வேண்டும்" என்று சொன்னதைக் கேட்டவுடன் யூன் நிலவரத்தை விளங்கிக் கொண்டார். இனிமேல் தேவனுடைய வார்த்தைக்குச் சாக்குப்போக்கு களைச் சொல்லாமல் அவர் சொன்னதைச் செய்யவேண்டும் என்பதை யூன் உணர்ந்து கொண்டார்.

யூன், சீனாவிலுள்ள மிகப்பெரிய வீட்டு சபை இயக்கத்தின் (**HOUSE CHURCH MOVEMENT**) தலைவர்களைப்போய் சந்தித்தார். ஆனாலும் அவரவர்கள் மற்ற சபைகள் மீது கொண்டுள்ள எண்ணங்களை மாற்றுவதாகத் தெரியவில்லை. "ஆண்டவரே, ஒவ்வொரு கூட்டத்தாரும் மற்றவர்களை 'தவறான சபை மரபின் கூட்டத்தார்' என்றுதான் குற்றம் சாட்டு கிறார்களே தவிர இணைந்து வருவதற்கு எந்தவகையிலேனும் இடம் கொடுக்க மறுக்கிறார்களே!" என்று தேவனிடத்தில் முறையிட்டார். ஆனாலும் யூன் தன்னுடைய முயற்சியை விடாமல் தலைவர்களையெல்லாம் மீண்டும் மீண்டும் போய் சந்தித்தார். அதே வேளையில் தேவன் அந்த தலைவர்களோடும் பேசினார். அதன் விளைவாகக் குறுகிய காலத்திற் குள்ளாகவே ஒரு பெரிய ஒருங்கிணைப்பின் வேலை துவங்கி ஒருங்கிணைப்பு சாத்திய மாயிற்று. அந்த ஒருங்கிணைப்பின் நாளில் தேவன் யூனுக்கு ஒரு பாடலைக் கொடுத்திருந்தார். யூன் மிக உருக்கமாக அந்தப்பாடலைப் பாடினார். பாடலைக் கேட்ட அனைவரும் அழ ஆரம்பித்துவிட்டனர். யூனோடு இணைந்து கண்ணீரோடே அந்தப் பாடலைப் பாடினார்கள். அவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக மாறினார்கள்.

யூனுடைய வாழ்க்கையில் 1996–ஆம் ஆண்டு மிகமுக்கிய மான ஆண்டாகும். அந்த ஆண்டில் வீட்டுச் சபைகள் அனைத்தும் ஒன்றாக்கப்பட வேண்டும் என்பது மாத்திரமல்ல முழுச் சீனாவிலும் ஒருங்கிணைக்கப்பட்ட சுவிசேஷப்பணி தீவிரப்படுத்தப்படவேண்டுமென்று அந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1996 நவம்பர் மாதம் எல்லா தலைவர்

களும் ஒரே மனதுடன் ஒன்று கூடினார்கள். அதற்கான வழிமுறைகளை ஆலோசித்தனர். மீண்டும் அதே மாதத்தில் தலைவர்கள் கூடினார்கள். அதில் அவர்களது ஐக்கியத்திற்கு "சீனீம்" (SINIM) என்று ஏசாயா 49:12–ல் சொல்லப்பட்டிருப் பதின் அடிப்படையில் பெயரிட்டனர். ("இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்; இதோ, அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள்; இவர்கள் சீனீம் தேசத்திலு மிருந்து வருவார்கள் என்கிறார்"). சீனீம் என்ற சொல் சீனா தேசத்தைக் குறிக்கும் சொல் என்று கருதுகிறார்கள். 1997–ல் மீண்டும் கூடினார்கள். அப்பொழுது அந்த புதிய ஐக்கியத்திற்கு "சீனீம் ஐக்கியம்" (SINIM FELLOWSHIP) என்று பெயரிட் டனர். அந்த ஐக்கிய இயக்கத்திற்கு யூன் தலைவராகவும், ஸு யூன் டெஸ் (XU YUN TZE) செயலாளராகவும் நியமிக்கப் பட்டனர். சகோதரர் ஸு அதற்கு முன்பு "மறுபடியும் பிறந்தோரின் இயக்கத்தின்" (BORN AGAIN MOVEMENT) தலைவராக இருந்தார். அந்த சபைதான் சீனாவிலே மிகப் பெரிய சபையாக இருந்தது. மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் "சீனீம் ஐக்கியம்" மிகப் பெரிதாக வளர்ந்தது. லட்சக்கணக்கான மக்கள் இதில் இணைந்து கொண்டனர்.

# 7

## உபத்திரவ காலம்

1997–ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒருநாள் சீனாவிலுள்ள மூன்று கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் ஆறுபேரும் ஒரு இடத்தில் கூடினார்கள். பொது பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த காவலர்கள் அவர்கள் கூடியிருந்த இரண்டாவது மாடியிலிருந்த அறைக்குள் திடீரென்று நுழைந்துவிட்டனர். அவர்கள் யூனையும் மற்றவர்களையும் பிடித்துக் கைது செய்வதற்குள் வேகமாக ஜன்னல் பக்கம் ஓடி ஜன்னல் வழியாக கீழே குதித்து விட்டார். ஆனால் காவலர்கள் அந்தக் கட்டிடத்தை சுற்றிவளைந்து நின்றபடியால் இரண்டு கால்களிலும் பலத்த இரத்தக்காயங்கள் பட்ட நிலையில் பிடிபட்டார். கைது செய்யப்பட்ட நேரத்தில் அவர் மிகவும் மோசமாக நடத்தப்பட்டார். யூனும் மற்றவர்களும் கைது செய்யப்பட்ட சம்பவத்தை ஒளிப்பதிவு செய்து சீனா முழுவதும் தொலைக்காட்சியில் காட்டினார்கள். அதைத் தொடர்ந்து பத்திரிக்கைகளின் செய்திகள் வெளியிட்டனர். யூனுடைய மாமனார், மாமியார் மற்றும் உறவினர்களும் தொலைகாட்சியில் யூன் நடக்கமுடியாமல் மிகுந்த சிரமத்தோடு நடந்து செல்வதைக் கண்டனர். கைது செய்யப்பட்ட அனைவரையும் மிகுந்த பாதுகாப்பு அமைப்புள்ள சிறைக்குக் கொண்டு சென்றனர். இந்த முறை யூன் தப்பிக்கவே முடியாது. உயிரோடு திரும்பி வருவதே சந்தேகம் என மக்கள் கருதினார்கள். யூனையும் மற்றவர்களையும் சிறைக்குக் கொண்டு சென்ற பின் யூனை மட்டும் துன்புறுத்தும் அறைக்கு (TORTURE ROOM) எடுத்துச் சென்றனர். யூன் இந்த முறை தப்பித்துக்கொள்ளாதிருக்கும்படி

யூனுடைய இரண்டு கால்களையும் நீட்டி உட்காரவைத்து மரச்சுத்தியலால் கரண்டைக்கு மேல் தொடர்ந்து அடித்து இரண்டு கால்களிலும் எலும்பை நொறுக்கிவிட்டனர். பாதங்கள் சதைகளினால் மட்டும் தொங்கிக் கொண்டிருப்பது போல் செய்துவிட்டனர்.

யூனைத் தனிச்சிறையில் போட்டுவிட்டு மற்றவர்களை ஒரே சிறைஅறையில் வைத்தனர். யூன் பலமுறை சிறையிலிருந்து தப்பித்துவிட்டபடியால் அதைத் தடுப்பதற்கு அவரைத் தனிச் சிறையில் வைத்திருப்பதாக சிறை அதிகாரிகள் சொன்னார்கள். அந்த சிறை அறைக்கு இரும்புக் கதவு போடப்பட்டிருந்தது. சிறை அலுவலர்கள் இனி தப்பித்துச் செல்வதை நினைத்துப் பார்ப்பாயா? என்று அற்பமாகக் கேட்டனர். கால்களில் தாங்கமுடியாத வேதனையின் மத்தியிலும் யூன் "என் ஆண்டவர் எனக்கு வாய்ப்புகளைத் திறந்து தருவாரானால் நான் தப்பித்துக் கொள்வேன்" என்றார். "உனக்கு எந்த வழியும் திறக்கப் போவதில்லை, 24 மணி நேரமும் இந்தக் கதவு பூட்டியே இருக்கும்" என்று சவால் விடுப்பது போன்று பதிலளித்தனர்.

யூனிருந்த சிறை அறையில் கழிவறை வசதி கிடையாது, கழிவறைக்கும், துன்புறுத்தும் அறைக்கும் அவரைத் தூக்கிச் செல்வதற்கு சிறையிலிருக்கும் இரண்டு கிறிஸ்தவ சகோதரர் களை நியமித்திருந்தனர். ஏனென்றால் யூனுக்கு நடக்க முடியாது, நிற்கக் கூட முடியாது. இவ்வளவு கொடிய வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் அந்த வேளை யிலும்கூட துன்புறுத்தும் அறைக்கு எடுத்துச் சென்று இரக்க மின்றி அவரை அடித்துக் கொடுமைப்படுத்துவார்கள். யூனை சிறைவைத்திருந்த அறை மூன்றாவது மாடியிலிருந்தது. துன்புறுத்தும் அறை தரைத்தளத்திலிருந்தது. ஆகவே ஒவ் வொறு முறையும் யூனை அங்கிருந்து சுமந்து கொண்டுவந்து பின்னர் சுமந்து கொண்டே சென்று அவரது அறையில் வைப் பார்கள்.

சிறையிலிருக்கும் விசுவாசிகள் சிறிது நேரமேனும் ஒன்றாகக் கூடி தேவனை ஆராதிக்க முயற்சிப்பார்கள். ஆனால் அதற்கான வாய்ப்பே கிடைக்காது. ஆனால் குழியலறையில் மாத்திரம் அவர்கள் ஒன்று சேரும் வாய்ப்பு கிடைக்கும். அப்பொழுது அவர்கள் தேவனை சேர்ந்து துதிப்பார்கள். யூனுக்கு ஒருநாள் சிறையிலிருந்த மற்றொரு கிறிஸ்தவ தலைவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் "நீங்கள் ஏன் தப்பித்துச் செல்லக்கூடாது?" என்று கேட்டார். "நீங்கள் தப்பிக்க முடியும், உங்களால் ஓட முடியும்" என்று சொன்னார். "என்னுடைய கால்களைப்பாருங்கள். நான் எப்படி ஓட முடியும். இரும்புக் கதவுகள் உள்ள சிறையில் நாமிருக்கிறோம். தப்புவதற்கு வழியே இல்லையே" என்று யூன் பரிதாபமாகப் பதிலளித்தார். ஒருநாள் அந்த கிறிஸ்தவ தலைவர் கூறிய அந்த காரியத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டார். "என்னால் முடியாது, இரும்புக் கதவுகள் இருக்கின்றன என்று ஏன் நினைக்க வேண்டும்? தேவன் ஒரு காரியத்தைக் கூறுவாரானால் அதை நண்பர்களைக் கூட்டி விவாதம் செய்வதோ, சூழ்நிலைகள் சாதகமாக இல்லை என்று யோசிப்பதோ சரியானதல்ல. தேவன் கூறியதற்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டியதுதான் காரியம்" என்பதை அவர் திட்டமாக விளங்கிக் கொண்டார்.

மே மாதம், ஒரு மாலை உணவு வேளையில் யூனுடைய தனிச் சிறையிலிருந்து வெளியே எடுத்து மற்ற கைதிகளோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடும் தருணம் கிடைத்தது. அப்பொழுது குழியலறையில் முன்பு ஒருநாள் சந்தித்த போது தப்பித்துச் செல்லும்படி ஆலோசனை கூறிய அதே தலைவரைச் சந்தித்தார். அவர் என் பக்கமாக வந்து குனிந்து என்னுடைய காதில் மெல்லிய குரலில் "இப்பொழுதே நீங்கள் தப்பித்துச் செல்லலாம்" என்றார். அதற்கு யூன் "நான் தப்பிக்க முடியும் என்று நினைக்கிற நீங்கள் ஏன் தப்பிக்கக் கூடாது? உங்கள் கால்களுக்கு எந்தப் பிரச்சனையு மில்லையே? அதோடு

உங்களுக்கு உதவி செய்ய உங்கள் சிறை அறையில் கிறிஸ்தவ சகோதரர்கள் இருக்கிறார்கள். ஆனால் நான் தனிமையாக அல்லவா இருக்கிறேன்'' என்று சொன்னார். அதற்கு அவர் எனக்கு கட்டளையிடும் தோரணையில் ''உங்களுக்கு ஓட முடியும், தப்ப முடியும்'' என்று சொன்னார்.

அன்று இரவு தன் கால்களில் வேதனை தாங்கமுடியாத நிலையில் தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருந்தார் ஆனால், படுத்துக் கொண்டு கால்களை சிறிது சுவரில் சாய்த்து வைத்த நிலையில் அவருக்கு வேதனையிலிருந்து சிறிது இளைப்பாறுதலாக இருந்தது. அப்பொழுது ஜெபித்துக் கொண்டே இருந்தார். மீண்டும் ஒரு முறை ஆச்சரியமான வகையில் ஒரு சகோதரர் மூலமாக அவருக்கு ஒரு வேதாகமம் கிடைத்தது. அதைத் திறந்து படிக்க ஆரம்பித்தார். கம்யூனிஸ்ட் ஆட்சியிலிருந்த ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கிய வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். அவருடைய மனைவி ஒரு கிறிஸ்தவள். அவர் மூலமாக யூனுக்கு அந்த வேதாகமம் கிடைத்தது. அந்த அதிகாரி ஒரு நாள் தானிருந்த சிறை அறையில் ''நான் ஒரு பைபிள் வைத்திருக்கிறேன். யாருக்காவது வேண்டுமா?'' என்று கேட்டார். அங்கிருந்த கிறிஸ்தவ சகோதரர் தனக்கு வேண்டுமெனக்கேட்டு மிகுந்த மகிழ்ச்சியோடும் நன்றியோடும் வாங்கிக் கொண்டார். அதை தனக்கு வைத்துக்கொள்ள விரும்பினாலும் கூட மிகுந்த கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு தனிமையிலே இருக்கிற யூனுக்கு அது மிகுந்த ஆறுதலாக இருக்கும் என்று எண்ணினார்.

## எல்லா நம்பிக்கையும் போய்விட்டது.

யூன் எரேமியாவின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். 15,16 அதிகாரங்களுக்குத் திருப்பினார். அந்த இரண்டு அதிகாரங் களையும் படித்துக் கொண்டிருக்கும் பொழுது தேவனிடத்தில் முறையிட்டுக் கொண்டிருந்தார். தேவனிடத்தில் தன்னுடைய வயதான தாயார், மனைவி, இரண்டு பிள்ளைகள்

இவர்களை நினைப்பூட்டித் தன்னுடைய பரிதாபமான நிலையையும் கண்ணோக்கும்படி தேவனிடத்தில் முறையிட்டார். ஏரேமியாவைப் போல முறையிட்டார். "ஆண்டவரே, நான் கைது செய்யப்பட நீர் அனுமதித்துவிட்டீர். என்னுடைய மனைவியும் கைது செய்யப்பட நீர் அனுமதித்துவிட்டீர் (யூன் கைது செய்யப்பட்ட மூன்றாவது நாள் 100 பாஸ்டர்களையும் அவருடைய மனைவியையும் கைது செய்தனர்.) என்னுடைய வயதான தாயாரையும் என் மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் யார் கவனிப்பார்கள்?" தேவனிடத்தில் தன்னுடைய வழக்கை உண்மையோடு எடுத்து வைத்தார். "ஆண்டவரே, இந்த சூழ்நிலையிலிருந்து நீர் கூட என்னை விடுவிக்க முடியாதது போல் தோன்றுகிறதே".

இந்த நம்பிக்கையற்ற நிலவரம் காரணமாக சரீர பெலவீனத்தை விட தன்னுடைய மன உணர்ச்சிகள் அவரை மேற்கொண்டது. ஆண்டவரை நோக்கி அவர் கதற ஆரம்பித்தார். "ஆண்டவரே, என் கால்களைப் பாரும். என்னுடைய நம்பிக்கையெல்லாம் போய்விட்டதே, ஆண்டவரே, மேற்கேயும், தெற்கேயும் போய் என்னுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கி என்று நீர்தானே என்னை அழைத்தீர். ஆனால் நொறுக்கப்பட்ட கால்களோடு நான் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறேனே. நீர் என்னை ஏமாற்றி விட்டீரோ?" யூன் தன்னுடைய கண்கள் வீங்கும் அளவுக்குக் கதறி அழுதார். தரையில் விழுந்து கிடந்து தாங்கமுடியாத வேதனையோடு முறையிட்டுக் கொண்டேயிருந்தார். அப்பொழுது அவர் மிகத் தெளிவான ஒரு சத்தத்தைக் கேட்டார். "இதுவே உன் இரட்சிப்பின் நேரம்" என்பது தான் அந்த சத்தம். அதோடு மிகத் தெளிவான ஒரு தரிசனத்தையும் கண்டார். அந்த தரிசனத்தில் தன்னுடைய மனைவி சிறை அறைக்குள் பிரவேசிப்பதைக் கண்டார். அவள் அவரிடத்தில் வந்து மகிழ்ச்சியோடு பேசினார். யூனின் மீதிருந்த காயங்களைக் கழுவி சிகிச்சையளித்தாள். இந்தக் காட்சியை தத்ரூபமாகவேக் கண்டார். ஆனாலும் அவர் சிறை அறையில் இருப்பதையும் உணர்ந்தார். கதவு பூட்டப்பட்டிருக்கிறது.

உள்ளேயிருந்த கதவைத் திறக்கவே முடியாது. யூன் தன்னுடைய மனைவியிடம் "நீ சிறையிலிருந்து எப்பொழுது விடுதலை ஆனாய்? என்று கேட்டார். "அதைப்பற்றி எல்லாம் கவலைப் படாதீர்கள். நான்தான் இப்பொழுது உங்களுடனே இருக்கி றேனே" என்று பதிலளித்தாள். அந்த நேரத்தில் யூன் தூங்க வில்லை. ஜெபத்தில்தான் இருந்தார். அப்பொழுது தான் இந்த தரிசனத்தைக் கண்டார்.

# 8

# சிறையிலிருந்து ஆச்சரியமாகத் தப்பிச் செல்லுதல்

1997 மே மாதம் 5–ம் நாள் காலை 7:47–க்கு தனிச்சிறையில் தரையில் படுத்திருந்த யூன் மிகுந்த சிரமத் தோடு எழுந்து இரும்புக் கதவைத் தட்டி தான் கழிவறைக்குச் செல்ல உதவி செய்யும்படி காவலரைக் கேட்டுக் கொண்டார். காவலர் கதவைத் திறந்தார். கழிவறைக்குச் செல்ல யூனுக்கு உதவி செய்தார். அந்த கட்டிடத்தின் வராந்தாவில் கடைசியிலி ருக்கும் கழிவறைக்கு காவலர் யூனைக் கூட்டிச் சென்று கொண்டிருக்கும் போது முன்பு யூனைச் சந்தித்து சிறையி லிருந்து தப்பித்துச் செல்ல ஆலோசனை கூறிய கிறிஸ்தவ தலைவர் இருந்த சிறை அறையைத் தாண்டிச் செல்லும் பொழுது அவர் காவலரை அழைத்து தன்னையும் கழிவறைக்குக் கூட்டிச் செல்லும்படி கேட்டார். உடனே காவலர் அந்த சிறை அறையை யும் திறந்து அவரையும் சேர்த்து அழைத்துச் சென்றார். கழிவறைக்குள் சென்றதும் அந்தத் தலைவர் மூன்றாவது முறையாக “இப்பொழுது நீங்கள் தப்பிச் செல்லலாமே” என்றார்.

கழிவறையில் இருவரும் பேசிக் கொண்டனர். பின்னர் இருவருமே அவரவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். யூன் தனது ஞாபகத்திலிருந்து துண்டுத்தாள்களில் யோவான் சுவிசேஷம் முழுவதையுமே எழுதியிருந்தார். அந்த தாள்களை யெல்லாம் சேகரித்து தனது இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டார். “தேவன் இன்று என்னை இங்கிருந்து தப்பிக்கத்

தூண்டுகிறார். ஆனால் ஒருவேளை தப்பிக்கும்போது ஒருவேளை நான் சுட்டுக் கொல்லப்படலாம். அப்படியே கொல்லப்பட்டாலும் நான் பரலோகத்திற்கு செல்ல ஆயத்தமாக இருக்கிறேன்" என்று அவருக்குள் சொல்லிக் கொண்டார். ஏனெனில் சுட்டுக் கொல்லப்பட்டுவிடுவோம் என்ற எண்ணம் அவர் சிந்தையில் வந்தது.

அப்பொழுது நேரம் காலை 8 மணி தப்பிப்பதற்கு அது மிக மோசமான நேரம். ஏனெனில் சிறைக் காவலர்கள் ஆங்காங்கே நடமாடிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் அவரவர்கள் இடத்தில் விழிப்பாக நிற்பார்கள். தப்பிப்பது என்பது அந்த நேரத்தில் முடியாத காரியம். தேவனுடைய விருப்பத்திற்கு யூன் கீழ்ப்படியத் தீர்மானித்தார். தீர்மானத்தோடு அவர் எழுந்து நின்றார். அவருடைய கால்கள் நொறுக்கப்பட்டபின் முதல் முறையாக கால்களில் கொஞ்சமேனும் வேதனையே இல்லாததை உணர்ந்தார். இரண்டு கால்களும் முற்றுமாய் குணமாகி விட்டன. இதுதான் தேவன் அருளிய நேரம் என்பதை உணர்ந்தார். சிறை அறையின் கதவை நோக்கி நடந்தார். என்ன ஆச்சரியம் இரும்புக் கதவை யாரோ திறந்துவிட்டது போலத் திறந்தது. ஆனால் அங்கு சிறைக்காவலர் இல்லை. தனிச்சிறைப் பகுதியிலிருந்து சிறை வளாகத்திலுள்ள திறந்த வெளிக்கு வரவேண்டுமானால் மற்றுமொரு கதவு இருக்கிறது. அந்தக் கதவை நோக்கி யூன் வேகமாக நடந்து சென்றார். அந்தக் கதவும் சிறைக்காவலர்கள் திறக்காமலே தானாகத் திறந்தது. இப்பொழுது சிறை வளாகத்தின் திறந்த வெளிக்கு வந்துவிட்டார். இப்பொழுது பிரதான வாசலை நோக்கிச் செல்ல வேண்டும். அங்கு சிறைக்காவலர்கள் அநேகர் இருப்பார்கள். யூன் பிரதான வாசலை நோக்கிச் சென்றார். அங்கு நடமாடிக் கொண்டிருந்த சில சிறைக் காவலர்கள் யூனைப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் யூனைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன்னைப் பார்த்தும் கூட ஒன்றும் செய்யாதிருக்கிறார்களே என்று யோசித்தார். ஆண்டவர் அவர்களுடைய கண்களைக் குருடாக்கிவிட்டாரா? யாவும் மிகவும் விநோதமாக இருந்தது.

பிரதான வாசலுக்குச் சென்றடைவதற்கு சற்று முன்பு ஒரு கிறிஸ்தவ சகோதரர் அப்பொழுது சிறைக்குள் வந்தார். "நான் இப்பொழுதுதான் உள்ளே வருகிறேன்" என்றார். யூன் "நான் வெளியே செல்கிறேன்" என்று சத்தமாகவே சொன்னார். ஆனால் யாரும் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. பிரதான வாசலுக்கு முன்பு ஒரு சிறிய தோட்டமிருந்தது. தோட்டத்தின் முன்பக்கமுள்ள தண்ணீர் குழாயில் சிறைக் காவலர் ஒருவர் கைகளைக் கழுவிக் கொண்டு நின்றார். அவரது அருகாமையிலுள்ள நடைபாதை வழியாகத்தான் பிரதான வாசலுக்குச் செல்ல வேண்டும். ஆனால் அந்த சிறைக்காவலர் யூனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. திடீரென்று அங்கிருந்த ஒரு அறையின் உட்பகுதி யிலிருந்து தொலைபேசி அழைப்பு மணி அடித்தது. உடனே அந்த சிறைக் காவலர் அவசர அவசரமாக அறைக்குள் போனார். யூன் இப்பொழுது எந்தப்பய உணர்வுமின்றி பிரதான வாசலை நோக்கி நடந்தார்.

பிரதான வாசலைச் சென்றடைந்ததும் அங்கிருந்த சிறைக்காவலர் ஒருவர் யூனை உற்று நோக்கினார். ஏதோ சொல்லவும் முயற்சித்தார். ஆனால் எதுவுமே பேசாமல் யூனைக் கண்டு கொள்ளாமலே பிரதான வாசலைத் திறந்துவிட்டார். யூன் இப்பொழுது சிறையைவிட்டு வெளியே வந்துவிட்டார். சிறைக்கு வெளியேயும் யூனை அறிந்த அநேக சிறைக் காவலர்கள் நின்று கொண்டிருந்தனர். ஆனால் யாரும் யூனை ஒரு கேள்வி கூடக் கேட்கவில்லை. அவர்களையும் கடந்து நகரத்திற்குள் செல்லும் ரோட்டிற்கு வந்துவிட்டார்.

சரியான நேரத்தில் ஒரு வாடகைக் கார் வந்ததைக் கவனித்தார். யூனைக் கண்டதும் அவர்முன்பாக வந்து நிறுத்தி "நீங்கள் எங்கே செல்ல வேண்டும்?" என்று டிரைவர் கேட்டார். அவர் மிகுந்த அவசரமாக இருந்ததுபோல் தெரிந்தது. அந்நகரிலுள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரியின் முகவரியைச் சொன்னார். அந்த முகவரி தனக்கு நன்றாகத் தெரியும் என்பது போல டிரைவர் எதுவும் கேட்டுக் கொள்ளாமலேயே சரியாக அந்த வீட்டின் முன் கொண்டுபோய் நிறுத்தினார். யூன் இறங்கி முதல்மாடிக்குச் சென்று கதவைத் தட்டினார். அவரிடத்தில் பணம் இல்லாததால் டாக்சிவாடகைக்கு அந்த வீட்டில்தான்

வாங்கிக் கொடுக்க வேண்டும். யூனின் சத்தத்தைக் கேட்டதும் உள்ளே இருப்பவர்கள் பயந்து கதவைத் திறக்கவில்லை. நீண்ட நேரம் தொடர்ந்து கதவைத் தட்டியபின் கிறிஸ்தவ சகோதரியின் இரண்டு பெண்பிள்ளைகள் கதவை லேசாகத் திறந்து பார்த்தனர். அந்த சகோதரி அப்பொழுது வீட்டில் இல்லை. யூன் இருந்த நிலவரத்தைப் பார்த்து அவ்விரண்டு பிள்ளைகளும் அழ ஆரம்பித்துவிட்டனர். ஆனாலும் கதவைத் திறக்கவில்லை. “சிறையிலிருந்து விடுதலையாகிவிட்டீர்களா?” என்று கேட்டார்கள். “என் பிதா என்னை வெளியே வரச் சொன்னார், வெளியே வந்துவிட்டேன். இப்பொழுது டாக்சி வாடகை கொடுப்பதற்கு பணம் வேண்டும்” என்று கேட்டார். அவர்கள் கொடுத்தார்கள். யூன் இறங்கி வந்து டாக்சி டிரைவரிடம் பணம் கொடுத்தனுப்பினார்.

யூன் மீண்டும் முதல் மாடிக்குச் சென்றார். அப்பொழுது கதவைத் திறந்து யூனை உள்ளே அழைத்தார்கள். “எங்கள் அம்மா உங்களுக்காக உபவாசமிருந்து ஜெபிக்கிறார்கள். ஒருவாரத்திற்குள்ளாக யூன் விடுதலையாகப்போகிறார். விடுதலையாகி முதலாவது நமது வீட்டிற்குத்தான் வருவார். அவர் தங்குவதற்கு பத்திரமான ஒரு வீட்டை ஒழுங்கு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் உங்களைப் பார்த்ததும் எங்களுக்கு கொஞ்சமேனும் என்ன செய்வதென்றே தெரியவில்லை” என்று சொன்னார்கள். எனினும் அவர் தங்கியிருக்க ஒழுங்கு செய்யப்பட்ட வீட்டின் முகவரியைக் கொடுத்தார்கள். “வேறு யாருக்கும் இந்த முகவரி தெரியாது. நீங்கள் தாமதமின்றி அந்த வீட்டிற்குச் செல்ல வேண்டும்” என்று கூறினார்கள். அவர் அதை வாங்கிக் கொண்டு குறுக்கு வழியாக ஆள் நடமாட்டம் அதிகமில்லாத தெருக்கள் வழியாகச் சென்று அந்த வீட்டிற்குப் போய் சேர்ந்தார். அதற்குள்ளாகவே நகர் முழுவதும் யூன் தப்பித்து விட்டதைக் குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டு சாலைத் தடுப்புகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் யூன் அந்த வீட்டிற்குள் நுழைந்த மாத்திரத்தில் வானமே திறந்து கொட்டப்பட்டது போல் ஒரு பெருமழை சொரிந்தது.

ஆகவே யூனை பிடிப்பதற்கு எடுத்த முயற்சிகள் கட்டாயமாகத் தடைப்பட்டிருக்க வேண்டும். யூன் அப்படியொரு பெருமழையைப் பார்த்ததில்லை. யூனை தேடுவதற்கு இராணுவம் வரவழைக்கப் பட்டது. நகரத்தை விட்டு வெளியே செல்லும் ஒவ்வொரு வாகனங்களையும், ரயிலையும், விமானத்தையும் யாவையுமே சோதனை செய்ய ஆரம்பித்தார்கள். வெளியே செல்லும் வாகனங்கள் தவிரவும் ஆங்காங்கே நிற்கிற வாகனங்களையும் சோதனை செய்தனர். ஆனால் அதற்குள்ளாக யூன் பாதுகாப் பான இடம்போய் சேர்ந்துவிட்டார்.

அவர் சிறையைவிட்டு வெளியே வரும்பொழுது தேவன் அவருக்கு "திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக் கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்ற வசனத்தைக் கொடுத்திருந்தார். சிறைக்குச் செல்வதற்கு சில ஆண்டு களுக்கு முன்பேயும் அதே வசனத்தை கொடுத்திருந்தார். சிறைக்கு வெளியே தப்பிப்பதற்கு காலடி எடுத்து வைக்கும் பொழுது சுட்டுக்கொல்லப்படலாம் அல்லது பிடிக்கப்பட்டு 10 அல்லது 12 ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய திருக்கும் என்று நினைத்தார். ஆனால் தேவன் மிகப்பெரிய அற்புதத்தைச் செய்தார். தேவன் அவரை மரணப்பொறிக்கு நேராக நடத்தவில்லை. கதவுகள் திறந்தவிதத்தையெல்லாம் எண்ணி எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டேயி ருந்தார். அவரது ஆவியில் ஒரு பெரிய மகிழ்ச்சியை அனுபவித்தார்.

எதிர்பாராத மிகப்பெரிய அற்புதத்தை தேவன் தன்னுடைய வாழ்க்கையில் செய்ததை எண்ணி அவருடைய நன்றியுள்ள இருதயம் பொங்கிவழிந்தது. சிறையிலிருந்து தப்பியதை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தார். அதே சமயத்தில் தன்னோடு கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் சகோதரர்களை நினைக்கும் போது அவரது இருதயம் துக்கத்தால் பாரமடைந்தது. ஆனால் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்தபின் அவர்களைப் போய்

சந்தித்து தான் சிறையிலிருந்து தப்பிப்பதற்கு தேவ வெளிப்படுத்தலையும் கூறி தனக்காக ஜெபித்தமைக்கும் நன்றி கூறினார். நீங்கள் சிறையிலிருந்து தப்பித்தது மனித கரங்களால் சாத்தியமானதே அல்ல. தேவனே இரும்புக் கதவுகளைத் திறந்தார். இது முற்றிலும் தேவ செயலே என்று பதிலளித்தனர். (யூனோடு கைது செய்யப்பட்ட மூவரில் ஒரு சகோதரர் யூனை வெளியே கொண்டுவர, கழிவறைக்குக் கூட்டிச் செல்ல உதவிசெய்ய நியமிக்கப்பட்டிருந்தார். மற்ற ஒரு சகோதரர் யூன் சிறையை விட்டுத் தப்பிச் சென்றதைக் கண்ணாரக் கண்டவர்).

# 9

## உலகிற்கு ஒரு தூதுவர்

1997–ஆம் ஆண்டு மே மாதம் ஆண்டவர் யூனை சிறையிலிருந்து விடுவித்து கொண்டுவந்தபின், அதை அடுத்து தேவனுடைய வழிநடத்து தலையும் நோக்கத்தையும் கேட்டு அந்த பாதுகாப்பான வீட்டிலேயே ஒருவாரத்திற்கு மேலாக ஜெபத்தில் காத்திருந்தார். அங்கிருந்து வேறு ஒரு இடத்திற்குச் செல்ல தேவன் வழிநடத்தினார். அந்த இடத்திற்குச் சென்றபின் அவரோடு இணைந்து ஊழியம் செய்த மற்றுமொரு பாஸ்டருடன் சேர்ந்து ஜெபித்து இனி செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்துத் திட்டமிட்டனர். ஒரு நாள் இருவரும் ஜெபித்து முடித்த பின் அந்த பாஸ்டர் “சீனாவிலுள்ள வீட்டுச் சபை இயக்கம் மூலமாக உங்களது சாட்சி சீனா முழுவதும் பரவுவதற்கு தேவன் உங்களுக்குத் தருணங்களைத் தரப்போகிறார். வீட்டுச் சபை இயக்கத்தின் மூலமாக அது உலகம் முழுவதும் பரவப்போகிறது. நீங்கள் உலகத்திற்கே ஒரு தூதுவராக இருப்பீர்கள்” என்று சொன்னார்.

மனித கண்ணோட்டத்தில் ஒரு வேளை இது முற்றுமாய் மிஞ்சிய ஆர்வம் காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம்; சாத்தியமாகாததாய் இருக்கலாம். ஆனால் அதுவே தேவ சித்தமாக இருக்குமானால் அவரையும் அவரது திட்டங்களையும் தடுத்து நிறுத்த எந்த வல்லமை யினாலும், அதிகாரங் களினாலும் முடியாது. தேவன் யூனுடைய ஆவியில் பேச ஆரம்பித்தார். “சாத்தியமாகாதவற்றை நான் சாத்தியமாக்கு வேன்” என்று பேசினார்.

## குடும்ப வாழ்க்கையின் கடினமான பாதை

யூனின் குடும்ப வாழ்க்கை கஷ்டங்களும் வேதனைகளும் நிறைந்த பாதையாக இருந்தது. சிறைவாழ்க்கை காரணமாக நீண்ட பிரிவினைகள் வேதனைகளைக் கூட்டினாலும் யூனுக்கும் அவரது மனைவிக்கும் ஆழமான அன்பு அடித்தளமாக இருந்தது. எந்த சூழ்நிலையிலும் அதில் குறைவு ஏற்படவே இல்லை. ஏனெனில் இருவருமே தங்களது வாழ்க்கையை தேவனுடைய ஊழியத்தில் ஊற்றிவிட்டனர்.

ஒரு முறை யூன் மிகக் கடினமான ஒரு சந்தர்பத்தைச் சந்தித்தார். சிறையிலிருந்த சமயம் ஒரு நாள் அவரது மனைவியும் அவருடைய பிள்ளை களும் அவரைப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்களது நிலவரத்தைப் பார்த்து கண் கலங்கிவிட்டார். பிள்ளைகள் மிகவும் மெலிந்து போய் கிழிந்த ஷூவும் கிழிந்த உடைகளையும் அணிந்திருந்ததைப் பார்த்து மனம் நொந்துபோனார். வாய்விட்டு அழுதுவிட்டார். பிள்ளை களுக்கு உதவி செய்ய எந்த வகையிலும் முடியாத சூழ்நிலை. பள்ளிக்கு செலுத்த வேண்டிய பணத்தை கட்டமுடியாத சூழ்நிலையில் பிள்ளைகள் பள்ளிக்கு அனுப்பப்படாதிருந் தார்கள். அவர்களுடைய வாழ்க்கையே பெரும் போராட்டத்தில் இருந்தது. ஏனெனில் சிறையிலிருக்கும் நாட்களும் தலைமறை வாயிருக்கும் காலங்களுந்தான் அதிகமாக இருந்தது. யூன் ஒரு இடத்தில், அவர் மனைவி ஒரு இடத்தில், பிள்ளைகள் மற்றுமொரு இடத்தில் இப்படியாகப் பிரிந்து வாழ்ந்த நீண்ட காலங்கள் உண்டு.

யூன் தன்னுடைய குடும்பத்திற்காக மாத்திரமல்ல, கிறிஸ்தவ ஊழியக்காரர்களின் குடும்பக்காரியங்கள் சம்பந்த மாக மிகவும் கரிசனையோடிருப்பார். சீனாவிலுள்ள சபைத் தலைவர்கள் சிறையிலிருக்கும் பாஸ்டர்களுடைய குடும்பத் தேவைகளைக் கவனிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறார்கள்.

## இலட்சக்கணக்கான விசுவாசிகளைத் திரட்டுவது.

1990–ல் சகோதரர் யூன் தலைமையிலான லிங் அன் இயக்கம் சீனாவில் 10 லட்சம் உறுப்பினர்கள் கொண்ட சபையாக மாறிற்று. தற்பொழுது அரசு, சபைக்கு விரோதமாகக் கொடிய நடவடிக்கை எடுத்தாலும், உபத்திரவங்கள் தொடர்ந் தாலும் வெடித்துப் பரவுவதுபோல மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இப்பொழுது 10 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர்.

சகோதரர் யூன் சீனாவின் வீட்டுச் சபை இயக்கத்தின் முன்னணித் தலைவராகச் செயலாற்றி வருகிறார். ஆகவே பொதுபாதுகாப்பு பிரிவைச் (PSB) சேர்ந்த காவலர்கள் இந்த "பரலோக மனிதனை" எப்பொழுது சிக்கவைத்து சிறையிலடைக் கலாம் என விழிப்போடு தேடிவருகின்றனர். கிறிஸ்தவ தலைவர்கள் கைது செய்யப்படும் வேளைகளிலெல்லாம் "பரலோக மனிதன் எங்கே இருக்கிறான்?" என்பதை கேட்கின்றனர்.

சீனிம் தலைவர்கள் கிட்டத்தட்ட அனைவருமே கைது செய்யப்பட்டாலும் தற்பொழுது யூன் மாத்திரம் வெளியே இருந்து வல்லமையாகச் செயல்படுகிறார். இந்த சூழ்நிலையில் ஒவ்வொரு சுவிசேஷக் குழுவினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து இசைவாய் செயல்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாதையில் செல்வதற்கு அசைவில்லாத தீர்மான முள்ளவர்களாயிருக்கின்றனர். "சீனா கிறிஸ்துவுக்கே" என்பதே அவர்களது இதயக் குரலாக இருக்கிறது.

## அடுத்து என்ன?

சகோதரர் யூனுடைய வாழ்க்கையும் சீனாவின் சபை வரலாறும் ஒன்றுக்கொன்று இணைந்ததாயிருக்கிறது என்பதை

நான் விளங்கிக் கொண்டேன். என்னுடைய மேற்கத்திய சிந்தையோடும், இதயத்தோடும் சீனாவின் சபையின் பாதையைக் காண்பது எனக்குக் கடினமாகவே இருந்தது. ஆனாலும் அவர்கள் கடந்து செல்லும் பாதையைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனேன். நீங்களும் அதே உணர்வடைந் திருப்பீர்கள் என நம்புகிறேன். சீனாவின் சபை வரலாறை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் "அப்போஸ்தலர் நடபடிகள்" புத்தகத்தின் வெளிச்சத்தில் காணுவோமானால் அதை சரியாக விளங்கிக் கொள்ள முடியும்.

அடுத்து என்ன? என்பதுதான் நமக்கு முன்பாக உள்ள கேள்வி. தனிப்பட்ட முறையில் சீனாவிலுள்ள சகோதரர் களுக்கும், சகோதரி களுக்கும் எனக்கு ஒரு பொறுப்பு உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன். நாம் யாவருமே அந்தப் பொறுப்பை அறிந்திருக்கிறோம். அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதற்கு நாம் ஏதாவது உதவி செய்யலாம். நாம் அவர்கள் கடந்து செல்லுகிற பாதையை அறிந்து கொண்டு ஒன்றும் செய்யாமல் இருந்துவிட முடியாது. சகோதரர் யூனும் மற்றும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ ஊழியக்காரர்களும் தேவனுடைய ஊழியத்தை உண்மையோடு செய்யும்போது மிகக் கடினமான பாடுகள் வழியாக செல்கிறார்கள். நாம் அவர்களுக் காக ஊக்கமாக் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"உலகசேவை இயக்கம்" (WORLD SERVE MINISTRIES) சீனாவிற்கான திட்டத்தை (THE CHINA PROJECT) துவக்கியிருக்கிறது. சீனாவில் தலைமறைவாக இயங்கி வரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக உதவும் வகையில் தற்பொழுது இலட்சக்கணக்கான வேதாகமத்தைக் கொடுக்கி றோம். ஆனாலும் எங்களோடு இணைந்து செயல்பட அநேக நண்பர்கள் தேவை. தாராளமாக வேதாகமத்தை விநியோகிப் பதற்கும், 'சிறையிலிருக்கும் கிறிஸ்தவ போதகர்களின் குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளை சந்திப்பதற்கும் நண்பர்கள் தேவை.

சீனாவில் தலைமறைவாக இயங்கிவரும் சபைத் தலைவர்களும் உலக சேவை இயக்கத்தோடு உறவுகொண்டு செயல்பட ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் ஒரு குறிப்பிட்ட அமைப்பை முதன்மைப்படுத்துவதாக அல்லாமல் உண்மையாகவே சபைக்கு உதவும் வகையில் அமைய வேண்டுமென விரும்புகின்றனர். கிறிஸ்தவர்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்படுகிற ஒரு நாட்டில் அவர்களுடைய சூழ்நிலைகளையும் பாடுகளையும் விளங்கிக் கொண்டு நாம் செயல்படும்போது நம்முடைய செயல்திறன் மீதும், நோக்கங்களின் மீதும் அவர்களுக்கு ஒரு முழு நம்பிக்கையும் ஏற்பட வேண்டும்.

சீனாவிலுள்ள வீட்டு சபை இயக்கத் தலைவர்களோடு இணைந்து செயலாற்றும் சிறப்புரிமையை தேவன் எங்களுக்குத் தந்திருக்கிறபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். "பரலோக மனிதனோடும்" சீனாவின் சபையோடும் நாம் செயல்பட நீங்கள் எங்களோடு இணைந்து செயல்பட உங்களை அழைக்கிறோம். கிறிஸ்துவுக்கான இந்த அகண்ட தேசத்தை "இத்தேசம் கிறிஸ்துவுக்கே" என்று கூற எங்களோடு பங்காளர்களாக இணைந்து செயல்பட அழைக்கிறோம்.

டேவிட். G. ஹன்ட்
தலைவர், "உலகசேவை இயக்கம்"

# பரலோக மனிதன்

இது **'பரலோக மனிதன்'** என்று சொல்லப்படுகிற சகோதரர் யூன் அவர்களின் அற்புதமான உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு. சீனாவில் 30 முறைகளுக்கும் மேலாகக் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு மிகக் கொடிய சித்திரவதைகளை சகித்துக்கொண்ட சகோதரர் யூன், மிகத்தாழ்மையான ஒரு மனிதர். தன்னுடைய தகப்பனார் கொடிய வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலமாக அற்புத சுகத்தைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து யூன் தன்னுடைய வாழ்க்கையை 16 வயதிலேயே தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தார். 100 நாட்கள் உபவாசத்திலும் ஜெபத்திலும் காத்திருந்து ஆச்சரியமான வகையில் விலையேறப்பெற்ற **"பரலோக புத்தகத்தைப்"** பெற்றுக்கொண்டார். பெரும்பகுதியை உடனடியாக மனப்பாடம் செய்ய ஆரம்பித்தார். குறிப்பாக மத்தேயு சுவிசேஷம், அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் ஆகியவற்றை மனப்பாடம் செய்தார். அண்டைய கிராமங்களுக்குச் சென்று இந்த நற்சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற பற்றி எரியும் வாஞ்சையை தேவன் அவருக்குக் கொடுத்தார். அவருடைய 17-வது வயதில் படிப்பறிவில்லாத மிகச் சாதாரணமான விவசாய வேலைகள் பார்க்கிற இவர் சுமார் 2000-க்கும் மேற்பட்ட மக்களை தேவனிடத்தில் வழிநடத்தினார்.



இன்று அநேக ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்த அருமையான தேவனுடைய ஊழியக்காரர் விவரிக்க முடியாத சித்திரவதைகளைக் கண்டுத்தளராமலும் இயேசு கிறிஸ்துவுக்காகத் தைரியமாக நின்று தொடர்ந்து ஊழியம் செய்கிறார். சகோதரர் யூன் **"வீட்டு சபை இயக்கத்தின்"** (HOUSE CHURCH MOVEMENT) -ன் முன்னணித் தலைவராகயிருந்து செயல்பட்டு இலட்சக்கணக்கான விசுவாசிகளை தலைமையேற்று நடத்துகிறார். இந்த ஆச்சரியமான காரியங்களை வாசிக்கிற உங்களுக்கு இவை ஒரு சவாலாகவும் ஊக்கமூட்டுவதாகவும் நிச்சயமாக அமையும்.

WORD OF CHRIST
WOC
100/3, Nirmala Apartments,
Medavakkam Tank Road,
Kellys, Chennai - 600 010.
Phone : 26613242, 42640111